தர்மசக்கரம்















துன்மதி ௵ ஐப்பசி ௴ சக்கரம் 30 ஆரம் 10

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா

சேலம் ஸ்ரீ ஸாரதா கல்லூரியில்

மூன்று நாட்கள் சிறப்பு வழிபாடு

நவம்பர் மாதம் 21 சனி, 22 ஞாயிறு, 23 திங்கள்

சேலம் ஸ்ரீ ஸாரதா கல்லூரியில் நவம்பர் மீ 21, 22, 23 தேதிகளில் கீழ்க்கண்ட நிகழ்ச்சிமுறைப்படி சிறப்பு வழிபாடு நடைபெறும். நவம்பர் 21ம் தேதி சனிக்கிழமை 'ஓம் நமோ நாராயணாய' என்னும் மந்திரமும், 22ம் தேதி ஞாயிற்றுக்கிழமை சக்தி மந்திரமும், 23ம் தேதி திங்கட்கிழமை 'ஓம் நமசிவாய' என்னும் மந்திரமும் நாம அர்ச்சனையின்பொழுது ஜபத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதில் அன்பர்களும், தாய்மார்களும் மூன்று நாட்களிலுமோ அல்லது வசதிப்படும் நாட்களிலோ கலந்துகொள்ளலாம். தங்குவதற்கு இடவசதி தனித்தனியே அமைக்கப்பெறும்.

நிகழ்ச்சி முறை

காலை

5-45 மணி	முதல்	6-00 மணி	வரை	—	திருப்பள்ளி எழுச்சி
6-00	,,	7-00	,,	—	நாம அர்ச்சனை
7-00	,,	7-10	,,	—	தியானம்
7-30	,,			—	சிற்றுண்டி
9-00	,,	10-00	,,	—	வாசிப்பு-சத் சம்பாஷணை
11-00	,,	12-00	,,	—	நாம அர்ச்சனை
12-00	,,	12-10	,,	—	தியானம்
12-30	,,			—	நண்பகல் உணவு

மாலை

4-00 மணி	முதல்	4-30 மணி	வரை	—	சிற்றுண்டி
4-30	,,	5-00	,,	—	பஜனை
5-00	,,	6-00	,,	—	நாம அர்ச்சனை
6-00	,,	6-10	,,	—	தியானம்
6-30	,,	7-30	,,	—	சொற்பொழிவுகள்
7-30	,,	8-00	,,	—	கலாநிகழ்ச்சி
8-30	,,			—	இரவு உணவு

உணவுக்காக நாள் ஒன்றுக்கு ரூபாய் ஆறு வீதம் நேரில் செலுத்தலாம். கலந்துகொள்ள விரும்புபவர்கள் கலந்துகொள்ளும் நாட்களைக் கடிதத்தின் மூலம் காரியதரிசி, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சி ஜில்லா என்ற முகவரிக்கு முன்கூட்டியே தெரிவிப்பது உசிதம்.

இங்ஙனம்

சித்பவானந்த

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 30 | துன்மதி ஹூ ஐப்பசி மீ | ஆரம் 10

பொருளடக்கம்

வருட சந்தா:	உள்நாடு ரூ.	12-00	வெளிநாடு ரூ.	35-00
தனி இதழ்	,, ரூ.	1-25	,, ரூ.	3-00

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

புதுப்பித்துக்கொள்ள வேண்டிய சந்தாதாரர்களுக்கு சந்தாவை புதுப்பிக்கக்கோரி இரண்டு மாதங்கள் வேண்டுகோள் அனுப்பப்படுகிறது. அன்பர்கள் தங்கள் சந்தாவை புதுப்பித்துக்கொள்வதுடன் புதிய சந்தாதாரர்களையும் சேர்த்துத்தரக் கோருகிறோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்-ராமேஸ்வரம்

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 12ம் தேதி ஸ்ரீ ராமநவமி அன்று இம்மடாலயம் துவக்கப்பெற்றது. அன்றுமுதல் அங்கு மகேஸ்வரபூஜை முறையில் அன்னம் வழங்குதல் நடைபெற்று வருகிறது. ஆகஸ்ட் மாதம் எல்லா வேளைகளிலும் 1618 பேர் உணவு ஏற்றுக்கொண்டனர். அதற்கான உணவுச் செலவு ரூ. 3710-00. உண்டியல் மூலமும் அன்பர்கள் நேரில் தந்ததுமாக ஆகஸ்ட் மாதம் நன்கொடை வரவு ரூ. 1190-00. மூலதனமாக வைத்துக்கொண்டு வட்டியைமட்டும் செலவிடுமாறு ஆகஸ்ட் மாதம் வந்த தொகை ரூ. 1200-00. இம்மடாலயத்திற்கு தேவையாயுள்ள ஜலவசதி கக்கூஸ் வசதிக்கான கட்டட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகஸ்ட் மாதம் முடிய ஆகியுள்ள கட்டட செலவு ரூ. 75 276-14.

அந்தர்யோக விவரங்கள்

திருச்சி ஜில்லா—கரூரில் 18—10—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பசுபதிபாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசா வும் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

மதுரையில் 18—10—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்துணை மாதர் சங்கம், ஆனந்தாஸ்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

வடஆர்காடு ஜில்லா—வேலூரில் 18—10—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்

மதுரை ஜில்லா—தேவாரத்தில் 24—10—81 சனிக்கிழமை

இடம்: அருள்மிகு இராமலிங்க சௌடேஸ்வரி திருக்கோயில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

சேலத்தில் 1—11—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா கல்லூரியின் பிரார்த்தனைக் கொட்டகை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இராமநாதபுரம் ஜில்லா—பள்ளத்தூரில் 1—11—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா சேவாஸ்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—சிவத்தையாபுரத்தில் 1—11—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: முத்துமாலையம்மன் இந்து தொடக்கப்பள்ளி
நேரம்; காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நிவ்யானந்தர்

பெரியார் ஜில்லா—ஈரோட்டில் 8—11—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் சங்கம், பார்க்-ரோடு
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—வையம்பாளையத்தில் 8—11—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சுதந்திரம் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்; ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

[அட்டை 4-ம் பக்கம் பார்க்க]

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 30 | துன்மதி ஸ்ரீ ஐப்பசி மீ | ஆரம் 10

பிரார்த்தனை

सर्व-मङ्गल-माङ्गल्ये शिवे सर्वार्थ-साधिके ।
शरण्ये त्र्यंबके गौरि नारायणि नमोऽस्तुते ॥

ஸர்வ-மங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த-ஸாதிகே ।
சரண்யே த்ரயம்பகே கௌரி நாராயணி நமோऽஸ்துதே ॥

— தேவீஸ்தோத்ரம்

மங்களங்களிலெல்லாம் மங்களமானவளே, நலமே வடிவெடுத்தவளே, அனைத்தையும் சாதிப்பவளே, தஞ்சமளிப்பவளே, முக்கண் உடையவளே, பொன்னிறமானவளே, நாராயண சொருபமானவளே உனக்கு நமஸ்காரம்.

அஷ்ட சித்தியும்நல் அன்ப ருக்குஅருள
விருது கட்டியபொன் அன்னமே!
அண்ட கோடிபுகழ் காவை வாழும்அகி
லாண்ட நாயகிஎன் அம்மையே!

— *தாயுமானவர்*

அருள் விருந்து

நல்ல எண்ணம் மனதைப் பண்படுத்துகிறது.

அருளுக்குப் புறம்பானது ஆதரவற்றதாகிறது.

நலனை நடைமுறையில்கொண்டு வராதவன் தீமையை வளர்க்கிறான்.

இயற்கை பண்ணுகிற சிகிச்சைகள் யாவும் அருளைச் சார்ந்தவைகளாம்.

செடி நிலத்தில் வேர்பிடிப்பது போன்று நல்லான் அறநெறியில் வேர் பிடித்திருக்கட்டும்.

உள்ளத்தில் உறைந்திருக்கிற பேரன்போடு இணக்கம் பூணுபவன் எவ்வுயிரையும் புறக்கணிப்பதில்லை.

உயிர்களனைத்தும் பரமனிடத்திருந்து வந்தவைகள் எனக்கருதிச் சான்றோன் அவை யாவையும் போற்றுகிறான்.

தன்னைப்பற்றிக் கவலையுறுமளவு மனிதன் கீழ்மையுறுகிறான். தன்னை மறந்திருக்குமளவு அவன் மேன்மையுறுகிறான்.

மனிதன் விரும்பினால் இப்பொழுதே அவன் தன்னைக் கிருதயுகத்துக்குத் தகுதியுடையவனாக அமைத்துக்கொள்ளலாம்.

காலம் மனிதனைச் சதா விழுங்கிக்கொண்டிருக்கிறது. அக்காலத்தை நன்கு பயன்படுத்துபவனே அதை மீளுபவன் ஆகிறான்.

சமுதாயப் பிணக்குகள் யாவும் சமுதாயத்தின்மீது அன்பு வைத்திருப்பவனுடைய உள்ளத்தினின்று அகன்று போகின்றன.

தன்னுடைய எண்ணங்களையும் செயல்களையும் சீர்படுத்தாதவன் நூல்கள் பல கற்றிருந்தும் அவன் கல்லாதவனே ஆகின்றான்.

தனி உரிமைகளையும் சலுகைகளையும் வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளுபவன் அதிவிரைவில் சமுதாயத்துக்குத் தலைவன் ஆகிறான்.

வாணவேடிக்கை பார்க்க ஆயிரக்கணக்கான பேர் கூடுகின்றனர். மற்று உள்ளத்தினுள்ளே ஒளிரும் ஞான விளக்கைப் பயன்படுத்த முயல்பவனே மேலோன் ஆகிறான்.

இறைவா, யாண்டும் என் உள்ளத்தினுள் வீற்றிருந்துகொண்டு நீ எனக்கு நல்வழி காட்டியருள்கின்றாய். உன் அருளுக்கு இணங்காதிருக்குமளவு நான் வழிபிசகிப் போகிறவன் ஆகிறேன்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்ச தேவருக்கும் பக்தர்களுக்குமிடையில் சத்சம்பாஷணை நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

நரேந்திரன்: "கிரீஷ் சந்திரகோஷரிடத்து இப்பொழுது ஒரு பெரிய மாறுதல் வந்திருக்கிறது. உலக வியவஹாரங்களையெல்லாம் அவர் ஒதுக்கி வைத்திருக்கிறார். பரநாட்டத்திலேயே அவர் கருத்தைப் பெரிதும் செலுத்துகிறார்."

பரமஹம்சதேவர்: "அது மிக நன்று. ஆனால் கிரீஷ் என்னிடத்து வைத்திருக்கும் அன்புக்கு அறிகுறியாக என் மீது நிந்தாஸ்துதியை வாரிக்கொட்டுகிறான். அவன் கையாளும் பதப் பிரயோகங்களும் பாராட்டுதற்குரியவைகளல்ல. இம்முறையில் போற்றுதலையும் தூற்றுதலையும் இக்காலத்தில் நான் சகிக்க வல்லவன் அல்லன். வீடு ஒன்றுக்கு அருகில் இடிவிழுமாகில் அது வீட்டுக்குள்ளிருக்கும் பெரிய பொருள்களைப் பாதிப்பதில்லை. ஆனால் கண்ணாடி ஜன்னல்கள் கலகலவென்று அசைகின்றன. அந்தக் கண்ணாடி ஜன்னல்களின் நிலையில் என் உடல் இருக்கிறது. யாண்டும் சத்துவ குணத்திலேயே நிலைத்திருக்கிற ஆத்ம சாதகனொருவன் காதில் விழும்படி கூச்சல் போட்டால் அது அவனுக்குத் தொந்தரவாயிருக்கிறது. ஹிருதயன் இங்கு இருந்த பொழுது நாளடைவில் அவன் எனக்கு ஓயாது உபத்திரவங்களைக் கொடுத்துக்கொண்டிருந்தான். தெய்வாதீனமாக அன்னவன் இங்கிருந்து அனுப்பப்பட்டான். ஒருவேளை அன்னை பராசக்தியின் திட்டம் அப்படி அமைந்திருக்கலாம். கிரீஷ் சந்திரகோஷ் என் மீது சொரியும் அடைமொழிகளையெல்லாம் நீ ஏற்றுக்கொள்ளுகின்றாயா?"

நரேந்திரன்: "தாங்கள் ஓர் அவதாரமூர்த்தி என்று அவர் நம்பி வருகிறார். அதைப்பற்றியும் அவர் தாராளமாகப் பேசிவருகிறார். அவர் பேச்சுக்கு நான் செவிசாய்க்கிறேன். ஆனால் அவரை ஆமோதித்தோ, மறுத்தோ நான் ஒன்றும் மொழிகிறதில்லை."

பரமஹம்சதேவர்: "கிரீஷ் இப்படியெல்லாம் என்னைத் தூக்கி வைத்துப் பேசுவது பொருந்தாது. அவனிடத்துள்ள பண்பு ஒன்றை நான் பெரிதும் பாராட்டுகிறேன். கடவுள் பக்தி அவனுடைய உள்ளத்தில் ஆழ்ந்து இடம் பெற்றிருக்கிறது. அதைப்பற்றி நீ என்ன நினைக்கின்றாய்?"

இப்படியெல்லாம் பேசிக்கொண்டிருந்ததற்கிடையில் பரமஹம்சதேவர் தரையின் மீது விரிக்கப்பட்டிருந்த பாயின்மீது அமர்ந்து கொண்டிருந்தார். அவர் திருவாய் மலர்ந்தருளியவைகள் யாவையும் பக்தர்கள் கூர்ந்து கவனித்துக்கேட்டுக்கொண்டிருந்தனர். பரமஹம்சதேவருக்கு ஒரு பக்கத்தில் மகேந்திரரும் அடுத்த பக்கத்தில் நரேந்திரனும் அமர்ந்திருந்தார்கள். ஏனைய பக்தர்கள் அவர்களைச் சுற்றிலும் அமர்ந்திருந்தனர்.

இத்திருக்கூட்டத்தின்கண் சிறிது நேரம் மௌனம் ஆதிக்கம் செலுத்தியது. அதன் பிறகு மௌனமானது பரமஹம்சதேவரால் கலைக்கப்பட்டது. அன்போடு அவர் நரேந்திரனிடம் இயம்பியதாவது: "குழந்தாய், காமத்தையும் காசு ஆசையையும் அறவே ஒதுக்கித் தள்ளினாலொழிய நீ ஈசுவர சாட்சாத்காரம் பண்ணமாட்டாய்." இங்ஙனம் இயம்பிய பொழுது அவருடைய உள்ளத்தில் அருள்நிலை ஊற்றெடுத்துத் ததும்பியது. தமது அன்பு கனிந்த பார்வையை நரேந்திரன் மீது நாட்டியபடி பாடலொன்றை அவர் பாடினார். அதில் அடங்கியிருந்த உட்கருத்துக்களாவன: "விஷயத்தை இயம்ப நாங்கள் தயங்குகிறோம். பேசாதிருக்கவும் எங்களுக்கு இயலவில்லை. ஓ ராதையே, ஒருவேளை உன்னை இழக்க நேரிடுமோ என்று எங்கள் உள்ளங்கள் ஐயப்பாடடைகின்றன. நாங்கள் அறிந்துள்ள ரகசியம் ஒன்றை ராதையே, உன்னிடம் எடுத்துத் தெரிவிக்கிறோம். பல தடவைகளில் நீயும் நாங்களும் பேராபத்துக்களுக்கு ஆளானோம். பரஸ்பரம் உதவி பண்ணிக்கொண்டு அந்த ஆபத்துக்களினின்று நாம் தப்பித்துக்கொண்டோம்.

நமக்கிடையிலே உள்ள இணக்கம் என்ன வடிவெடுக்குமோ அது எங்களுக்குத் தெரியாது. அது முற்றிலும் உன் கைவசத்தில் இருக்கிறது.''

நரேந்திரனுடைய ஜீவிதத்தில் இது ஒரு நெருக்கடியான பகுதியாகும் தன் தந்தை காலமான பிறகு நரேந்திரன் கொடிய வறுமை நோய்க்கு ஆளானான். உற்றார் உறவினரும் நண்பர்களும் அவனைக் கைவிட்டு விட்டனர். இந்த நெருக்கடியான சூழ்நிலையைத் தன்னுடைய நுண்ணறிவைக்கொண்டு அவன் ஆழ்ந்த ஆராய்ச்சி பண்ணிப்பார்த்தான். ஈசுவர கிருபையும் மக்கள்படுகிற வேதனையும் ஒன்றோடொன்று முரண்பட்டிருக்கின்றன வென்று அவன் எண்ணலாயினன். சில நாட்களுக்கு முன்புதான் வீட்டிலுள்ள வறுமை நோயை அகற்றுதற்கு எங்கெங்கேயோ உத்தியோகத்தை நாடி அவன் அல்லல்பட்டான். சுற்றியலைந்து திரிந்து வந்ததின் விளைவாக அவன் மிகவும் களைத்துப் போனான். அவ்வேளையில் சொரேலென்று மழை கொட்டியது. அதை முன்னிட்டு வீதியிலே ஒரு வீட்டுத் திண்ணைக்கருகில் படியின்மீது அவன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அந்த நெருக்கடியில் அவனுடைய உள்ளத்தில் பளிர் என்று கருத்து ஒன்று உதயமானது. நலனும் கேடும் நிறைந்துள்ள நிலவுலகவாழ்வு வெறும் கனவாக அவனுக்குத் தென்பட்டது. இன்பமும் துன்பமும் வெறும் மனத்தின் கூறுகளாம். இன்பம் நிறைந்துள்ள இவ்வையக வாழ்வில் துன்பம் நிறைந்திருக்கிறது. துன்பம் கலவாத இன்பம் ஈண்டு இல்லவே இல்லை. இத்தகைய ஞானத் தெளிவு அவனுக்கு ஆர்வத்தை ஊட்டியது. வையக வாழ்வு நிலையற்றது என்னும் உறுதிப்பாடு அவன் உள்ளத்தில் உருவெடுத்தது.

யாதனின் யாதனின் நீங்கியான்—நோதல்
அதனின் அதனின் இலன்

என்னும் பேருண்மையை அவன் தெளிவுற உணர்ந்தான். உலகைத் துறக்கவேண்டும் என்னும் முடிவுக்கு அவன் வந்தான். ஆயினும் அவன் அதைப் பரமஹம்சதேவரிடம் தெரிவிக்கவில்லை. அவனுடைய மனநிலையைப் பரமஹம்சதேவர் முற்றிலும் அறியலாயினர். பேச்சுக்கு ஆங்கு இடமில்லை. அப்படி அறிந்து கொண்டதின் விளைவாக இப்பாடலைப் பரமஹம்சதேவர் பாடினார். பாடலில் அடங்கியிருந்த கருத்தும், நரேந்திரன் பூண்ட தீர்மானமும் ஒரே விதத்தில் அமைந்திருந்தன.

நரேந்திரனுக்குக் குடும்பத் தொல்லைகள் ஏராளமாகவிருந்தன. அக்காரணத்தை முன்னிட்டு அவன் உலக பந்தபாசங்களில் அகப்பட்டுக் கொள்வானோ என்னும் ஐயம் பரமஹம்சதேவரிடம் இருந்தது. ஆங்கு அமர்ந்திருந்த நரேந்திரனுடைய கண்களிலே நீர் ததும்பிக் கொண்டிருக்கையில் அவன் பரமஹம்சதேவரை உற்று நோக்கினன். நரேந்திரன் துறவறம் பூணுவதைப் பற்றியபேச்சு குரு சிஷ்யர்களுக்கிடையில் எழவில்லை. ஆயினும் அப்பேச்சை எடுக்காமலேயே குரு சிஷ்யனை ஆயத்தப்படுத்தி வந்தார். சிஷ்யனும் அப்பேச்சைக் குருவோடு பேசக்கிடையாது. மறைமுகமாகத் தாயினிடம் நரேந்திரன் அதைத் தெரிவிக்க வேண்டிய நெருக்கடி வந்தது. தான் குடும்ப பாரத்தை ஏற்பதா அல்லது பரமஹம்சருடையபெருந்திட்டப்படி உலக நன்மையில் ஈடுபடுவதா என்னும் ஐயப்பாடு தன் உள்ளத்தில் வந்ததாகத் தாயிடம் தெரிவித்தான். "மகனே! எது நல்லதென்று உனக்குத் தோன்றுகின்றதோ உறுதியாக அதைக் கடைப்பிடி. குடும்ப பாரத்தை எப்படியும் நான் சமாளித்துக்கொள்வேன்" என்றார் நரேந்திரனை ஈன்றெடுத்த தாய்.

அன்பர் ஒருவர் அன்றைக்குத்தான் தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு முதன் முதலாக வந்திருந்தார். இந்நிகழ்ச்சிகள் யாவையும் அவர் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தார். பரமஹம்சதேவரிடம் அவர் எழுப்பிய வினாவாவது: ''ஐயனே, ஈசுவரானுபூதியின் பொருட்டு ஆத்ம சாதகன் ஒருவன் காமத்தையும் காசு ஆசையையும் துறந்தாக வேண்டுமென்றால் குடும்பி ஒருவன் செய்யக்கிடக்கும் கடமை யாதோ?"

பரமஹம்சதேவர் : '' உலக வாழ்வில் மூழ்கியிருக்கும் நீவிர் உங்கள் போக்கில் காமத்திலும் காசு ஆசையிலும் ஈடுபட்டிருக்கலாம். நரேந்திரனுக்கு நான் எடுத்து மொழிந்தது உமக்கு ஒவ்வாது."

மகிமசரண் பரமஹம்சதேவருடைய குடும்பஸ்த பக்தராவார். இதுகாறும் நிகழ்ந்து

வந்த பேச்சு வார்த்தைகளை அவர் கவனித்துக் கேட்டுக்கொண்டு வந்தார். திகைத்துப்போன வராய் அவர் பேச்சற்று அமர்ந்திருந்தார்.

பரமஹம்சதேவர்: (மகிமசரணைப்பார்த்து) "முன்னேக்கிச் செல்வாயாக வேண்டியவாறு முயற்சி எடுத்துக்கொள். நீயும் தக்க தருணத்தில் பிரபஞ்ச வாழ்வு என்னும் அடவிக்குள்ளே அமைந்திருக்கும் சந்தன மரத்தைக் கண்டுபிடிப்பாய். மேலும் உள்ளே சென்றால் வெள்ளிச் சுரங்கத்தையும் கண்டுபிடிப்பாய். இன்னும் ஆழ்ந்து உள்ளே சென்றால் தங்கச் சுரங்கத்தையும் தக்ககாலத்தில் காண்பாய். அந்த இடத்தில் நின்றுவிட வேண்டாம். மேலும் முயற்சி எடுத்துக்கொண்டால் ரத்தினச் சுரங்கமும் வைரச்சுரங்கமும் உன் காட்சிக்கு எட்டும். ஆகையினல் விடாது முயற்சிபண்ணிக்கொண்டு இரு என்று நான் உனக்கு எடுத்து இயம்புகின்றேன்."

மகிமசரண்: "ஆனல் ஐயனே, மேல் நோக்கிச் செல்லாதபடி ஏதோ ஒன்று எங்களுக்குத் தடை போடுகிறது. நகரமுடியாதபடி நாங்கள் திணறிக்கொண்டிருக்கிறோம்."

பரமஹம்சதேவர்: (புன்னகை பூத்தவராக) "ஏன் அப்படிச் சொல்லுகின்றாய்? கட்டிப்பிடிக்கின்ற தளைகளை வெட்டித்தள்ளு. இறைவனுடைய திருநாமம் என்னும் வாளைக்கொண்டு தளைகளை வெட்டித் தள்ளுவாயாக. காலம் என்னும் இடைஞ்சலைக் காளிகாதேவியின் நாமம் தகர்த்துத் தள்ளுகிறது.'' இப்படிப் பேசிக்கொண்டிருந்ததற்கிடையில் தம்முடைய கருணைகரக் கண்பார்வையைப் பரமஹம்சதேவர் நரேந்திரன் மீது திருப்பினர். அவனைப் பார்த்து, "நீ இப்பொழுது அனுபவம் மிக வாய்க்கப் பெற்ற வைத்தியனாக மாறியுள்ளாயா? 'ஆயிரம் கண்களைப் பாழாக்கியவன் அரை வைத்தியன்' என்பது பழமொழி. அதற்கு மேற்பட்டு கண் வைத்தியம் பண்ணி அனுபவம் பெறுபவனே வல்லமை வாய்ந்த வைத்தியனாகிறான்."

நரேந்திரனிடம் பரமஹம்சதேவர் இங்ஙனம் பகர்ந்தது எதை முன்னிட்டோ என்பது ஏனையவர்களுக்கு விளங்கவில்லை. ஒருவேளை அவன் வயதில் இளையவன் எனினும் உலகின் பாங்குகளையெல்லாம் நன்கு அறிந்துகொண்டவன் எனக் கருதினரோ!

நரேந்திரன் புன்னகை பூத்தவனாக மௌனமுற்று இருந்தான்.

பிற்பகல் வேளை: பக்தர்கள் எல்லாரும் பரமஹம்சதேவரைச் சூழ்ந்து அமர்ந்திருந்தனர். அப்பொழுது நவச்சைதன்யன் என்பவன் பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தான். அப்பாடல்களை எல்லாரும் கேட்டுப் பரவசம் அடைந்திருந்தனர். திடீரென்று பரமஹம்சதேவர் அறையினின்று வெளியே புறப்பட்டுப் போனர். அதை முன்னிட்டுப் பாடல் நிற்கவில்லை. பரமஹம்சதேவரைத் தொடர்ந்து மகேந்திரர் பின் சென்றார்.

பரமஹம்சதேவர் ராதாகாந்தனுடைய ஆலயத்தினுள் பிரவேசித்து ஆங்கு எழுந்தருளப் பண்ணியிருக்கும் மூர்த்திகள் முன்னிலையில் தலைவணங்கி நமஸ்கரித்தார். மகேந்திரரும் அதே பாங்கில் நடந்துகொண்டார். ஆங்குத் தட்டிலே குங்குமம் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஒவ்வொரு தூளியாக எடுத்துக் கிருஷ்ணனுடைய நெற்றியிலும், ராதையினுடைய நெற்றியிலும் வைத்தார். அதன் பிறகு மீண்டும் ஒருமுறை அவர் நமஸ்கரித்தார்.

அடுத்தபடியாகப் பரமஹம்சதேவர் காளிகாதேவியின் சந்நிதிக்குச் சென்றார். ஆங்கு அவர் அம்பிகையை உற்று நோக்கிய வண்ணமாயிருந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு கர்ப்பக் கிரகத்துக்குப்போனர். ஆங்கு அம்பிகைக்கு அவர் குங்குமம் சாத்தி வணங்கினர். கோயிலினின்று திரும்பியபொழுது, "பாபுராமனை நீ உன்னேடு ஏன் அழைத்து வரவில்லை?" என்று மகேந்திரரைக் கேட்டார்.

இப்பொழுது பரமஹம்சதேவர் மீண்டும் தம் அறைக்குத் திரும்பி வந்துசேர்ந்தார். மகேந்திரரும் மற்றும் ஒரு பக்தரும் அவரைப் பின் தொடர்ந்து அறைக்குள் வந்து சேர்ந்தனர். உடன் வந்த பக்தர் குங்குமத்தட்டைக் கையில் ஏந்திக் கொண்டு வந்தார். அறையிலிருந்த படங்களில் ஒவ்வொரு தெய்வத்துக்கும் அவர் குங்குமம் சாத்தினர். ஆனல் ஏசுநாதருக்குச் சாத்தவில்லை. எஞ்சியிருந்த குங்குமத்தை அவர் நரேந்திரன் மீதும் ஏனைய பக்தர்களின் மீதும் தூவினர். அனைவரும் அவருடைய பாதங்களைத் தொட்டு வணங்கினர்.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

6-4. வாக்காதி யானகர்ம மாயைதம்பால் வீண்காலம்
போக்காமல் உண்மை பொருந்துநாள்
எந்நாளோ.

கன்மமாயை—கர்மேந்திரியங்களால் செய்யப்பட்ட உலகக் கிருத்தியங்கள்—உண்மை—பர தத்துவம்.

ஜீவாத்மாவாகிய மனிதனிடத்து ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்கள் ஐந்து ஆகிய பத்து இந்திரியங்கள் அமைந்திருக்கின்றன. ஞானேந்திரியங்கள் ஐந்தும் புறவுலகை அறிந்துகொள்ளப் பயன்படுகின்றன கர்மேந்திரியங்கள் ஐந்தும் மனிதனுக்கு ஏற்பட்டிருக்கின்ற கடமைகளைச் செய்யப் பயன்படுகின்றன. அக்கடமைகள் மனிதனை மேல் நிலைக்குக் கொண்டுவருமாகில் அவைகள் தர்மம் என அங்கீகரிக்கப்படுகின்றன. அச்செயல்கள் மனிதனைக் கீழ்மையில் ஆழ்த்துமாகில் பொருந்தாத அச்செயல்கள் அதர்மம் என ஒதுக்கப்படுகின்றன. வாயில் பேசுவது ஒரு கர்மமாகிறது. பேசுகிற பேச்செல்லாம் வாழ்வைப் பண்படுத்துவதற்கும் மக்களுடைய நலனை எடுத்துக் காட்டுவதற்கும் பேசுகிறவனை மேல்நிலைக்குக் கொண்டு வருவதற்கும் ஒத்தவைகளாக இருக்குமாகில் அப்பேச்சு தர்மத்திற்கு உடன்பட்டதாம். நடந்து செல்லுதற்குக் கால்கள் பயன்படுகின்றன. அக்கால்கள் கர்மேந்திரியம் எனக் கருதப்படுகிறது. மனிதன் எங்கே எதற்காக நடந்துபோகிறான் என்பது கேள்வி. வழிபாட்டுக்குரிய இடங்களுக்கும், மக்களுக்குப் பணிவிடை பண்ணக்கூடிய இடங்களுக்கும், தொழில் புரிந்து வாழ்வை நல்வழியில் நடாத்துவதற்குப் பொருள் சம்பாதிக்கும் இடங்களுக்கும் போகப் பயன்படுத்தினால் அது அறச்செயல் ஆகிறது. அதற்கு மாறாகச் சிற்றினம் சேர்வதற்கும், வீண் பொழுது போக்குவதற்கும், பிறரோடு வம்புச் சண்டைக்குப் போவதற்கும் கால்களைப் பயன்படுத்தினால் அது பாபச் செயலாகும். கைகள் இரண்டும் மூன்றாவது கர்ம இந்திரியங்களாகின்றன. நல்லகருத்துக்களை எழுதுவதற்கும், பிறர்க்குப் பணிவிடை பண்ணுவதற்கும், தனக்குரிய நித்திய கர்மத்தை நிறைவேற்றுவதற்கும் கைகளை பயன்படுத்தலாம். இவற்றுக்கெல்லாம் மேலாகக் கைகூப்பிக் கடவுளை வணங்குவது தலைசிறந்தசத்கர்மம் ஆகிறது. இத்தகைய பாராட்டத்தக்க மேலாம் கர்மங்களினின்றுபிசகிப்புன்மொழிகளை எழுதுவதற்கும், பிறரைத் துன்புறுத்துதற்கும், பாபச் செயலில் ஈடுபடுவதற்கும் மனிதன் தன் கைகளைப் பயன்படுத்துவானாகில் அவன் அறநெறி பிறண்டவனாகிறான்.

பாயு, உபஸ்தம் ஆகிய இந்திரியங்கள் மலம் ஜலம் கழிக்க பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பிட்ட வேளைகளில் அதற்கென்று அமைந்துள்ள இடத்தில் மலஜலம் கழிப்பது ஆமோதிக்கப்படுகிற செயலாகிறது. தேவாலயம் போன்ற புனிதம் நிறைந்த இடங்களில் மலம் ஜலம் கழிப்பது பாபச் செயலாகும். உபஸ்தம் என்பதுகுறி. இதைச் சுகபோகத்துக்குப் பயன்படுத்துவது தற்கொலை செய்துகொள்வதற்கு நிகர். அதன் வாயிலாகக் கிளம்பும் காமவிகாரத்தை வெல்லுவது பரமனை அடைவதற்கு உற்ற உபாயமாகும்.

கர்மேந்திரியங்களை முறையாகப் பயன்படுத்துவதன் வாயிலாகவே எடுத்த ஜன்மத்தை மனிதன் நன்கு கையாளுகிறான். கர்மேந்திரியங்களைக்கொண்டு கையாளுகிற சத்கர்மத்துக்கு வரையறை உண்டு. நல்ல விஷயத்தையும் மனிதன் காலமெல்லாம் பேசிக்கொண்டிருக்கலாகாது. வாயடங்கியிருத்தல் நல்ல பயிற்சியாகும். அமைதியுற்று அமர்ந்திருக்கும் வேளைகளில் கைகளையும், கால்களையும் அசைக்காமல் வைத்திருப்பதும் நல்ல பயிற்சியாம்.

மனிதன் செய்கின்ற செயல்கள் அனைத்திலும் தலைசிறந்ததாகத் திகழ்வது தியானம். இச்செயல் இக்கண்ணியிலே உண்மை பொருந்துதல் எனப் பகரப்பெறுகிறது. கடவுள் சிந்தனையில் மனிதன் பண்பாடடையப் பெற்று மேலோனாகிறான்.

கால, தேச, வர்த்தமானம் மயமாயிருப்பது பிரபஞ்சம். இப்பிரபஞ்சத்துக்கு மாயை என்பது மற்றொரு பெயர். எது ஓயாது மாறியமைந்துகொண்டிருக்கிறதோ அது மாயை

மனிதன் ஆழ்ந்து பரவஸ்துவின் தியானத்தில் மூழ்கியிருக்கிறபொழுது காலத்தையும் இடத்தையும் வர்த்தமானத்தையும் தாண்டியவனாகிறான். அங்கிலையில் கர்மேந்திரியங்களுக்கு அலுவல் ஏதுமில்லை. நல்வழியிலேயே பயன்படுத்தப்படுகிற அந்த இந்திரியங்களைத் தியான அவஸ்தையில் செயலற்றவைகளாக ஒதுக்கி வைத்துப் பழகுதல் நல்ல பயிற்சியாம். மனிதன் புரிகிற செயல்கள் அனைத்திலும் மேலானதாயிருப்பது தியானப் பயிற்சி. உலக வியவகாரங்களை எவ்வளவுக்கெவ்வளவு ஒதுக்கி வைத்துவிட்டுக் கடவுள் தியானத்தில் ஆழ்ந்து ஈடுபடுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு எடுத்த மானிட ஜன்மத்தை மனிதன் நன்கு பயன்படுத்துகின்றான் என்பது இந்தக் கண்ணியின் கருத்தாம்.

6-5 மனம்ஆன வானரக்கைம் மாலைஆ காமல்
எனைஆள் அடிகள்அடி எய்துநாள் எந்நாளோ.

வானரம் — குரங்கு.

எனையாள் அடிகள் அடி — என்னை ஆட்கொள்கின்ற இறைவனுடைய (திருவடிகள்)

• உயிர்வகைகளுள் குரங்கு ஆனது சிறிது நேரம் சும்மாவிருப்பதில்லை. ஏதேனும் செயலில் அது ஈடுபட்டுக்கொண்டேயிருக்கும். அத்தகைய குரங்கின் கையில் பூமாலை ஒன்றைக் கொடுத்தால் அதைச்சிறிது நேரத்தில் அவ்விலங்கு பிய்த்துப் பாழ்படுத்தித் தள்ளும். ஆக்கவேலை ஒன்றையும் குரங்கு அறியாது. பொருளை அழித்துத் தள்ளும் செயலில் அது தீவிரமாக ஈடுபடுகிறது. கட்டுக்கடங்காத மனது அத்தகைய குரங்கோடு ஒப்பிடப்படுகிறது. சதா சலித்துக்கொண்டிருக்கும் மனதை அடக்கிப் பழகுபவனே சான்றோன் ஆகிறான். அடங்காத மனதை அடக்கிப் பழகுவது மிகச் சிரமம். எடுத்த எடுப்பில் மனதை அடக்குதற்குப் பதிலாக அதற்குப் பொருத்தமான பணிவிடைகளைத்தருவது சாலச் சிறந்தது.

வாழ்க்கையை ஒட்டிய சிறந்த கோட்பாடு ஒன்று இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது. கட்டிலடங்காத மனது குரங்கோடு ஈண்டுச்சீர் தூக்கப்படுகிறது. பின்பு குரங்குக்கும் சிறுவன் ஒருவனுக்கும் அதிக வித்தியாசமில்லை. சிறுவன் ஒருவனுக்குச் சிறிதுநேரம் அமைதியுற்றிருக்க இயலாது. ஏதாவது செயல் புரிந்துகொண்டிருக்கும் பாங்குடையவன் சிறுவன். அவனை வளர்க்கத் தெரியாதவர்கள் அடித்து மிரட்டி அமைதியுற்றிருக்கும்படி அவனை வற்புறுத்துகிறார்கள். அப்படி அவனைப் பலவந்தமாக அடக்கி வைப்பது அவனுடைய வாழ்வைப் பாழ்படுத்துவதற்கு நிகராகும். வளர்ந்து வருகிற செடியின் மீது கல்லைத்தூக்கி வைப்பதற்கு நிகரானது இச்செயல். சிறுவன் ஒருவனுடைய செயலை ஆராய்ந்து பார்த்தால் அவனுடைய மன அமைப்பை அறிந்துகொள்ளலாம். ஆக்கல், அழித்தல் ஆகிய இரண்டு செயல்கள் ஒன்றோடொன்று ஒவ்வாதவை. சிறுவன் ஒருவன் ஆக்கச் செயலில் ஈடுபடுகிறான். மற்றொருவன் பொருள்களைப் பாழடிக்கும் செயலில் ஈடுபடுகிறான். இவ்விருவருக்கிடையில் ஒருவன் செயலில் மற்றவனைத் தூண்டலாகாது. அவனவனுக்குரிய பாங்கையனுசரித்தே அவனுக்கு வேலை தருதல் வேண்டும். எந்தச் சிறுவனையும் அமைதியுற்றிருக்கும்படி வற்புறுத்தலாகாது. அவனுக்குகந்த செயலிலேயே அவனை ஈடுபடுத்துதல்வேண்டும். ஆக்கத்துறையில் ஈடுபட முயலுகிற சிறுவனுக்குப் பண்டங்களை ஒழுங்காக வைத்திருத்தல், அவைகளைத் துப்புரவுபடுத்துதல் ஆகிய கிருத்தியங்களில் அவனைத்தூண்டுதல் வேண்டும். பாழ்படுத்தும் பாங்குடையவனைத் தோட்டத்திலுள்ள செடிகளில் உள்ள சருகுகளைச் சேகரிக்கும் செயலில் தூண்ட வேண்டும். குப்பைக்கூளங்களைக்கூட்டித் தீக்கு இரையாக்கும்படி அவனை வேண்டினால் மகிழ்வோடு அச்செயலில் அவன் ஈடுபடுவான். சுருங்கச் சொல்லின் செயலின் வாயிலாகவே மனிதனுடைய இயல்பு வெளியாகிறது. அச்செயலுக்குத் தடை போடலாகாது. அவனவனுக்கு உகந்த செயலில் ஒவ்வொருவனையும் தூண்டி அவனுடைய பண்பை வெளிப்படுத்துதல் வேண்டும்.

ஆத்ம சாதனத்தில் செல்லுகின்றவனும் வேண்டியவாறு வினையாற்ற வேண்டும். அதன்வாயிலாக மனத்திருப்தி அவனுக்கு வருகிறது. திருப்தியடைந்த மனதோடு இறைநாட்டத்தில் ஈடுபட்டால் அதிவிரைவில் அவன் சாதனத்தில் முன்னேற்றமடைவான் என்பது இக்கண்ணியின் கருத்து.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

27. தவறு செய்வது மக்களுடைய இயல்பு ஆகும். எனவே அறியாமையினால் உனக்குத் தவறு செய்தவர்களை நீ மன்னிப்பாயாகில் தவறு செய்த உன்னைத் தலைவனாகிய தெய்வம் மன்னிப்பார். உனக்குத் தவறு செய்தவர்களை நீ மன்னிக்காவிட்டால் தவறு செய்த உன்னைத் தெய்வம் மன்னிக்க மாட்டார்.

தீயதை மறந்து நல்லதை நினைத்துப் பழக வேண்டும். நாம் மற்றவர்களிடத்து நலத்தையே கண்டு பழகவேண்டும். அப்பொழுது தான் நம் மனம் தூய்மை அடையும். பிறரிடத்தில் நலத்தை நாம் காண்கின்றபொழுது நம்மை அறியாது நாம் அவர் நமக்குச் செய்த குற்றத்தை மறந்து விடுகின்றோம். அப்பொழுது பிறரை மன்னித்து விடுதல் என்பது நம்மை அறியாமலேயே நிகழ்ந்து விடுகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் காலத்தில் கிரீஷ்சந்திர கோஷ் என்னும் கொடுமையே வடிவெடுத்த ஒருவர் இருந்தார். அவரிடத்தில் சொன்ன சொல் தவறாத ஒரு நல்லியல்பு இருந்தது. ஸ்ரீராமகிருஷ்ணர் அவரிடத்திருந்த அந்நல்லியல்பைப் பயன்படுத்தி அவரை ஒரு மகான் ஆக்கிவிட்டார்.

புத்தர் பகவான் பகர்ந்துள்ளதாவது: "ஒருவன் அறியாமையினால் எனக்குக் கேடு செய்வானாகில் நான் அன்பினால் அவனுக்குப் பாதுகாப்புச் செய்ய முயல்வேன். ஒருவனிடமிருந்து எவ்வளவு கேடுகள் எனக்கு வருமோ அவ்வளவு நலன்கள் என்னிடமிருந்து அவனுக்குப் போகும். வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தை விட்டு அகற்றப்படவேண்டும். வெறுப்பு உணர்ச்சி உள்ளத்தில் இருக்கக்கூடாது. எனக்கு நலம் செய்தவர்களையும் கேடு செய்தவர்களையும் அன்பினால் அணைத்துக் கொள்வேன்."

பிறர் செய்த கேட்டை மறந்துவிட வேண்டும் என்று பெரியோர்கள் பகர்ந்திருக்கிறார்கள்.

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

என்பது வள்ளுவர் வாக்கு. பிறர் செய்த கேட்டை மறந்துவிடுபவர்கள் பாக்கியவான்கள். பிறர் செய்த கேட்டை மனதில் எண்ணிப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் தங்களுக்கும் கேட்டைத் தேடிக்கொள்கிறார்கள், பிறருக்கும் கேட்டைத் தருகிறார்கள். அன்பும் அனுதாபமும் கொண்ட எண்ணங்கள் உள்ளத்தில் தோன்றிக்கொண்டேயிருந்தால் மனதிலுள்ள மாசுகள் நீங்கும். மாசற்ற மனது நமக்கும் உலகுக்கும் சாந்தியை வழங்கிக் கொண்டே இருக்கும்.

அகங்காரம் படைத்த மனிதன் தன்முனைப்பு உடையவனாக இருக்கின்றான். தன்னைக்காட்டிலும் மற்றவர்கள் உயர்வடையக்கூடாது என்று எண்ணுகின்றான். பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்று அகங்காரம் மனிதனைத் தூண்டுகிறது. அகங்காரம் படைத்த மனிதன் பிறர் தன்னைப் புகழ்ந்தால் அப்புகழ்ச்சிக்கு வசப்பட்டுவிடுகின்றான். அகங்காரம் படைத்த மனிதன் பிறர் தன்னைப்பற்றிக் குறைகூறும்பொழுது அவர்கள் மீது வெறுப்புக்கொள்கின்றான். தன்னைத் துன்புறுத்தியவர்களுக்குத் துன்பம் செய்யும் வாய்ப்பை அகங்காரம் படைத்த மனிதன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். அகங்காரம்தான் துன்பத்துக்கு அடிப்படை என்பதை அவன் மறந்துவிடுகிறான். அகங்காரம் ஒழியுமிடத்துத்தான் பிறருடைய துன்பத்தை மன்னிக்கும் இயல்பு நம்மிடம் உண்டாகிறது; அகங்காரம் ஒழியுமிடத்து ஈசனுடைய காட்சியும் நமக்குக் கிட்டுகிறது. அகங்காரமிருக்கும் வரையில் நாம் பிறருடைய குற்றத்தை மன்னிப்பதில்லை; தெய்வக் காட்சியும் நாம் காண்பதில்லை. அகங்காரம் ஒழிந்தவிடத்து நாம் பிறருடைய குற்றங்களை மன்னிக்கின்றோம். கடவுள் காட்சியும் அப்பொழுது நமக்குக் கிட்டுகிறது. இக்கருத்தை இயேசுநாதரின் இவ்வுபதேசம் விளக்குகிறது.

28. பட்டினியிருந்து பிரார்த்தனை செய்வதில் பயன் உண்டு. அப்பொழுது மனதில் பிரார்த்தனை ஆழ்ந்துபடிகிறது. பட்டினி இருப்பதை வெளிக்குக் காட்டிக்கொள்ளும் வெளிவேஷக்காரன் இருக்கின்றான். முகவாட்டத்துடனிருந்து தான் பட்டினி

யிருப்பதை அவன் வெளிக்குக் காட்டிக்கொள்கின்ருன். அப்படி வெளிவேஷம் போட்டுக்கொள்பவன் அதற்கேற்ற வெகுமதியைப் பெறுகின்ருன்.

முறையாக உபவாசம் செய்கின்றவன் உணவைப் பற்றி நினைக்கலாகாது. முகமலர்ச்சியுடன் அவன் இருக்கவேண்டும். பட்டினி இருப்பதை வெளிக்குக் காட்டிக்கொள்ளக் கூடாது. உண்ணுதிருப்பதை உள்ளத்தினுள் உறைகின்ற இறைவன் அறிகின்ருர். மனமுவந்து செய்யும் உபவாசத்துக்கு ஏற்ற நலனைப் பிறகு அவர் நல்குகின்ருர்.

உள்ளொன்று வைத்துக்கொண்டு புறம் ஒன்றைக் காட்டுபவர்களைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். துளசி இலையைக் காதில்சொருகிக்கொண்டிருப்பவனையும்,பேசாதிருப்பவனையும், அதிகம் பேசிக்கொண்டிருப்பவனையும், முக்காடு போட்டுக்கொண்டிருக்கும் பெண்மணியையும், பாசிமூடிக்கொண்டிருக்கும் குளத்தையும் நாம் நம்பக்கூடாது. அவைகளிடத்து ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சான்ருேர்கள் போன்று நடிப்பது சுலபம். ஆனல் சான்ருேர்களாக நடந்துகொள்வது மிகவும் கஷ்டம். சமயத்துறையில் செல்பவர்களில் பெரும்பாலோர் வேஷதாரிகளாகவிருப்பதால் மக்களுக்குச் சமயத்தினிடத்து நம்பிக்கை உண்டாவதில்லை. சமயச் சின்னங்களை அணிந்து கொண்டு பக்தன் போன்றும், ஞானிபோன்றும் தன்னைக் காட்டிக்கொள்பவன் சமயநெறி நிற்பவன் ஆகான். அருள்தாகம்கொண்டு கடவுள் காட்சி பெறவேண்டும் என்று கடவுள் காட்சிக்காக ஏங்கிக்கொண்டிருப்பவன் சமயநெறி நிற்பவன் ஆகின்ருன். உள்ளத்தினுள்ளே ஆத்மீக ஒளியைக் காண்பவன் அகங்காரமின்றிப் பணிவுடன் யாவரிடமும் நடந்துகொள்வான். அவன் தன்னையும் புனிதப்படுத்தியவன் ஆகின்ருன்; பிறரையும் புனிதப்படுத்தியவன் ஆகின்ருன். சிந்தையும், சொல்லும், செயலும் ஒன்றுபடும் பொழுதுதான் சமயநெறி கடைப்பிடிக்கப்படுவது ஆகிறது.

சமயநெறி நிற்பவன் யாண்டும் முகமலர்ச்சியுடன் இருக்கவேண்டும். உலகத் துயரம் எதுவும் அவன் உள்ளத்தில் இடம்பெறலாகாது. உலகத் துயரத்துக்கு ஆளாகுபவன் சமயநெறி நிற்பவன் ஆகான். சாதனை செய்பவன் மனதைத் தூய்மைப்படுத்திக்கொண்டே இருக்கின்ருன். மனம் தூய்மை அடைகின்றவளவு அது தமோகுணத்தைவெல்லுகிறது. மனத்தூய்மையுடையவனுக்குச் சோம்பல் இருப்பதில்லை. மனத்தூய்மை உண்டாகும்பொழுது சத்துவ குணம் வளர்ச்சி அடைகிறது. சத்துவகுணம் உள்ளத்தில் அமைதியையும் மகிழ்ச்சியையும் உண்டாக்குகிறது.

சுவாமி விவேகானந்தர் பகர்வதாவது: "சமயத்துறையில் முன்னேறி வருவதற்கு முதல் அறிகுறி மகிழ்ச்சியுடன் இருப்பதாகும். உற்சாகமும் மகிழ்ச்சியும் இல்லாதவர்களிடத்து உடலில் ஏதோ கோளாறு இருக்கிறதென்பதை அறிந்துகொள்ளவேண்டும். வயிறு மந்தமாக இருந்தால் மனதில் உற்சாகமும் இருக்காது, தெளிவும் இருக்காது. சத்துவகுணத்தின் அறிகுறி உள்ளத்தில் உவகை உணர்ச்சியை உண்டாக்கிக் கொண்டு இருக்கும். துக்க உணர்ச்சிக்கு உள்ளத்தில் சிறிதும் இடமிருக்காது. உலக நிகழ்ச்சிகள் அனைத்தும் சத்துவ குணம்வாய்த்தவனுக்குநல்லியல்பையே வளர்க்கின்றன. உள்ளத்தில் நல்லியல்பை வளர்க்கும் உணர்ச்சி உண்டாகும் பொழுது யோக நெறியில் முன்னேறி வருகிறோம் என்று தீர்மானம் செய்துகொள்ளலாம். இயற்கைக் காட்சிகள் யோகியினுடையஉள்ளத்தில்பேரானந்தத்தை உண்டாக்குகின்றன. மக்களைக் காண்கின்ற பொழுது யோகி பரமானந்தம் அடைகின்ருன். இயற்கையிலுள்ள அனைத்தும் இன்பமூட்டுபவைகளாகத் தென்படுமானல் நாம் நல்லவர்களாக மாறிஅமைந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கு அது அடையாளமாகும். மன அழுக்கே நமக்குத் துன்பமாக வடிவெடுத்து வருகிறது. மன அழுக்கு நீங்கினல் துன்பம் இல்லை. முகத்தைக் கோணிக்கொண்டு துயரத்தை வெளிப்படுத்திக் கொண்டிருப்பதால் நீ எதைச் சாதிக்கப் போகின்ருய்? கவலையோடு இருக்க நீ வாழ வந்தவன் அல்லன். அப்படி உனக்குக் கவலையோடுகூடிய தோற்றத்தைக் காட்டிக்கொள்ளக்கூடிய நிலை வந்தால் அன்றைக்கு நீ வீட்டைவிட்டு வெளியே போக வேண்டாம். வீட்டின் அறைக்குள் உன்னை அடைத்துவைத்துக்கொள். தொத்துவியாதிக்காரன் தன்னிடத்துள்ள நோய் பிறருக்குப் பரவாமல் இருக்கும் பொருட்டுத் தனியாகத்

அவன் ஒரு அறையில் இருப்பது போன்று கவலை குடிகொண்டுள்ள உள்ளத்தையுடைய நீ உன்னையும் ஓர் அறைக்குள் அடைத்து வைத்துக்கொள். தொத்து வியாதியைவிட மக்களிடத்துக் கவலையைப் பரப்புவது கொடியது ஆகும். எனவே கவலைக்கு இடம் கொடுக்கின்ற நீ உலக மக்களுடன் பழகுவதற்குத் தகுதியற்றவன் ஆகின்றாய். கவலைநோயை உன்னிடத்திலேயே நீ வைத்துக்கொள். அதை மற்றவர்களுக்குப் பரப்பும் உரிமையை நீ எடுத்துக்கொள்ளாதே.

கடவுள் அன்பு சொரூபமானவர்; அவர் ஆனந்தமயமானவர். துக்கத்துக்கோ துயரத்துக்கோ கடவுளிடத்து இடமில்லை. மனதைக் கடவுள்பால் வைக்கத் தெரிந்துகொண்ட மனிதன் இன்ப வெள்ளத்தில் மூழ்கி இருப்பான். இத்தகைய மனபரிபாகம் அடைவதே சமய வாழ்வு எனப்படும். மற்றவைகளெல்லாம் வெளிவேஷமாய்ப் போய்விடும். வெளிவேஷத்துக்கு உலகம் மதிப்புத் தரும். மனபரிபாகத்துக்கு இறைவனுடைய சாம்ராஜ்யம் கிட்டும். எனவே உலகமதிப்பு வேண்டுமென்று நீங்கள் வெளிவேஷம் போடாதீர்கள். இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாக வேண்டுமென்று மனபரிபாகம் அடைவதற்கு நேர்மையான, கட்டுப்பாடான, சிற்றின்ப நுகர்ச்சிக்கு அடிமைப் படாத,தூய தியாக வாழ்வு வாழ்ந்து வருவீர்களாக. இக்கருத்தை இயேசுநாதருடைய இவ் உபதேசம் புகட்டுகிறது.

இயேசுநாதர் வாழ்வில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதை ஈண்டு ஞாபக மூட்டுவது அவசியம். ஒருசமயம் ஒழுக்கம் தவறிய மாது ஒருத்தி பொதுமக்களுடைய தண்டனைக்கு உட்பட்டாள். பொதுமக்கள் அம்மாதை நடுத்தெருவில் நிறுத்தி வைத்து அவளைக் கல்லால் அடிக்க முயன்றனர். இயேசுநாதர் அம்மக்களைப் பார்த்து, "ஏன் இக்கொடுமையைச் செய்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "இவள் விபசாரத்தன்மை உடையவள். ஆகையினால் அவளைக் கல்லால் அடிப்பதற்காகத் தெருவில் நிறுத்தி வைத்திருக்கிறோம்" என்றார்கள். அதற்கு இயேசுநாதர் அவர்களிடம் பகர்ந்ததாவது : "அவள் செய்த குற்றத்துக்கு அவளுக்குத் தண்டனை கொடுப்பது நியாயமே. ஆனால் அவளுக்குத் தண்டனை கொடுக்கின்ற நீங்கள் விபசாரத்தன்மை இல்லாதவர்களா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இக்கூட்டத்தில் ஆண்களாக இருப்பவர்கள் பிறந்தது முதல் இதுவரையிலும் எந்தப் பெண்மணியையும் காம நோக்கத்தோடு பார்க்காது இருந்திருக்கிறீர்களா என்பதை உங்கள் நெஞ்சைத் தொட்டுக் கேளுங்கள். இக்கூட்டத்தில் பெண்பாலர்களாக இருப்பவர்கள் பிறந்தது முதல் இதுவரையில் நீங்கள் எந்த ஆடவனையும் காம உணர்ச்சியோடு பார்க்கவில்லையா என்பதை உங்கள் நெஞ்சைத் தொட்டுக் கேளுங்கள். உங்கள் மனச்சாட்சி நீங்கள் தூய்மையானவர்கள் என்பதைச் சொல்லுமானால் அம்மாதை நீங்கள் வேண்டியவாறு கல்லால் அடிக்கலாம். இப்பொழுது யார் அம்மாதைக் கல்லால் அடிக்க முன்வருகிறீர்கள்?" இக்கேள்வியைக் கேட்டதும் யாவரும் கல்லைக் கீழே போட்டுவிட்டு அமைதியுடன் பின்வாங்கி விட்டார்கள்.

"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு"

என்பது வள்ளுவர் வாக்கு.

முதலில் நம் குற்றத்தை நீக்கிக்கொள்ள முயல வேண்டும். நாம் நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வோமானால் நம்மையறியாமலேயே பிறரைத் தூய்மைப்படுத்துகின்ற செயல் நம்மூலம் நிகழும். உள்ளத்தாலும் செயலாலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பது உயர்நெறியாகும். உள்ளத்தை ஒழுங்குபடுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். நம் உள்ளம் தவறு செய்கிறபொழுது அதற்குப் புத்திமதி புகட்டி நம் வழிக்குத் திருப்புகின்றோம். நம் உள்ளத்தை நாம் வெறுத்து ஒதுக்குவதில்லை. உள்ளத்திலுள்ள நல்லியல்பைக் கண்டுபிடித்து அதை நாம் வளர்க்கவேண்டும். அங்ஙனம் பிறரிடத்துள்ள நல்ல குணத்தைக் கண்டு அதன் மூலம் அவர்களை உயர்த்த முயலவேண்டும். மற்றவர்கள் உயர்நிலையடையவேண்டு எண்ணுகின்றவளவு நாம் உயர்நிலையடைகின்றோம். நம் உள்ளம் திருந்தியமைவதற்கேற்ற நலனை இறைவன் நல்குகின்றார் என்னும் கருத்து இவ்வுபதேசத்தில் அடங்கியிருக்கிறது.

வேதாந்தம்

(335ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்ட உணவு உடல் மயமாக அது நன்கு ஜீரணமாக வேண்டும். அங்ஙனம் கேட்ட விஷயம் நம் இயல்பாக வடிவெடுக்க அது நம் உணர்வுமயம் ஆகவேண்டும். வேதாந்தம் கேட்டால் மட்டும் போதாது, அதை நன்கு சிந்திக்கவேண்டும். வேதாந்தத்தின் சாராம்சம் நம் இயல்பாக வடிவெடுத்துவிட வேண்டும். அப்படி வேதாந்தம் நம் இயல்பாகி விட்டால் உலக வேட்கை ஒழிந்து போய்விடும். உலகப் பற்று உள்ளத்திலிருந்து தானுகவே ஒழிந்து போகுமிடத்து வேதாந்தம் கேட்பதின் பலனை நாம் அடைந்தவர்களாகின்ரும். "வேதாந்தம் கேட்டவர் வேட்கை விட்டாரே" என்று திருமூலர் பகர்கிருர்.

"வேதாந்தமாவது வேட்கை ஒழிந்திடம்" என்பது திருமூலர் வாக்கு. இதே கருத்தை "நிராசையின்றேல் தெய்வமுண்டோ!" என்று தாயுமானவர் பகர்கிருர். நிராசைதான் தெய்வம். உள்ளத்தில் ஆசை உள்ளளவும் மனிதன் மெய்ப்பொருளிடமிருந்து பிரிந்திருக்கின்ருன். ஆசை பூர்த்தியாகும் பொழுது நாம் மெய்ப்பொருள் சொருபமாகி விடுகின்ரும். கடவுள் காட்சி பெற்றவர்களுக்கு வேறென்றும் தேவையில்லாது போய்விடுகிறது. நெருப்புக்குப் பக்கத்தில் போகிறவர்கள் வெப்பத்தை உணர்கிருர்கள். அங்ஙனம் உள்ளம் உலகத்தை நோக்கிப் போகுமாஞல் அது தன்னிடத்தில் ஏதோ குறை இருப்பதாக உணர்கிறது. மனதை உலகப்பொருள்களினிடத்தில் செலுத்தி நமக்கு நாமே குறையை உண்டுபண்ணிக் கொண்டோம். நாம் உண்டு பண்ணிக் கொண்ட குறையைப் போக்கிக்கொள்ளுதற்கு அரும்பாடுபடுகின்ரும். குறையை நாம் உண்டு பண்ணிக்கொண்டு கடவுள் நமக்குக் குறையை உண்டுபண்ணி விட்டார் என்று கடவுள்மீது பழியைப் போடுகின்ரும். கல்கத்தாவில் அரைப் பைத்தியக்காரன் ஒருவன் இருந்தான். அவன் கூடை ஒன்றை எடுத்துக்கொண்டு கல்கத்தாவின் சந்துகளில் உள்ள ஓடுகளையெல்லாம் பொறுக்கிக் கொண்டு வந்து ஓரிடத்தில் குவியலாகக் குவித்தான். ஒரு குண்டாந்தடியை எடுத்துக் கொண்டு அக்கழியால் ஓடுகளை நொறுக்கினுன். தனக்கு உதவிக்கு வேறு ஒருவரும் வரவில்லையே என்று குறையும் சொல்லிக்கொண்டான். தனக்குத்தானே துன்பத்தை உண்டு பண்ணிக்கொண்டு அதைப் போக்குதற்கு மற்றவர் உதவவில்லையே என்று மற்றவர்களை அவன் குறை கூறியதைப் போன்று நமக்கு நாமே குறையை உண்டுபண்ணிக் கொண்டு அதைக் கடவுள் உண்டுபண்ணிவிட்டார் என்று அவர்மேல் பழியைப் போடுகின்ரும். குறையை உண்டுபண்ணிக்கொண்ட நாம் குறையைப் போக்கிக்கொள்ள முயலவேண்டும். உள்ளத்தை உலகத்தின் மீது திருப்பியதால் நம் உள்ளத்தில் குறை வந்தது. இனி அதை நிறைபொருளாக இருக்கின்ற தெய்வத்தின் மீது திருப்பும்பொழுது அதனிடத்துள்ள குறை போய்விடுகிறது. தெய்வம் நிறைபொருளாக இருக்கின்ருர். அவரிடத்துக் குறையேதும் இல்லை. அவர் நிறைபொருளாக விருப்பதால் விருப்பும் வெறுப்பும் இல்லாதவராக இருக்கின்ருர்.

வேண்டுதல் வேண்டாமை இலான் அடிசேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

என்பது வள்ளுவர் வாக்கு. இறைவன் பூரணன் ஆகின்ருர். பூரணப்பொருளை நினைக்கின்ற உள்ளமும் பூரண நிலையை அடைகிறது. பூரண நிலையை அடைவதுதான் நம்வாழ்வின் குறிக்கோளாகும். சுவாமி விவேகானந்தர் பூரணநிலை நம்மிடத்தில் இருப்பதாகவும் அதைத் தோற்றத்துக்கு எது கொண்டு வருகிறதோ அது கல்வி எனப்படும் என்றும் கூறி இருக்கிருர். குறையுடைய கடவுள் மனிதனுவான் என்றும் நிறையுடைய மனிதன் கடவுள் ஆவான் என்றும் சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். வேதாந்தம் கேட்கும் மனிதன் பூரண நிலையை அடைகின்ருன். தன்னை மனேமயமாகவும், இந்திரியமயமாகவும் எண்ணிக்கொள்பவன் மனிதனுகின்ருன். அப்பொழுது அவன் தன்னை உலகப்பொருள் மயமாகவோ, உடல் மயமாகவோ எண்ணிக்

கொள்கின்றுன். அவ்வுபாதிகளை ஒழித்து விட்டுத் தன்னை அறிவு மயமாக எண்ணிக் கொள்பவன் கடவுள் ஆகிருன். வேதாந்தம் கேட்டு மெய்ப்பொருள் சொருபமாகும்பொழுது வேட்கை ஒழிந்துபோகிறது. மெய்ப்பொருளை அறிய அறிய நம் உள்ளத்திலுள்ள உலக ஆசைகள் ஒழிந்துபட்டுப் போகின்றன. கிழக்குத்திசையை நோக்கி ஒருவன் நடந்துபோகப் போக மேற்குத்திசை தானகவே பின்னணிக்குப் போய்விடும். மெய்ப்பொருள் நாட்டம் அதிகரிக்க அதிகரிக்கப் பொய்ப்பொருள் நாட்டம் மனதை விட்டு அகன்று போய்விடுகிறது.

சாதாரணமக்கள் பொருள்பற்று உடையவர்களாக விருக்கிருர்கள். வேதாந்தி பொருளைச் சம்பாதிப்பதற்கிடையில்அதில் பற்றற்று இருக்கின்றுன். வேதாந்தி பொருளைச் சம்பாதித்து அதை உலக நலனுக்காகப் பயன்படுத்துகின்றன். "பொருளுக்குப் பாலம் போன்று இருக்கக் கற்றுக்கொள்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார். பாலத்தின் ஒரு புறம் புதியஜலம் புகுந்துகொண்டேஇருக்கும். பாலத்தின் மற்ருெரு புறம் புகுந்த ஜலம் வெளியேறிக் கொண்டே இருக்கும். அங்ஙனம் ஒரு புறம் பொருள் வந்து கொண்டேயிருக்க மற்ருெரு புறம் அது உலக மக்களுக்குப் பயன்பட்டுக் கொண்டே இருக்கவேண்டும். சுவாமி விவேகானந்தருடைய தந்தை விசுவநாததத்தர் வழக்கறிஞராகப் பணிபுரிந்து ஏராளமான செல்வம் திரட்டினர். அவர் தாம் தேடிய செல்வத்தை மக்களுக்குப் பயன்தரும் நல்வழிக்குப் பயன்படுத்திக்கொண்டே இருந்தார். அவரை ஒரு வேதாந்தி என்று பகரலாம்

உள்ளத்திலுள்ள உலக ஆசையைப் பரம் பொருள் ஆசையாக மாற்றி அமைப்பது உலக ஆசையை ஒழிப்பதற்கு ஓர் உபாயமாகும். ஒரு சக்தியை மற்ருெரு சக்தியாக மாற்றி அமைப்பதைப் பௌதிக விக்ஞானம் செய்து வருகிறது. சலன சக்தியை மின் சக்தியாக மாற்றி அமைக்கிருர்கள். மின் சக்தியை ஒளிச் சக்தியாக மாற்றி அமைக்கின்ருர்கள். இங்ஙனம் ஒரு சக்தியை மற்ருெரு சக்தியாக மாற்ற முடியுமே தவிர எந்தச் சக்தியையும் அழித்து விடமுடியாது. இனி, நம்மிடத்திலுள்ள உடல் சக்தியை மனேசக்தியாகவும், மனே சக்தியை ஆத்ம சக்தியாகவும் மாற்றி அமைக்க முடியும். புலனடக்கத்தின் மூலம் சரீர சக்தியை மனே சக்தியாக மாற்றி அமைக்கலாம். ஆத்ம தியானத்தின் மூலம் மனே சக்தியை ஆத்ம சக்தியாக மாற்றி அமைக்கலாம். ஆத்ம சக்தி ஓங்கும்பொழுது கடவுள்பற்று அதிகரிக்கிறது. ஆத்ம சக்தி ஓங்கும்பொழுது அறிவு வேட்கை உண்டாகிறது. பேரறிவு நாட்டம் பெருகப் பெருக ஜடப் பொருள் நாட்டம் குறைகிறது. இதைத்தான் 'வேதாந்தம் கேட்டவர் வேட்கை விட்டாரே' என்று திருமூலர் பகர்ந்திருக்கிருர்.

வேதாந்தம் கேட்பதாவது மெய்ப்பொருள் நாட்டம் உடையவராக மாறி அமைவதாகும். ஆத்ம தியானத்தின் மூலம் தங்களை மெய்ப்பொருள் மயமாக மாற்றி அமைக்கின்ருர்கள். சமாதி நிலையில் நாம் முற்றும் மெய்ப்பொருள் மயமாக மாறி அமைந்துவிடுகின்ரேம். சமாதி என்பது ராஜயோகத்தில் எட்டாவது அங்கமாக அமைந்து இருக்கிறது. ராஜயோகத்துக்கு அஷ்டாங்க யோகம் என்பது மற்ருெரு பெயராகும். எட்டு அங்கங்களைக்கொண்டது என்பது அதற்குப் பொருள். யமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன எட்டு அங்கங்கள் ஆகும். யமம், நியமம், ஆசனம், பிராணயாமத்தின் மூலமாகச் சரீரசக்தி விரயமாகாமல் காக்கப்படுகிறது. பிரத்தியாகாரத்தின் மூலமாக மனம் புலன்களின் வழியாகப் புறவுலகுக்குச் செல்லாது தடுத்து நிறுத்தப்படுகிறது. மனம் பொறிகளின் மூலம் புலன்களிடத்துச் செல்லும்பொழுது மனேசக்தி விரயமாகிறது. மனதை எப்படித் தடுத்து நிறுத்தவேண்டுமென்பதற்கு வள்ளுவர் வழி காட்டி இருக்கிருர்.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து

என்பது வள்ளுவர் வாக்கு. ஆபத்து வரும் காலத்தில் ஆமையானது தன்னுடைய கால்கள் நான்கு தலை ஒன்று ஆகிய ஐந்து உறுப்புக்களை உள்ளே இழுத்து ஓட்டுக்குள் பத்திரமாக வைத்துக்கொள்ளுகிறது. அதுபோன்று ஐந்து இந்திரியங்கள் வாயிலாகப் புறவுலகுக்குச் சென்றுகொண்டிருக்கும் மனதை உள்ளே இழுத்துக்கொள்ளவேண்டும். பொறிகளின்

மூலமாகப் புறவுலகுக்கு மனம் செல்லாது தடுப்பதைத்தான் புலனடக்கம் என்றுசொல்லு கின்றோம். புலனடக்கம் பழகப்பழக மனோசக்தி ஒன்றுபடுகிறது. சூரியனிடமிருந்து வருகின்ற ஒளிக்கிரணங்களை லென்சின்மூலமாக ஒருபுள் ளியில் குவியச் செய்தால் அவற்றிற்கு ஆற் றல் அதிகரிப்பதைக் காணலாம். அங்ஙனம் மனோசக்தியைக் குவியச் செய்யும்பொழுது அதற்கும் ஆற்றல் அதிகரிக்கிறது. மனோ சக்தியைக்கொண்டு சித்திகள் செய்வதை நாம் பார்க்கிறோம். மனோசக்தியை ஒன்று திரட்டி எப்பொருளின் மீது செலுத்தினு லும் அப்பொருளைப்பற்றிய உண்மையெல் லாம் விளங்கிவிடும். ஒன்று சேர்க்கப்பட்ட மனோசக்தியை ஒன்றின்மீது நிலையாக நிற்கச் செய்துவிட்டால் அதற்குத் தியானம் என்று பெயர். பரம்பொருளைப்பற்றி மனம் தியா னம் பண்ணும்பொழுது மனது தன்னுடைய சிற்றியல்பை எல்லாம் விட்டொழித்துப் பரம் பொருள்மயமாக ஆகிவிடுகிறது. நெருப்பில் போடப்பட்ட விறகுக் கட்டை நெருப்புமயமாகி விடுகிறது. ஆத்ம சொருபத்தைப் பற்றித் தியானம் செய்யும் மனம் ஆத்ம சொருபமாகி விடுகிறது. மனதை ஆத்ம சொருபத்தோடு லயிக்கச் செய்து மனோநாசம் செய்வதற்குத் தான் நிராசை என்று பெயர்.

'ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈச னோடாயினும் ஆசை அறுமின்கள்' என்பது கோட்பாடு. முதலில் நாம் ஈசன்மீது ஆசையை வளர்க்கவேண்டும். இப்பொழுது நம் மனதில் உலக ஆசைதான் இருக்கிறது. ஈசனிடத்து அதற்கு ஆசை இல்லை. உள்ளத்திலுள்ள உலக ஆசையை ஈசன்மீது உள்ள ஆசையாக மாற்ற வேண்டும். மனதின் கீழான இயல்புகள் மேலான இயல்புகளாக மாறும்பொழுதுதான் தெய்வபக்தி உண்டாகும். இறைவனைப்பற் றிய பெருமைகளைக் கேட்கும்பொழுது தெய்வ பக்தி வளர்கிறது. தெய்வபக்தி நம்மைப் பற்றற்ற நிலைக்குக் கொண்டுபோய்ச் சேர்க் கிறது. நம்மிடத்தில் ஆத்மசக்தி விழித்தெழு கின்றபொழுது உலகப்பொருள்களோடு வைக் கின்ற இணக்கம் தெய்வீக இணக்கமாக மாறு கிறது. இணக்கங்களுள் அது உயர்ந்த இணக்கமாகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அனைத் துயிர்களிடத்தும் தெய்வீக இணக்கம் வைத் திருந்தார். தம் மனைவி சாரதாதேவியாரை யும் தெய்வமாகவே கருதினர். ஒருதடவை ஸ்ரீ சாரதாதேவியார் "நீங்கள் என்னை எவ் வாறு கருதுகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்ததாவது: "அகிலாண்ட நாயகி ஆலயத்தில் விக்கிரக வடிவத்தில் எழுந்தருளி எனக்கு உபாசனா மூர்த்தியாகக் காட்சிகொடுக்கின்றாள். அதே அகிலாண்ட நாயகி சந்திரமணிதேவி வடிவத் தில் இந்த உடலை ஈன்றெடுத்த தாயாகக்காட்சி கொடுக்கின்றாள். அதே அகிலாண்ட நாயகி சாரதாமணிதேவி என்னும் உன் வடிவத்தில் வந்து பணிவிடை பண்ணுவதைக் காண்கின் றேன். அப்பராசக்தியின் மகிமையைத்தான் இத்தனை வடிவங்களில் நான் காண்கின்றேன்." ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் ஆத்மசக்தி ஓங்கியிருந்த தனுடைய விளைவாக இத்தகைய அருள்காட்சி கண்டார். வேதாந்தம் கேட்பவர் இத்தகைய உயர்நிலைக்குத் தம்மை உயர்த்திக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் வேதாந்தம் கேட்டதனுடைய பயனை அடைந்தவராகின் றார். யாவும் தெய்வ மயம் என்கின்ற பாவனை உள்ளத்தில் தோன்றி வருகின்றபொழுது உலக ஆசை ஒழிந்து போகிறது. சரீரசம்பந்த மான உணர்வு உள்ளத்தில் தலையெடுத்து வருகின்றபொழுது உள்ளத்தில் உலக ஆசை இடம் பெற்றிருக்கிறது என்று தீர்மானம் செய்து கொள்ளலாம். சரீர சம்பந்தமான உணர்வை வென்று ஆத்மீக உணர்வை வளர்ப் பதுதான் நம்முடைய லட்சியம் என்பதைத் திருமூலர் இம்மந்திரத்தில் வலியுறுத்துகிறார்.

ஆத்ம சொருபத்தை ஆழ்ந்து தியானித்து அந்தமயம் ஆவோமாக. அம்முயற்சியில் நாம் வெற்றி அடைவதற்கு யாண்டும் தெய்வத்தைச் சார்ந்திருப்போமாக.

வைரத்தைக்கொண்டுதான் வைரத்தை அறுக்க முடியும். அங்ஙனம் தெய்வத்தின் துணைகொண்டுதான் தெய்வீக மாயையைக் கடக்கமுடியும். தெய்வத்தின் துணைகொண்டு தெய்வீக மாயையைக் கடந்துவிட்டால் மெய்ப் பொருள் காட்சி எளிதில் கிட்டுகிறது. மெய்ப் பொருள் காட்சி பெற்றான பிறகு நம் வாழ்வின் லட்சியம் பூர்த்தியாகிறது. (முற்றும்)

இந்தியா ஓர் அஞ்ஞான நாடா?

(சுவாமி விவேகானந்தர் அமெரிக்க ஐக்கியநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவைப் பற்றி போஸ்டன் ஈவினிங் டிரான்ஸ்கிரிப்ட் என்ற பத்திரிகையின் ஆசிரியர் தரும் குறிப்பு.)

அமெரிக்க ஐக்கிய நாட்டில் டெட்ராய்டு என்னும் இடத்துக்குச் சுவாமி விவேகானந்தர் சென்றிருந்தார். ஆங்கு மக்களுடைய மனதில் ஆழ்ந்த நற்பதிவை உண்டுபண்ணி இருந்தார். அவருடைய பேச்சைக் கேட்க எல்லா இனத்தவர்களும் கூடிவிட்டார்கள். அவருடைய தர்க்க ரீதியான கருத்து நிறைந்த எண்ணங்களில் சிறப்பாகத்தொழில் துறையில் இருந்தவர்கள் ஆர்வம் மிகக் காட்டினர். மிகப்பெரிய இசை நாடக அரங்கு ஒன்று டெட்ராய்டில் இருந்தது. அவருடைய சொற்பொழிவு கூட்டத்திற்கு அதுதான் போதுமானதாக இருந்தது. ஆங்கிலத்தில் மிக அழகாக அவர் பேசினர். அவர் மேனி அழகும், குண அழகும் பெற்றிருந்தார். டெட்ராய்டில் வெளிவந்த செய்தித்தாள்கள் அவருடைய சொற்பொழிவை வெளியிடுவதற்கு மிகுந்த இடத்தை ஒதுக்கின. டெட்ராய்டு ஈவினிங் செய்தித்தாளிலுள்ள ஆசிரியர் பகுதியில் குறிப்பிட்டிருப்பதாவது: "இந்நகரில் சுவாமி விவேகானந்தர் நிகழ்த்திய சொற்பொழிவுகளுக்கெல்லாம் மேலானதாக நேற்றிரவு இசை மண்டபத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு மிக அழகாகவும், அருமையாகவும் அமைந்திருந்தது என்பது பெரும்பாலாருடைய கருத்தாகும். நேற்றிரவு அவர் பேசிய பேச்சு மிகத்தெளிவாக அமைந்திருந்ததே அதன் சிறப்புக்குக் காரணமாகும். உண்மைக் கிறிஸ்துவ மதத்துக்கும், போலிக் கிறிஸ்துவ மதத்துக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவுபட விளக்கிக் காட்டினர். தாம் ஒருவிதத்தில் கிறிஸ்தவர் என்றும் மற்றொரு விதத்தில் கிறிஸ்தவர் அல்லாதவர் என்றும் கூறினர். உண்மை இந்து சமயத்துக்கும், போலி இந்து சமயத்துக்கும் உள்ள வேற்றுமையைக் கூறி உண்மை இந்து சமயத்தில் ஒருவனாகவிருக்க நான் விரும்புகிறேன் என்றார். கிறிஸ்தவமதத்தினர் ஏசுநாதரின் உண்மை வாழ்வை எடுத்துப் பேசவேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் கூறினர்.

சமயவெறிக்கு அவர் பேச்சில் இடமில்லை. சிறந்த ஞானப் பணியாளராக விளங்கினர். இந்திய நாட்டு மக்களுக்கும் மற்ற நாட்டு மக்களுக்கும் வாழ்க்கை நடைமுறைத் தத்துவங்களை அவர் எடுத்துக்காட்டிச் செல்லும் வழிமுறைகளைக் கண்டு மத வெறியாளர்கள் வெட்கப்படவேண்டும். ஏசுநாதருடைய மகிமை பொருந்திய வாழ்க்கை வரலாற்றைப் படித்த விவேகானந்தர் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையைக் கூற உரிமை உள்ளவர் அன்றோ? "பொன்னோ வெள்ளியோ உங்களிடம் வைத்துக்கொள்ளாதீர்கள். உங்கள் பணப்பையில் ஒரு செப்புக்காசும் இருக்கக் கூடாது. தேவைக்கு மேல் பொருள்கள் இருக்கக் கூடாது. பிரயாணத்தின்போது உடைமைகள் உங்களுக்கு எதற்கு? உழைப்பு ஊதியம் தருமன்றோ?" இத்தகைய ஏசுநாதரின் உபதேசத்தைப் போன்று அன்றோ அவருடைய உபதேசம் அமைந்திருந்தது! கீழ் நாட்டவர்கள் மேல் நாட்டவர்களாகிய எங்களுடைய வாணிக புத்தியை வெறுக்கிறார்கள். "உங்களுடைய வாணிக புத்தி சமயம் உட்பட நாங்கள் செய்யும் எல்லாச் செயல்களிலும் புகுந்துவிட்டது" என்று சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டார்

கிறிஸ்துவ சமயப் பணியாளர்கள் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றைச் சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். அவர்கள் அதைப் புறக்கணிக்கக் கூடாது. இந்தியாவில் சமயத்துறைக்கு வருபவர்கள் உலக சம்பத்துக்களையும் சிறப்புக்களையும் அறவே துறந்துவிட வேண்டும். இந்தியர் இந்நெறியைக் கடைப்பிடிப்பதால் உலகிலுள்ள எல்லா நாட்டினர்களைக்காட்டிலும் அவர்கள் செம்மையானநெறியுடையவர்கள் என்று விவேகானந்தர் கருதுகின்றார். அவர்கள் அடிமைகளாக இருப்பினும் அவர்களுடைய ஆன்மீகம் குன்றாது உறுதியுடன் விளங்குகின்றது. சுவாமி விவேகானந்தர் டெட்ராய்டில் ஆற்றிய சொற்பொழிவுகளினின்றும் வெளியாகும் உள்ளத்தைக் கவரும் உயர்ந்த கருத்துக்களாவன: சுயநலமற்றன

யாவும் நல்லன என்றும் சுயநலமுள்ளன அனைத்தும் தீயன என்றும் அவர் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

தனக்காக வீடுகட்டிக் கொள்வது சுயநலமாகும். கடவுள் வழிபாட்டுக்காகவும், அன்பர்களைப் பேணுவதற்காகவும் இந்து ஒருவன் கோயில் எழுப்புகின்றான். தனக்காகச் சோறு சமைப்பது சுயநலமாகும். ஆகவே இல்லறத்தான் ஒருவன் தெய்வத்துக்காகவும், விருந்தினர்க்காகவும் உணவு சமைக்கவேண்டும். விருந்து புறத்திருக்க இல்லறத்தான் உண்ணக் கூடாது. விருந்தினர்க்கு அன்னம் படைத்த பின்பே இல்லறத்தான் உண்பான். இத்தகைய உணர்வு இந்திய நாடெங்கும் பரவியிருக்கிறது. உண்ண உணவும், தங்க இடமும் யாருக்கும் கிடைக்கும். அவற்றை வழங்க எந்த இல்லமும் திறந்தே இருக்கும்.

ஜாதிக்கும் சமயத்துக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை. ஒருவனுடைய தொழில் பரம்பரையானது. தச்சனுக்குத் தச்சுத்தொழில் பரம்பரையானது. தட்டானுக்குப் பொன் வேலைத் தொழில் பரம்பரையானது. பூஜாரிக்குப் பூஜைத் தொழில் பரம்பரையானது.

இரண்டுவகைத் தானங்கள் சிறப்பிக்கப்படுகின்றன. ஒன்று அறிவுதானம்; மற்றொன்று உயிர்தானம். கல்வி தானம் முதன்மை பெறுகிறது. ஒருவன் ஒரு மனிதனுடைய உயிரைக் காப்பாற்றலாம். அது சிறந்த செயலே. ஒருவன் மற்றொருவனுக்கு அறிவைத் தரலாம். அது உயிரைக் காப்பாற்றியதை விடச் சிறந்தது. பணத்துக்காகக் கல்விப் பணி செய்வது பாபமாகும். கல்வியை வாணிகம் போன்று வியாபார நோக்கத்தோடு ஒருவன் செய்வானாகில் அவன் இழிந்தவனாகக் கருதப் படுவான். ஆசிரியர்களுக்கு அரசாங்கம் பொருளுதவி செய்கிறது. இது வியாபார நோக்கத்தோடு செய்யும் கல்விப் பணியைவிடச் சற்று மேலானது. நாகரிகம் என்று மக்கள் இப்பொழுது கருதிவருவது நாகரிகம் அன்று என்பதைப் பல இடங்களில் சுவாமி விவேகானந்தர் தெளிவுறுத்தினார். ஒரு நாடு கடல் மீது ஆணை செலுத்தலாம்; பூதங்களை அடக்கி ஆளலாம்; வாழ்க்கைப் பிரச்னைகளைத் தீர்க்கலாம்; அவைகளெல்லாம் நாகரிகத்தின் அறிகுறிகள் அல்ல; தங்களை வென்றவர்களே நாகரிக மனிதர்கள் ஆகின்றார்கள். மற்ற நாட்டினர்களைக் காட்டிலும் இந்தியர்கள் தங்களை வென்றவர்களாக இருக்கிறார்கள். இந்தியர்கள் ஆன்மீகத்துக்கு முதல் இடம் தருகிறார்கள். உலகியலை இரண்டாம் தரமாக வைத்திருக்கிறார்கள் ஆன்மீகம் விழித்தெழுவதே வாழ்வு என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆகவே வாழ்க்கையில் வரும் இன்னல்களை எல்லாம் பொறுமையுடன் ஏற்று அவைகளைப் பொருளற்றவை என ஒதுக்குகிறார்கள். அப்படி இன்னல்களை வெல்லுகின்ற சமயங்களிலெல்லாம் ஆன்ம பலமும் ஆன்ம அறிவும் தங்களிடமிருப்பதை முற்றும் உணர்கிறார்கள். அத்தகைய நாட்டு மக்களிடமிருந்து ஆன்மீக வெள்ளம் பாய்ந்தோடி வெளிநாட்டுச் சிந்தனையாளர்களுடைய நெஞ்சையும், கவனத்தையும் ஈர்க்கிறது. அந்த ஞான அமுதை உண்டவர்கள் உலகத்துயரத்திலிருந்து விடுதலை அடைவார்கள்.

சுவாமி விவேகானந்தரைச் சில கேள்விகள் கேட்டார்கள். அவற்றுள் அவர் மூன்று வினாக்களை எடுத்துக்கொண்டு அவற்றிற்கு விடை தந்தார். இந்தியர்கள் முதலை வாய்க்குள் தங்கள் குழந்தைகளை எறிந்துவிடுவார்களா? இது முதல் கேள்வி. ஜகந்நாதருடைய தேர்க்காலில் வீழ்ந்து இந்தியர்கள் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொள்வார்களா? இது இரண்டாவது கேள்வி. கணவன் இறந்துபோனால் அவனுடைய சடலத்தோடு மனைவியையும் வைத்துத் தீயிலிட்டுப்பொசுக்குவது உண்டா? இது மூன்றாவது கேள்வி. நியூயார்க் நகரின் தெருக்களில் சுற்றிச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் செவ்விந்தியர்களைப் பற்றி வெளிநாடு சென்றிருக்கின்ற அமெரிக்கர் ஒருவரைக் கேட்டால் அவர் என்ன பதில் அளிப்பாரோ அந்த முறையில் அவர் முதல் கேள்விக்குப் பதில் அளித்தார். ஐரோப்பாக் கண்டத்தில் பல கட்டுக்கதைகள் பரவி வருகின்றன அல்லவா? அவைகள் அறிவிலிகளால் நம்பவும்படுகின்றன. அத்தகைய கட்டுக்கதைகள் நகைப்பிற்கு உரியனவே அன்றி அவற்றிற்கு விடை பகர வேண்டுமென்பதில்லை. அந்த முறையில் முதல் கேள்வி அமைந்திருந்ததால் அதற்கு அவர் வேடிக்கையான முறையில் பதில் தந்

தார். குழந்தைகளுடைய தசை மென்மையாக இருப்பதால் நீர் வாழும் உயிர்களுக்கு அதை மென்று ஜீரணம்பண்ணச் சுலபமாக இருக்கும் அன்றோ? அதற்காக இந்தியாவில் முதலை வாய்க்குள் குழந்தையை எறிந்திருப்பார்கள் போலும்! ஜகந்நாதருடைய தேர்க்காலில் உயிர் கொடுக்கிற கட்டுக்கதைக்கு அவர் விடை தந்தார். இந்தியாவில் திருவிழாவின் பொழுது தேர் இழுப்பதைப் புண்ணியமாகக் கருதி அப்பணியைச் செய்வார்கள். அப்பொழுது கயிற்றின் பிடி நழுவிச் சில சமயம் யாராவது ஒருவர் தேர்க்காலில் அகப்பட்டு ஒருவேளை மடிந்திருக்கலாம். இச்செய்தி மிகைப்படுத்திக் கூறப்பட்டதைப் பிறநாட்டு நன்மக்கள் நம்பிப் பெரிய அதிர்ச்சி அடைந்துவிட்டார்கள் போலும்! விதவைகளை நெருப்பில் இட்டுப் பொசுக்கும் பழக்கம் இந்தியாவில் இல்லை. கற்பரசிகள் சிலர் தாங்களாகவே விரும்பிக் கணவனுடன் தங்களையும் எறித்துக் கொள்வதுண்டு. அவர்களை உடன்கட்டை ஏறவேண்டும் என்று யாரும் வற்புறுத்துவதில்லை. பெரியவர்கள் வேண்டாம் என்று தடுப்பார்கள். அப்படி உடன்கட்டை ஏறுதல் கூடாது என்று பிரச்சாரம் செய்யப்பட்டது எனினும் தம் கணவரைப் பின்பற்றவேண்டும் என்று கணவனுடன் உடன்கட்டை ஏறுபவர்களை யாரே தடுக்கமுடியும்? அப்படி உடலைத் தஹித்துக் கொள்பவர்களும் முதலில் தங்கள் கைகளைத் தீயிலிட்டு அவற்றைப் பொறுத்துக்கொள்வார்கள். அதன் பிறகுதான் உடன்கட்டை ஏற அனுமதிக்கப்படுவார்கள். கற்புடைய மகளிர்கள் கணவனுடன் தங்கள் வாழ்க்கையை முடித்துக்கொண்டு செல்வது இந்திய நாட்டில் மட்டுமன்று, எல்லா நாட்டிலும் நிகழ்கிறது. இந்தியாவின் விதவைகளை யாரும் எரிப்பதில்லை. விதவைகளை மட்டுமல்ல, சூனியக்காரிகளையும் அவர்கள் எரிப்பதில்லை. சூனியக்காரிகளை எரிப்பதில்லை என்று சுவாமி விவேகானந்தர் கடைசியாகக் கூறிய செய்தி ஐரோப்பியர்களுக்கு மனதில் நன்ருகத் தைக்கக்கூடிய குத்தலேயாகும்.

சுவாமி விவேகானந்தர் பேசிய தத்துவங்களை ஆராய்ச்சிபண்ணும் முயற்சி இப்பொழுது தேவை இல்லை. அவர் பேசிய தத்துவத்தின் பொதுவான கருத்து அவரவர்கள் முன்னேறுவதற்கு அவரவர்கள் முயன்ருக வேண்டும் என்பதாம்.

பூரணத் தன்மையை எட்டுவதற்கு ஒவ்வொருவரும் போராடியே ஆகவேண்டும். இவ்வாண்டு ஓர் இந்தியப் பேரறிஞர் லாவெல் ஸ்தாபனத்தைத் துவக்கி வைத்தார். அவ்வறிஞர் முசும்தார் அவர்களாவார்கள். அவர் துவக்கி வைத்த நற்காரியத்தைப் பூர்த்தி செய்வதற்குச் சகோதரர் விவேகானந்தர் வந்திருப்பது சிறப்புக்குரியதே. இந்த நாட்டைப் பார்க்க வந்த புதியவராவார் அவர். அவர் இந்நாட்டுக்குப் புதியவரெனினும் இந்நாட்டு மக்களுக்குச் சகோதரராகவே நடந்துகொள்கிருர். இந்துமதத்தின் சாராம்சத்தை அவர் சர்வமத மகாசபையில் விளக்கியது அற்புதமாக இருந்தது. சுவாமி விவேகானந்தர் உள்ளத்தைக் கவரக்கூடிய தோற்றப்பொலிவு உடையவர். இந்தியத் தத்துவம் ஆளுக்கு முதல் இடம் தருவதில்லை. அது உண்மைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறது. சர்வ சமயப் பெரும் மன்றத்தில் மக்கள் கடைசிவரையில் இருக்க வேண்டும் என்பதற்காக நிகழ்ச்சிநிரலில் விவேகானந்தருடைய பேச்சைக் கடைசியில் வைப்பது வழக்கம். ஒருசமயம் பேச்சு வன்மை இல்லாத ஒரு சொற்பொழிவாளர் நீண்டநேரம் பேசிவிட்டார். மக்கள் நூற்றுக்கணக்கான பேர் கூட்டத்திலிருந்து எழுந்துபோக ஆரம்பித்துவிட்டார்கள். அப்பொழுது அக்கூட்டத்தின் தலைவர் எழுந்திருந்து இறுதியில் சுவாமி விவேகானந்தர் சிறிதுநேரம் உரையாற்றுவார் என்று அறிவிப்புச்செய்தார். அப்வறிவிப்பைக் கேட்டதும் அக்கூட்டத்தில் கூடியிருந்த நாலாயிரம் மக்களும் சுவாமி விவேகானந்தரின் பதினைந்து நிமிஷப்பேச்சைக்கேட்பதற்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரம் அமைதியாகவும், ஒழுங்காகவும், மகிழ்ச்சியுடனும் காத்திருந்தார்கள். பொதுக்கூட்டம் நடைபெறும்பொழுதெல்லாம் அக்கூட்டத்தின் தலைவர்கள் கூட்டத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கும், கூட்டத்தினரை நிறுத்தி வைப்பதற்கும் சுவாமி விவேகானந்தர் பேச்சு கடைசியில் இருக்கும் என்று கூறும் முறையைக் கையாண்டார்கள்.

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

5. சீதை செய்தது

கூர்த்த அறிவுடைய சொல்லின் செல்வன் கூறும் முதல் அடையாள மொழி:

"தாயே! உன்னிடம் தெரிவிக்கும்படி எம் பெருமான் என்னிடம் கூறிய முதல் செய்தியைக் கேட்பாயாக. 'தாய் உரைகொண்டு தந்தை தந்த இந்த வனவாசம் சில நாட்களில் முடிந்துவிடும். அவ் வனத்தில் போகும் வழி மிகவும் கொடுமையானதாகும். எனவே நான் திரும்பும்வரையில் நீ இங்கு என் தாயர்க்கு ஏற்ற பணிவிடைகளைச் செய்துகொண்டு அயோத்தியில் இருப்பதே நல்லது' என்று நான் சீதையிடம் சொன்னேன். அதற்குப் பதில் சொல்பவள் போன்று, உடனே மரவுரி தரித்துக்கொண்டு, தன்னைவிட்டு நான் பிரிவேன் என்று சொன்னதால் தன் உயிர் பிரிந்து விட்டு உடல்மட்டும்தான் இருக்கின்றது என்று சொல்லும்படியான நிலையில், நான் பிரிந்து போவதாகச் சொன்னதற்கு என்மேல் ஏற்பட்ட கோபத்தோடும், அவ்வாறு பிரிந்துவிடுவேனோ என்ற அச்சத்தோடும் என் அருகில் வந்து அவள் நின்றதையும், அனுமனே! அவளிடம் நீ தெரிவிப்பாயாக."

சொல்லின் செல்வனின் இச்செய்தியைக் கம்பன் கவியில் காண்போம்.

"நடத்தல் அரிதாகும் நெறி; நாள்கள் சில; தாயர்க்கு
அடுத்த பணி செய்து இவண் இருத்தி" என, அச்
[சுற்று,
உடுத்த துகிலோடும், உயிர் உக்க உடலோடும்,
எடுத்த முனிவோடும், அயல் நின்றதும் இசைப்பாய்".

— உருக்காட்டுப் படலம் 60.

[நெறி-காட்டில் செல்லும் வழி; நாள்கள் சில-ராமன் தான் வனவாசம் போவது பதினான்கு ஆண்டுகளாயினும், அவற்றைக் குறைத்துச் 'சில நாட்களே' என்று சீதைக்குத் தோன்றும்படிகூறுகின்றான்; அச்சுற்று-ராமன் தன்னை விட்டுப்பிரிந்துவிடுவானோ என்று பயந்த; உயிர் உக்க உடல்-உயிர் பிரிந்த உடல்; முனிவோடும்-கோபத்தோடும்.]

இந்த அயோத்தியா காண்டக் காட்சியில் ராமன் அனுமனிடம் சொல்லி அனுப்பிய பகுதி வேறு, இங்கு அனுமன் சீதையிடம் கூறிய பகுதி வேறு என்பதை எளிதில் கண்டுகொள்ளலாம்.

ராமன் அனுமனிடம் குறிப்பிட்ட நிகழ்ச்சியில் அயோத்தியினின்றும் வனவாசத்திற்காக ராமன் புறப்பட்டபோது அவனுக்கும் சீதைக்கும் நடந்த உரையாடலின் ஒரு பகுதி கொடுக்கப்பட்டுள்ளது:

ராமன் : அயோத்தியின் அரண்மனையில் என்னுடன் இருந்து இன்பம் தந்த நீ இப்போது வனத்திற்கு வருவதால் எல்லையற்ற துன்பத்தை எனக்குத் தரப்போகின்றாய்! எனவே நீ வனத்திற்கு வரவேண்டாம்.

சீதை : பெறற்குரிய பேரரசை இழந்து பெருங்கானகம் போகும் தங்களுடன் நான் வருவதுதான் துன்பம் தருவதாகுமோ? என்னைப் பிரிந்தபின் தங்களுக்கு எல்லாம் இன்பமாக அமையுமோ?

இந்த உரையாடலை, ராமன் கூறியபடி அனுமன், சீதைக்கு நினைவூட்டாமல் வேறொரு நிகழ்ச்சியை அனுமன் தெரிவித்ததாகப் பார்த்தோம்.

ராம தூதன் ஏன் இந்த மாற்றம் செய்தான்? அசோக வனத்தில் அனுமன் கண்ட சீதை தன் செயல்களுக்காகத் தன்னைத்தானே நொந்துகொண்டிருக்கின்றாள். வஞ்சகமானின் பின் வள்ளலைப் போகும்படி செய்ததும், மகனைப் போற்றவேண்டிய மைத்துனனை மனம் நோகக் கடிந்து பேசி மன்னவன் பின் விரட்டியதும் சீதையின் உள்ளத்தை அரித்துக் கொண்டேயிருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில் அவளிடம்,

"அன்றே ராமன் உன்னிடம் சொன்னான் 'நீ வனத்திற்கு வந்தால் மிகுந்த துன்பத்திற்குக் காரணமாவாய்' என்று; அதை நீ கேட்காததோடு, ராமன் மனம் வருந்தும்படி உன்னைத்தவிர மற்றவையெல்லாம் அவனுக்கு இன்பம் தருமோ என்றும் கேட்டாயல்லவா? இப்போது என்ன நடந்தது பார்! ராமன் சொன்னது நடந்துவிட்டதல்லவா? உன்னுடைய முரட்டுத்தனமான பிடிவாதத்தினால் ஏற்பட்ட

விபரீதங்களைப் பார்த்தாயல்லவா?'' என்று கேட்பதுபோன்று அந்நிகழ்ச்சியை நினைவு படுத்தினால், அது வெந்த புண்ணில் வேலைச் சொருகுவது போன்றிருக்கும் என்று எண்ணியே இதனை விட்டுவிட்டு, சீதையின் மனம் புண்படாத வண்ணம் வேறொரு நிகழ்ச்சியை அவளுக்கு எடுத்துரைக்கின்றான் அனுமன். சீதையிடம் அனுமன் கூறிய பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள, ராமன் வனம் புறப்பட்ட போது சீதையும் மரவுரிதரித்து அவன் அருகில் நின்ற காட்சியை, ராமனே சீதையோ மறந்திருக்க முடியாது. 'வனத்தில் சீதையைப் பிரிந்திருக்கின்ற நிலையில் ராமன் தன்னுடன் கானகம் புறப்பட்ட சீதையின் செயலை மனத்தில் நினைத்து உருகுகின்றான்' என்ற செய்தி சீதைக்கு எவ்வளவு பெரிய மனநிறைவைத் தரும் என்று நினைத்துப்பார்த்தே அனுமன் இச்செய்தியை ராமன் தன்னிடம் சொன்னதாகச் சீதையிடம் தெரிவிக்கின்றான். அனுமனின் அறிவுக் கூர்மைக்கும் சொல்வன்மைக்கும் நல்ல சான்றாக இப்பகுதி காணப்படுவதைப் பார்க்கின்றோம்.

6. சீதை கேட்டது

இனி, அனுமன் சீதையிடம் தெரிவிக்கும் இரண்டாவது அடையாள நிகழ்ச்சியைக் கேட்போம்:

"தந்தையின் அருளொடும் ஆசியொடும் மன்னனாக முடிசூடப்போன நாளில், எதிர்பாராதவகையில் முடிசூட்டுவைபவம் தடைபட்டுக் கானகம் புறப்படவேண்டி வந்தது. சீதையும் இலக்குவனும் தொடர அயோத்தியின் கோட்டை வாயிலைக் கடந்து வெளியே வந்தவுடன், ஒரு குழந்தையின் மனத்துடன் "காடு வந்து விட்டதோ?" என்று சீதை என்னிடம் கேட்டாள்! இதனையும் அவளுக்கு நீ நினைவூட்டுவாயாக!" என்று ராமன் தன்னிடம் கேட்டுக்கொண்டதாக அனுமன் கூறிய செய்தியைக் கம்பன் கவியில் காணலாம்:

"நீண்ட முடிவேந்தன் அருள் ஏந்தி நிறை செல்வம்
பூண்டு, அதனை நீங்கி, நெறிபோதல் உறு நாளின்
ஆண்டு அநகர் ஆரையொடு வாயில் அகலா முன்
'யாண்டையது கான்?' என இசைத்ததும்
[இசைப்பாய்"
—உருக்காட்டுப்படலம் 61.

[நீண்ட முடிவேந்தன்-தசரதன்; நிறை செல்வம் பூண்டு-அயோத்தியின் மன்னனாக முடி சூட்டிக்கொள்ளத் தயாராகி; அதனை நீங்கி-முடிசூட்டு விழா நின்று, அயோத்தியைவிட்டு வெளியேறி; நெறிபோதல் உறு நாளின்-காடு நோக்கிப்புறப்பட்ட அன்று; அநகர்-அயோத்தி; ஆரை-கோட்டை மதில்]

ராமபிரான் குறிப்பிடும் இந்நிகழ்ச்சிபற்றி அயோத்தியா காண்டத்தில் செய்தி எதுவும் இல்லை. ராமன், இலக்குவன், சீதை மூவரும் அயோத்தியின் கோட்டை வாயில்களைக்கடந்தவுடனே சீதை ராமனிடம் 'காடு வந்துவிட்டதோ' என்று கேட்டதாக அயோத்தியா காண்டத்தில் நகர் நீங்கு படலத்தில் காணப்படவில்லை. நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தில் அதுபற்றிப் பேசாமல் பின்னொரு சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட பாத்திரங்களின் மூலம் அந்நிகழ்ச்சிபற்றி வெளியிடுவது கம்பன் தன் காப்பியத்தில் பல இடங்களில் கையாளும் நாடக உத்தியாகும். சீதையின் குழந்தை மனம் பற்றிக் கம்பன் காட்டும் இந்நிகழ்ச்சி நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகள் கண்ணகியின் குழந்தை மனத்திற்குச் சான்றாக எடுத்துக் கூறும் ஒரு நிகழ்ச்சியை நமக்கு நினைவூட்டுகின்றது:-

பதி எழு அறியாப் பழங்குடிகள் நிறைந்த புகாரில் பிறந்து ஆடகமாடம் கடந்து அறியாமல் வாழ்ந்த கண்ணகி, தன் கணவன் கோவலனுடன் மதுரைக்குப் புறப்பட்டுப் போகும் காட்சியை விவரிக்கின்றார் இளங்கோவடிகள். புகார் நகரத்தை விட்டு, காலைச் சூரியன் எழுவதற்கு முன் இருவரும் வெளியேறுகின்றனர். நகரத்தின் வாயில்களைக் கடந்ததும், சிறிது தூரம் கூடச் சென்றிருக்கமாட்டார்கள்; அதற்குள் கண்ணகியின் மண்மகள் அறியாத வண்ணச் சீறடிகள் நோக ஆரம்பித்தன. தன் பாதங்கள் நோவதுபற்றிக் கணவனிடம் தெரிவித்தால் அவன் மனம் வருந்துவானே என்று அதனை மறைத்துவிடுகின்றாள் கண்ணகி. புகார் நகரத்தின் அருகிலேயே மதுரை நகரமும் இருக்கும் என்று நினைத்துக்கொண்டிருந்தவள் கண்ணகி. எனவே புகாரின் வாயிலைக் கடந்தவுடன் 'மதுரை மாநகர் வந்துவிட்டதோ' என்று கோவலனிடம் கண்ணகி கேட்கின்

ருள். அவ்வாறு தான்கேட்பதை வைத்துத் தன் பாதங்கள் நோவதால்தான் தான் இவ்வாறு கேட்கின்றதாகத் தன் கணவன்நினைத்து விடக்கூடாது என்று நினைத்து, முகத்தில் புன்சிரிப்பை வரவழைத்துக்கொண்டு கேட்டாளாம் அக் கற்புக் கடம்பூண்ட கண்ணகித் தெய்வம்.

> "முதிராக் கிளவியின் முள்ளெயி றிலங்க
> மதுரை மூதூர் யாதென வினவ"

—சிலப்பதிகாரம். நாடுகாண் காதை 40—41

அயோத்தியின் கோட்டை வாயிலைக் கடந்தவுடன் கானகம் வந்து விட்டதோ என்று கேட்ட சீதைபற்றிப் படிக்கும்போது புகார் நகர எல்லையைத்தாண்டியதும் மதுரை மூதூர் வந்து விட்டதோ என்று கேட்ட கண்ணகியின் நினைவு நமக்கு வருவதில் வியப்பொன்றுமில்லை.

சீதையைப்பற்றிய என்னென்ன நினைவுகள் ராமன் மனத்தில் பசுமையாக இருக்கின்றன என்பதைச் சீதை அறிந்தால், அசோகவனச் சூழ்நிலையில் அவளுக்கு அவை உற்சாக மூட்டும் 'டானிக்காக' அமையும் என்று எண்ணியே அனுமன் சீதையிடம் ராமனின் நினைவுகள் பற்றிப் பேசுகின்றான். அப்படிப் பேசும் போது ராமன் தன்னிடம் தெரிவித்த செய்திகளை அப்படியே சீதையிடம் தெரிவித்துவிடாமல் சீதையின் அப்போதைய மனநிலைமைக்கு ஏற்றவற்றையே வெளியிடுகின்றான் அனுமன். ராமன் கூறியவற்றில் மிதிலை நிகழ்ச்சிகளை அனுமன் முழுவதும் விட்டுவிடுகின்றான். ஒருவேளை அனுமனின் பிரம்மச்சரிய இயல்பு மிதிலையின் காதல் காட்சிகளுக்கு அவ்வளவு முக்கியத்வம் தரவில்லை போலும்! இதுவரை அனுமன் கூறிய இரண்டு செய்திகளில் ஒன்று தான் ராமன் கூறியது; இன்னொன்று ராமன் குறிப்பிட்ட அயோத்தி நிகழ்ச்சிகளினின்றும் சிறிதுவேறுபட்டது. இனி மூன்றாவதாக அனுமன் எடுத்துக்கொள்ளும் நிகழ்ச்சி ராமன் கூறாமலே விட்டுவிட்ட ஒன்றாகும். ஆனால் இந்த நிகழ்ச்சிபற்றி எப்போதாவது ராமன் அனுமனிடம் பேசியிருக்கவேண்டும். அது அனுமன் உள்ளத்தில் பசுமையாகப் பதிந்து விட்டதால் சீதையிடம் சொல்வதற்கு அந்நிகழ்ச்சியைத்தேர்ந்தெடுத்துக் கொள்கின்றான் மாருதி. எனவே சீதையிடம் தெரிவிக்கும்படி ராமன் தன்னிடம் சொல்லியனுப்பிய ஆறு செய்திகளில் காணப்படாத ஒன்றை அனுமன் சீதைக்கு ராமன் தெரிவித்ததாக எடுத்துரைக்கின்றான். அந்த மூன்றாவது அடையாள மொழியை அடுத்த பகுதியில் பார்ப்போம்.

7. சீதை சொன்னது

ராமனையும் சீதையையும் இலக்குவனையும் தேரில் ஏற்றிக்கொண்டு அயோத்தியைக் கடந்து ஆரண்யத்தின் வாயிலில் வந்து நிற்கின்றான் மாசில்லாத மனமுடைய மந்திரி சுமந்திரன். அவர்களிடமிருந்து விடைபெறும் தருணத்தில், நாட்டிலுள்ளோர்க்கு அவர்கள் தரும்செய்தி என்ன என்று காட்டில் உறையப் போகும் மூவரையும் அவன் கேட்கின்றான். அவர்களுள் சீதை சொல்லி அனுப்பிய செய்தியைக் கேளுங்கள்: "அமைச்சர் பெருந்தகையே! வேந்தனுக்கும், என் மாமியர் மூவருக்கும் வணக்கங்களைத் தெரிவிப்பீராக! பின்னர், என்னையே நினைத்துக் கொண்டிருக்கும் என் தங்கையரிடம் நான் வளர்த்து வந்த பொன் நிறமான நாகணவாய்ப் பறவைகளையும் கிளிகளையும் நன்குபாதுகாக்கும்படி நான் சொன்னதாகச் சொல்வீராக!" அறந்தரு சிந்தையனாகிய தன் கணவன், ஆனபேர் அரசிழந்த கடுமையையும், பூழி வெம் கானம் புகுந்த கொடுமையையும் மனத்திற்கொள்ளாமல், அவன் அருகிலிருப்பதே தனக்கு அறம் என்று நினைத்துத் தான் வளர்த்த பறவைகளைப் பாதுகாக்கும்படி தங்கையருக்குச் செய்தி அனுப்பிய சீதையின் வார்த்தைகள் ராமன், இலக்குவன், சுமந்திரன் ஆகிய மூவருடைய உள்ளங்களையும் உருக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை. தன் வரலாறுபற்றி அனுமனிடம் ராமன் தெரிவித்த காலத்தில் இதுபற்றி உணர்ச்சி வசப்பட்டுப் பேசியிருக்கவேண்டும். எனவேதான் அடையாள நிகழ்ச்சிகளாக ராமன் குறிப்பிட்ட செய்திகளில் இந்தச் செய்தி இல்லாத போதிலும், இது மிகவும் பொருத்தமானது என்று கருதிச் சீதைக்கு இதனை எடுத்துரைக்கின்றான் வாயு மைந்தன். காலின் மைந்தனின் கருத்தோவியத்தைக் கம்பனின் சொல்லோவியத்தில் காண்போம்.

என் அரிய தேர் தரு சுமந்திரன், 'இசைப்பாய்
வள்ளல் மொழி வாசகம்' எனத், துயர் மறந்தாள்,
'கிள்ளையோடு பூவைகள் வளர்த்தல் கிள' என்னும்
பிள்ளை உரையின் திறம் உணர்த்துதி பெயர்த்தும்
— உருக்காட்டுப் படலம் 62.

[என் அரிய தேர்: குற்றம் காணமுடியாத தேர்; "வள்ளல் மொழி வாசகம் இசைப்பாய்"- வளமையான சொற்களைக் கொண்ட செய்தியைக் கூறுவாயாக! துயர் மறந்தாள்: சீதை, வனம் செல்லும் துன்பம்பற்றி நினையாதவள். கிள்ளையொடு பூவைகள்: கிளிகளையும், நாகணவாய்ப் பறவைகளையும். வளர்த்தல் கிள: நன்கு வளர்க்கும்படி சொல். பிள்ளை உரை: குழந்தை மனமுடையோர் கூறும் வார்த்தைகள்.]

வான்மிகத்தில் இல்லாத இந்த அடையாள மொழி நாடகத்தைக் கம்பன் அற்புதமாகப் படைத்துள்ளதைக் கண்டோம். முதல் நூலில் இல்லாத போதிலும் ஆழ்வார்கள் ஏற்றுக் கொண்டு பாசுரம் பாடிய இப்பகுதியைத்தன் நூலில் சேர்த்துக்கொள்ள முற்பட்டான் கம்பன். இதனை, ராமன், சீதை, அனுமன் இவர்களின் இயல்புகளையும் எண்ண ஓட்டங்களையும் நாம் அறிந்துகொள்வதற்கான கருவியாகக் கம்பன் படைத்துள்ளது தெளிவு. அதிலும் சிறப்பாக அனுமனின் கூர்த்த அறிவிற்கு ஓர் அளவுகோலாக இந்தப் பகுதி விளங்குகின்றது. சீதையின் மேல் ஓரளவு குறை சொல்ல வாய்ப்புள்ள அயோத்தி நிகழ்ச்சிகளை ராமன் தன்னிடம் சொல்லியனுப்பியிருக்கவும், அவற்றை ஒதுக்கிவிட்டுச் சீதைக்குச் சிறப்புத் தரும் நிகழ்ச்சிகளையே சிறப்பித்து அவளிடம் கூறியது அனுமனின் அறிவுக் கூர்மைக்குச் சான்றாக அமைகின்றது. ராமனின் பார்வையில், மிதிலை நிகழ்ச்சிகளில் சற்றுச் சிறப்பாகக் காணப்படுவது வில்லை ஒடித்தவன் தன் மனத்தில் நிறைந்தவனாக இல்லாதிருந்தால் சீதை தன் உயிரை விட்டுவிட நினைத்த செய்திதான். ஆனால், அசோகவனத்தில், பிரிவுத்துயரில் மூழ்கித் தன் உயிரைப் போக்கிக்கொள்ள முயன்ற நிலையில் இருந்த சீதையிடம் அந்தக் கதையைச் சொல்வது பொருத்தமற்றது என்று அனுமன் புறக்கணித்து விட்டான். இதுவும் அவனுடைய அறிவுத் தெளிவினைப் பறை சாற்றுகின்றது எனலாம். அனுமன் ஒதுக்கிய செய்திகள் எவ்வளவு பொருத்தமற்றவையோ, அவைபோன்று அவன் கூறிய செய்திகள் மிகப் பொருத்தமானவையாக அமைந்துள்ளன தெளிவு ராமன்-சீதை வாழ்வில் அழகான கட்டங்களை அவை நமக்கு நினைவூட்டுகின்றன. சுந்தர காண்டக்கதை அசோக வனத்தைச் சுற்றியே நடைபெற்றாலும் ராமாயணத்தின் அழகான பகுதிகள் எல்லாம் அதில் பேசப்பட்டுள்ளதற்கு இவ் அடையாள மொழிகள் எடுத்துக்காட்டாகின்றன. இவ்வாறு ராமன்—சீதை வாழ்க்கையில் உள்ள அழகான பகுதிகளை எடுத்துச் சொல்லி அவர்கள் இருவருக்கும் புத்துயிர் ஊட்டி, அதன் மூலம் தன் அறிவின் அழகான இயல்பினையும் வெளிப்படுத்த அனுமனுக்கு வாய்ப்புக்கொடுக்கப்பட்டதால்தானோ என்னவோ இக்காண்டம் சுந்தர காண்டம் என்று பெயர் பெற்றது.

இச்சுந்தர காண்டத்தில்தான் சீதையின் தவ மகிமை விளங்குகிறது. தவத்தின் மூலம் அவள் தன்னைப் புதுப்பித்துக் கொள்கின்றாள். அவளிடமிருந்த தவத்தின் அழகைக் காணும் வாய்ப்பு அனுமனுக்குக் கிட்டியது. அசோக வனத்திலிருந்த சீதையின் மேனி அழகில் இராவணன் உள்ளத்தைக் கொள்ளை கொடுத்தான். ஆனால் சீதையின் தவ அழகை ரசிக்கும் தகுதி இராவணனிடமில்லை. அசோக வனத்திலிருந்த சீதையின் தவ அழகைக்கண்டு ஆனந்தம் அடையும் தகுதி அனுமனுக்கே இருந்தது. தவத்தின் உச்சநிலையிலிருந்த சீதையின் தவப் பொலிவைக் கண்டு தன்னைப் பாக்கியவான் என்று அனுமன் கருதுகின்றான். சீதையிடமிருந்த இந்தத் திவ்ய தேஜஸைக் காணும்பேறு ராமனுக்கோ, லக்ஷ்மணனுக்கோ வாய்க்கவில்லை. இக்காண்டத்தில் சீதையின் திவ்ய தேஜஸ் வெளிப்படுவதாலும் இக்காண்டம் சுந்தரகாண்டம் என்னும் பெயர் பெற்றது. ராம சேவையில் ஈடுபட்ட அனுமன் சீதையின் தவ அழகைக் காணும் பேறு பெற்றதில் வியப்பு ஒன்றும் இல்லை. ராமனுக்குக் கிடைக்காத பேறு ராம பக்தனுக்குக் கிடைத்தது.

அல்லற்பட்ட சீதையின் மனம் ஆறுதல்பெற அடைமொழிகள் சொன்ன அனுமன் பின்னர் என்ன செய்தான் என்பதை அடுத்த பகுதியில் பார்ப்போம்.

வாசுதேவ மனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

கேள்வி: ஆத்மாவை அகண்ட வஸ்துவாக ஒப்புக்கொண்டால் நீங்கள் கூறிய மூன்றுலக்ஷணங்களும் ஆத்மாவில் இருக்க வேண்டுமல்லவா? அவை ஆத்மாவில் காணப்படவில்லையே. எப்படியெனில் ஒவ்வொருவரும் 'நான் இந்த இடத்தில் இருக்கிறேன், அந்த இடத்தில் இல்லை' என்று சொல்வதால் ஆத்மாவுக்கு தேச அளவு (தேச பரிச்சேதம்) உண்டு என்று ஏற்படுகிறது. 'நான் இன்ன வருஷத்தில் பிறந்தவன், அதற்கு முன்னால் நான் இல்லை' என்கிற அனுபவம் இருப்பதால் ஆத்மாவுக்குத் கால அளவு (கால பரிச்சேதம்) உண்டு என்று தெரிகிறது. 'நான் பிராமணன், க்ஷத்திரியன் அல்லன்' என்கிற எண்ணம் இருப்பதால் வஸ்து அளவும் (வஸ்து பரிச்சேதம்) ஆத்மாவுக்குக் உண்டு என்று ஆகிறது. ஆகவே மூன்றுவிதமான அளவுக்கும் உட்படாதது ஆத்மா என்று எங்ஙனம் கொள்ளமுடியும்?

பதில்: ஆத்மா, அனாத்மா இவைகளின் லக்ஷணங்களைப் பற்றி முன்பே விளக்கப்பட்டிருக்கிறது: "ஆத்மா பரிபூரணன், அனாத்மா அளவுக்கு உட்பட்டது. அனாத்மாவாகக் கண்ணுக்குப் புலனாகிற இப்பிரபஞ்சம் முழுவதும் வாஸ்தவமன்று; அது வெறும் தோற்றம், கனவு போன்றது. இந்தத் தோற்றம் மாயை, அவித்தை, விகாரம் என்று சொல்லப்படுகிறது. அவித்தையால் ஏற்பட்ட இந்த மாயா விகாரங்கள் எல்லாம் சித்தின், அறிவின் வெளிப்பாடுகளே செயல்களே ஆகும்." இவ் விளக்கம் நன்கு புரிந்திருந்தால் இந்தச் சந்தேகம் எழாது. இந்த உபநிஷத வாக்கியங்களை மீண்டும் ஆராய்வோம்

தேசம், காலம், வஸ்து ஆகியவைகளின் அளவு, எல்லை, கட்டுப்பாடு இந்தச் சரீரத்திற்குத்தான். இங்கு நான், நான் என்று விவகரிப்பது சரீரத்தைக் குறித்து ஆகும். நான் என்று சொல்லுவது இந்தச் சரீரத்தைத் தாங்கியிருந்து இந்திரியங்களைச் செயல்படுத்தி, பஞ்சபூதங்களையும் அனுபவிக்கிற, தெரிந்துகொள்கிற உயிர்ப் பொருளாகிய ஆத்மாவே ஆகும். ஆயினும் சரீரமும் ஆத்மா என்று சில இடங்களில் விவகரிக்கப்படுகிறது. மேலே சொன்ன மூன்று அளவுகளும் இந்தத் தேகத்திற்குத்தான். பரிபூரணமான பரமாத்மாவுக்கு எந்த அளவும் இல்லை. காலமும், தேசமும், காரணகாரிய விவகாரமும், அளவற்ற நாம ரூபங்களும், வஸ்துக்களும் அந்த ஆத்மாவிடத்திருந்து தோன்றியவை. குடம் இருக்கிறது, துணி இருக்கிறது, சுவர் இருக்கிறது, களஞ்சியம் இருக்கிறது, பூமி இருக்கிறது, ஜலம் இருக்கிறது, ஒளி, வாயு, ஆகாசம் இருக்கின்றன என்று பஞ்சபூதங்களையும் அவைகளால் ஆக்கப்பட்ட பிரபஞ்சத்தையும் 'இருக்கிறது' என்று அவைகளில் உள்ள ஆத்மா உணரப்படுவதால் ஆத்மா எங்கும் நிறைந்தது ஆகிறது. ஆகையால் ஆத்மாவுக்குத் தேச பரிச்சேதமில்லை. இப்படிச் சர்வவியாபகமான ஆத்மாவுக்குக் கால அளவும் இல்லை. சென்ற காலம், எதிர்காலம் என்கிற அளவுகள் அதற்கு இல்லை. சென்ற காலத்திலும் எதிர்காலத்திலும் உள்ள ஆத்மா ஒரே வஸ்து ஆகையால் அது நிகழ்கால அளவுக்கும் உட்பட்டதன்று. ஆதி அந்தமற்ற பொருளுக்குக் காலம் என்பது இல்லை. ஆத்மா எல்லா வஸ்துக்களாகவும் இருப்பதால் வஸ்து பரிச்சேதமும் அதற்கு இல்லை.

இனி, வஸ்துக்கள் பல இருக்கின்றன. இந்தப் பேதம் மூன்று வகையானவை. ஸஜாதீய பேதம (ஒரே வகையில் பேதம்:-மாமரம், புளிய மரம் மரம் என்கிற முறையில் இரண்டும் ஒன்றேயானாலும் அவைகள் தனித் தனியானவை.) விஜாதீய பேதம் (வெவ்வேறானவை: மரம், கல் இரண்டும் வெவ்வேறு வஸ்துக்கள்) ஸ்வகத பேதம் (ஒரே மரத்திலேயே உள்ள கிளை, இலை, புஷ்பம், காய் போன்ற பேதங்கள்) இந்த மூன்றுவித பேதங்களால் வஸ்துக்கள் பலவாக விளங்குகின்றன. இந்த மூன்றுவித பேதங்களும் ஆத்மாவினிடத்தில் இல்லாததால் அது வஸ்து பேதமற்றது.

கேள்வி: மேலே சொன்ன மூன்றுவித பேதங்களும் ஆத்மாவுக்கு இருப்பனவாகக் காணப்படுகிறதே. எப்படியெனில் ஒரே சைதன்யம் பிரம்மசைதன்யம், ஈஸ்வரசைதன்யம், கூடஸ்த

சைதன்யம், ஜீவசைதன்யம் என்று பிரிந்து இருக்கிறதல்லவா? இது ஸஜாதீய பேதம் ஆகிறது. பிரம்மம் ஆத்மசொருபம், பிரபஞ்சம் அனத்ம சொருபம் என்று சொல்லப்படுவதால் விஜாதீய பேதமும் இருக்கிறது. பிரம மத்தில் ஸத்-சித்-ஆனந்தம் என்று மூன்று இருப்பதால் ஸ்வகத பேதம் இருக்கிறது என லாம். ஆக மூன்று பேதங்களும் ஆத்மாவில் இருக்கின்றன. இவைகளை இல்லை என்று எங்ஙனம் மறுப்பது?

பதில்: ஆகாசம், வெட்டவெளி ஒன்றே. ஆயினும் மஹாகாசம், கடாகாசம் (குடத்தினுள் உள்ள ஆகாசம்) என்று பிரித்துப் பேசுகிறோம். வெட்ட வெளியில் புதிய கட்டடங்கள், நகரங்கள் தோன்றுகின்றன. அந்த வெட்டவெளி என்ன ஆயிற்று? நிறைந்துள்ள தொட்டி தண்ணீரில் ஒரு சதுர அடி கனபரிமாணம் உள்ள பொருள் ஒன்றை அமிழ்த்தினால் ஒரு கன அடி தண்ணீர் வெளியேறிவிடும். அப்போதுதான் அப்பொருள் தொட்டியினுள் இருக்க முடியும். அதுபோல அல்லாமல் வெட்ட வெளியில் தோன்றும் கட்டடங்களில் ஆகாசம் ஊடுருவி நிற்கிறது. வாயுவோ அக்னியோ அங்ஙனம் ஊடுருவ இயலாது. அதிசூக்ஷ்ம தன்மையின் விளைவு இது. வெட்ட வெளி இல்லாத இடம் இல்லை. அது நகர்வதற்கு வேறு இடம் இல்லை. இடம் முழுவதும் ஆகாசத்தில் அடங்கியிருக்கிறது. விஷயத்தை விளக்குவதற்காக நாம் கட ஆகாசம் என்கிறோம். அதனால் அது பிரிவுபட்டுவிடவில்லை. இரண்டு பொருள்களாக இருக்கவில்லை. அதுபோன்றே மாயையின் காரணத்தால் ஒரே சைதன்யம் பிரம்மம், ஈசுவரன் என்றும், அவித்தையின் காரணத்தால் கூடஸ்தன், ஜீவன் என்றும் வெவ்வேறாகத் தோன்றுகிறது. விசாரித்துப் பார்த்தால் வாஸ்தவத்தில் சைதன்யம், ஆத்மா ஒன்றுதான். பல விதமாகத் தோன்றுவது வாஸ்தவமல்ல, ஆத்மா ஒன்றுதான். ஆகையால் ஆத்மாவுக்கு ஸஜாதீய பேதம் இல்லை.

ஆத்மாவில் விஜாதீய பேதமும் இல்லை, கயிறு இல்லாமல் பாம்பு தோற்றமும் இல்லை. ஆகாசமில்லாமல் நீலநிறமில்லை. அதுபோன்று ஆத்மா இல்லாமல் அனத்மா இல்லை. அதிஷ்டானத்தைத் தவிர (ஆதாரம்) அதில் ஆரோபிதம் (ஏற்றப்பட்ட, பொய்க்காட்சி) எல்லாம் பொய். அதிஷ்டானம் ஒன்றுதான் உண்மைப் பொருள். பொய் என்பது மலடியின் பிள்ளை, முயல் கொம்பு என்பவைபோல மூன்று காலங்களிலும் இல்லாதது ஆகும். அனத்மாவானது வாஸ்தவத்தில் இல்லாததால் விஜாதீய பேதமும் இல்லை. ஸ்வகத பேதமும் (ஒன்றுக்குள்ளேயே உள்ள பேதமும்) இல்லை என்பது எப்படியெனில் ஆத்மா, சாக்ஷி, கூடஸ்தன், பாரமார்த்திகன், பிராக்ஞன், பிரம்மம், சத், சித், ஆனந்தன், நித்யன், ஏகன், பரிபூரணன் என்கிற உடன்பாட்டு விளக்கங்களாலும், பருமனற்றது, அளவில்லாதது, இரண்டற்றது, எண்ண முடியாதது, மாறுதல் இல்லாதது, நாசமற்றது, செய்கையற்றது, செய்விக்கும் தன்மையற்றது என்பன போன்ற எதிர்மறை விளக்கங்களாலும் ஆத்ம சொருபத்தைவிளக்க முயன்றார்களேயன்றி அது வெவ்வேறு சொருபம் என்பதில் தாத்பர்யமில்லை, அர்த்தமில்லை. இவ்வளவு விதமாக விளக்கியும் அது சிந்தைக்கு எட்டாத பொருளாகவே உள்ளது. ஆகவே ஆத்மா மாறுதல் இல்லாதது, பிரிவு அற்றது, தனக்குள் வித்தியாசம் அற்றது என்பதை அறியவும். ஆக ஆத்மாவில் ஸ்வகத பேதமும் இல்லை.

கேள்வி: சத், சித், ஆனந்தம்ஆகிய இம்மூன்று சொற்களும் வெவ்வேறு பொருள்களைக் குறிப்பவை. கை என்ற ஒரே பொருளைக் குறிக்கும் ஹஸ்தம், கரம், பாணி இம்மூன்று சொற்களும் பர்யாயங்களாக (ஒரே பொருளைக் குறிக்கும் பலபதங்கள், பல சொற்கள்) இருப்பதுபோல சத் சித் ஆனந்தம் என்கிற சொற்கள் ஒரே பொருள் கொண்டவை அல்ல. மரம், இலை, மலர், பழத்தைக் கொண்டது என்று சொல்லும்பொழுது வெவ்வேறு பொருள்களான இலை, மலர், பழம் ஆகியவைகளைத் தன் சொருபத்தில் உடையது என்று பொருள்கொள்கிறோம். இதுபோன்றே சத் சித் ஆனந்தம் என்ற சொற்களால் ஆத்மாவைக் குறிக்கும்பொழுது ஆத்மா தன்னுள் மூன்றுவித பேதம், லக்ஷணம் உடையது என்று ஏன் கொள்ளக் கூடாது?

பதில்: தீபம் சிவப்பான, உஷ்ணமான, ஒளி

உடையது என்கிறோம். ஆயினும் தீபத்தில் ஸ்வகத பேதம் இல்லை. ஏனெனில் சிவப்பான ஒளி வேறு உஷ்ணமான ஒளி வேறு அல்ல. இரண்டும் ஒன்றே. அது ஏக காலத்தில் சிவப்பாகவும் இருக்கிறது, உஷ்ணமாகவும் இருக்கிறது. அதுபோன்றே சத் சித் ஆனந்தம் என்ற ஆத்மவிளக்கத்திலும் பேதம் இல்லை.

கேள்வி: அப்படியானால் மரம், இலை, புஷ்பம், பழம் ஆகியவைகளைக் கொண்டது என்று கூறும்போது மரத்திலும் தன்னுள் வேற்றுமை இல்லை என்று சொல்லலாம் அல்லவா?

பதில்: மரத்தில் எல்லாப் பாகங்களும் இலை என்று சொல்லமுடியாது. ஓர் இடத்தில் மரம் இலையாகவும், மற்றோரிடத்தில் அது புஷ்பமாகவும் மற்றோர் இடத்தில் பழமாகவும் இருக்கிறது. ஆகவே அங்கு ஸ்வகத பேதம் இருக்கிறது. ஆத்மா சச்சிதானந்த மயம் என்ற இடத்தில் எல்லா அம்சங்களும் சத் சித் ஆனந்தமயமாக இருப்பதால் ஆத்மாவில் வேற்றுமை கிடையாது. தீப ஒளி சிவப்பானது, உஷ்ணமானது என்ற இடத்தில் தீபம் முழுவதும் சிவப்பாகவும் உஷ்ணமாகவும் ஒளிமீயமாகவும் இருப்பதால் அதில் தன்னுள் வேற்றுமை, பிரிவினை உடையதன்று அல்லவா?

கேள்வி: அப்படியானால் சுருதி ஆத்மா சத் ரூபம், சித் ரூபம், ஆனந்த ரூபம் என்றெல்லாம் ஏன் அடிக்கடி உபதேசிக்கிறது, விளக்குகிறது? ஓர் உபதேசத்தில் ஆத்மாவை அறிந்து விடலாமே.

பதில்: இங்ஙனம் விளக்கும் சுருதியின் தாத்பர்யம் என்ன என்பதை அறிந்துகொள்வோம். உலகில் எல்லாரும் ஆத்மாவைப் பற்றிச் சரியாக அறிந்துகொள்வதில்லை. ஆத்மாவில் உள்ள ஸத் (என்றும் இருத்தல்) தன்மையை உலகத்தின் பேரிலும், சித் (அறிவு உணர்ச்சி) தன்மையை ஜடமான புத்தியின் பேரிலும் ஆனந்தம் என்ற தன்மையைத் தன் மனைவி மக்கள் பேரிலும், இவ்வுலகத்தின் அஸத்தையும், புத்தியின் ஜடத் தன்மையையும் மனைவி மக்களின் துன்பதுயரங்களையும் சச்சிதானந்த மயமான ஆத்மாவின் தன்மைகள் என்றும் அவித்தையின் காரணத்தால் கருதுகிறார்கள், துன்பப்படுகிறார்கள். அதனால் ஸ்தூலப் பொருளாகிய இந்த ஜகத் சத்தியமானது, மனம் புத்தி முதலியன சேதனங்கள், மனைவி மக்கள் ஆனந்தமளிப்பவர்கள், நான் அழியக்கூடியவன், நான் துக்கிப்பவன், நான் அறிவில்லாதவன் என்று கருதிக்கொண்டு துக்கப்படுகிறான். இந்தப் பிராந்தியை, மயக்கத்தை நிவர்த்திக்கவே வேதமாதா ஹே! ஜீவர்களே, நீங்கள் சச்சிதானந்த சொருபங்கள் தாம் என்பதை விளக்கி உணர வைக்கத்தான் ஆத்மா சத் ரூபமானது. பொய்யன்று, சித் ரூபமானது ஜடமன்று, ஆனந்த ரூபமானது துக்கம் உள்ளதன்று என்று மீண்டும் மீண்டும் சொல்லி ஜீவர்களின் மயக்கத்தை அறியாமையை நிவர்த்திக்க முயல்கிறது. இதுவே வேதமாதாவின் குறிக்கோள்.

உலகில் சிலர் ஸத்வம் (சத்தன்மை) என்பது ஆத்மாவிலுள்ள தர்மம் என்றும், சித்வம் (அறிவுப் பொருளாய் இருத்தல்) சுகம் இவ்விரண்டும் ஆத்மாவின் குணங்கள் என்றும் சொல்லி ஆத்மா சச்சிதானந்த ரூபமல்ல என்று வாதாடுகிறார்கள். அதை மறுப்பதற்காகவும் வேதம் ஆத்மா சச்சிதானந்த ரூபம் என்று விளக்கி அதை ஸ்தாபனம் செய்கிறது. சாஸ்திரங்களின் தாத்பர்யம், அதன் கருப்பொருள், அதன் குறிக்கோள் என்ன என்பதைத் தீர்மானிப்பதில் ஆறுவித ஹேதுக்களைக்கொண்டு முடிவுகட்டுவார்கள். இதன்மூலமும் சுருதிக்கு ஆத்மாவின் அகண்டார்த்தத்தில்தான் தாத்பர்யம் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். ஆத்மா அகண்டமானது என்பது சுருதியைக்கொண்டு நிரூபிக்கப்பட்டது. சுருதிப்பிரமாணம் என்பது நம் முன்னோர்களின் அனுபவப்பிரமாணம்தான். என் அப்பா, தாத்தா மிகப் பெரியவர் என்றுமட்டும் சொல்வதில் பிரயோஜனமில்லை. நாமும் பெரியவர் ஆகவேண்டும். ஆத்மதத்துவங்களை உணர்ந்து, அதன் ஏகத்வமயமாக நாமும் ஆகவேண்டும்.

ஞானிகள் ஞானவிசாரத்தின் மூலம் இந்த ஏகத்வ நிலையை அறிகிறார்கள். பக்தனோ விசுவாசத்தின் மூலம் கடவுள் ஒருவரையே பற்றி நிற்கிறான். அவனுக்கு அனைத்தும் கடவுளே. இப்பிரபஞ்சத்தை மாயை, விகாரம், பொய்த் தோற்றம் என்று ஞானி சொல்கிறான். பக்தன் அவைகள் ஈசனுடைய விளையாட்டு என்கிறான். ஞானமும் பக்தியும் ஒன்றே.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-158

908. **तत्वमर्थस्वरूपिणी** தத்வம் அர்த்த ஸ்வருபிணீ— சிவனுக்கும், ஜீவனுக்கும் உள்ள இணக்கமயமாக அமைந்திருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

தத் என்னும் பதம் பரவஸ்துவைக் குறிக்கிறது. த்வம் என்னும் பதம் ஜீவாத்மனைக் குறிக்கிறது. மகாவாக்கியங்களுள் ஒன்ருக விருப்பது தத்வமஸி என்பதாம். இந்த மகா வாக்யத்துக்குத் துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய மூன்று சம்ப்ரதாயக்காரர்களும் மூன்றுவிதமான அர்த்தங்களைக் கொடுத்திருக்கிருர்கள். மூன்றுவித அர்த்தங்களும் தத்துவத்துக்கு ஒத்திருக்கின்றன. சாதனத்துக்கும் பயன்படுகின்றன. ஆதலால் அவைகளுக்கிடையில் முரண்பாடு இல்லை. தத் என்னும் பதம் பரவஸ்துவைக் குறிக்கிறது. த்வம் என்னும் பதம் ஜீவாத்மனைக் குறிக்கிறது. அஸி என்னும் பதம் பரம்பொருளுக்கும் ஜீவாத்மனுக்கும் உள்ள இணக்கத்தைக் குறிக்கிறது. இனி தத் என்னும் பதம் முதல் வேற்றுமை நான்காம் வேற்றுமை ஆரும்வேற்றுமை ஆகிய மூன்று வேற்றுமைகளுக்கும் பொதுவானதாம். இதற்குத் தமிழ்மொழியில் சான்ருென்று எடுத்துக்கொள்ளுவோம். அவன் புஸ்தகம் என்னும் வாக்கியத்தில் அவன் என்னும் சொல் முதல் வேற்றுமைக்கும் ஆரும் வேற்றுமைக்கும் பொதுவானதாம். அவன் புஸ்தகம் என்னும் வாக்கியம் அவனுடைய புஸ்தகம் என விரிவுபடுகிறது. ஆதலால் அப்படிச் சொல்லுவதில் இலக்கணப்பிழை இல்லை. இனி அவன் என்னும் சொல்லை முதல்வேற்றுமையாக வைத்துக்கொண்டால் அவன் மனிதனல்லன் புஸ்தகமயமாயிருப்பவன் என்னும் கருத்து வருவிக்கப்படுகிறது. வடமொழியிலோ தத் என்னும் பதம் மூன்று வேற்றுமைகளுக்கும் பொதுவாயிருப்பதால் அதன் உட்பொருளை மூன்று சம்ப்ரதாயக்காரர்களும் சிரமமின்றி அவரவர் கோட்பாட்டுக்கு ஒப்ப இந்த மகாவாக்கியத்தில் காண்கின்றனர்.

துவைத மதத்தை ஆராய்ச்சிக்கு முதலில் எடுத்துக்கொள்வோம். துவைத சம்ப்ரதாயப்படி ஜகத், ஜீவன், பரம் ஆகிய மூன்று வஸ்துக்களும் தனித்தனித் தத்துவங்களாம். அவை யாண்டும் நிலைத்திருக்கும் முப்பொருள்களாம். மூன்று பொருள்களும் நிலைபேறு உடையவைகள் என்னும் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டது துவைத மதம். ஜீவாத்மன் ஜகத்தில் கட்டுண்டு கிடக்கிறது. இந்தத் தளையை உடைத்துத் தள்ளிவிட்டுப் பரத்தைச் சென்றடைவது ஜீவாத்மனுடைய குறிக்கோளாகும். ஆதலால் தத் என்னும் பதத்தை நான்காம் வேற்றுமையில் பொருள்படுத்திக்கொண்டு அதற்காக 'நீ இருக்கிருய்'என்று தத்துவமஸி என்னும் பதத்தை இந்தச் சம்ப்ரதாயம் விளக்குகிறது. ஜீவாத்மாவாகிய மானுடா, நீ ஜகத்துக்காக வாழ்ந்திருப்பவன் அல்லன். பரத்தைச் சென்றடைவதற்காகவே வாழ்ந்திருக்கின்ருய். ஆதலால் ஜகத்திலே நீ கட்டுண்டு இருக்கவேண்டாம். அதினின்று உன்னை விடுவித்துக்கொண்டு பரமாத்மனைச் சென்றடைவாயாக. ஆங்கு அப்பரமனுக்கு யாண்டும் பணிவிடை பண்ணிக்கொண்டு இருப்பது நீ வாழ்க்கையில் கொண்டுள்ள குறிக்கோளாம். ஆகவே இக்கொள்கையை அடிப்படையாக வைத்துக்கொண்டு சாதனங்கள் புரிகின்ற ஜீவாத்மன் ஜகத்தில் கட்டுண்டு கிடத்தல் என்னும் பந்தத்தினின்று தன்னைப் பிரித்தெடுத்துக்கொள்கிருன். இது வாழ்க்கையின் குறிக்கோள் என்பதற்கு ஐயமில்லை.

தத்துவம் அஸி என்னும் மகாவாக்கியத்தில் தத் என்னும் பதத்தை ஆரும் வேற்றுமையாக வைத்துக்கொண்டு அதனுடையதாக நீ இருக்கிருய் என்று விசிஷ்டாத்வைதம் வியாக்யானம் பண்ணுகிறது. ஒரு விசேஷத்தோடு கூடிய அத்வைதமே விசிஷ்டாத்வைதம் என இயம்பப்படுகிறது. ஜகத்தும் ஜீவனும் ஒன்று சேர்ந்து பரமாத்மனுக்கு விராட் சரீரமாக அமைந்திருக்கின்றன. சரீரமும் சரீரியும் யாண்டும் ஒன்றுபட்டிருப்பதால் அது அத்வைதம். அப்படி ஒன்றுபட்டு இருப்பினும் சரீரத்துச்கு மிக்கானாக சரீரியாகிய பரமாத்மன் இருக்கிருன். இக்கோட்பாட்டைப் பேத, அபேதம் (பேதாபேதம்)என்னும் சொல்லைக் கையாண்டு அந்தச் சம்பிரதாயம் விளக்குகிறது. சரீரமும்

சரீரியும் யாண்டும் பிரியாதிருப்பதால் அது அத்வைத நிலை. அப்படிப் பிரியாதிருப்பினும் சரீரமே சரீரியாய் விடாது என்பது உண்மை யாதலால் இந்த விசேஷத்தை அடிப்படை யாகக் கொண்டிருப்பது விசிஷ்டாத்வைதமாம். அகிலாண்டங்களும் அவைகளில் இடம் பெற்றிருக்கின்ற அனந்தங்கோடி ஜீவாத்மாக்களும் ஒன்று சேர்ந்து புருஷோத்தமனுக்குச் சரீரமாக நிலைத்திருக்கின்றன என்பது இந்தச் சம்பிரதாயத்தின் கோட்பாடாம். இந்நிலையில் ஜீவாத்மன் தன்னை ஜகத்துக்குரியவன் என்னும் அக்ஞானத்தினின்று விடுவித்துக் கொண்டு தன்னை யாண்டும் பரமனுக்குச் சொந்தம் என்கின்ற அனுபவத்தைப் பெறுவது அந்த மதத்தின் இலட்சியமாகிறது.

மூன்றாவதாக அத்வைத சம்பிரதாயத்தின் விளக்கம் வருமாறு: தத் என்னும் பதம் முதல் வேற்றுமையைக் குறிக்கிறது. அதன்படி தத்துவமஸி என்னும் மஹாவாக்யம் ‘நீ அது வாயிருக்கிறாய்’ எனப் பொருள்படுகிறது. பரிணமித்து வரும் ஜீவாத்மாவானவன் ஸ்தாவரம், ஜங்கமம் ஆகிய எண்ணிலடங்காத விகாரங்களை அப்போதைக்கப்போது எடுத்திருந்தான். அவன் மரம், செடி, கொடிகளாக ஒருகாலத்தில் இருந்தான். புழு பூச்சிகளாக மற்றொரு காலத்திலிருந்தான். பறவைகளாகவும், விலங்குகளாகவும் இன்னும் சில காலங்களில் இருந்து வந்தான் இப்பொழுது அவன் மனிதனாக இருந்து வருகிறான். எங்ஙனம் கீழ்ப் பிறவிகளிலுள்ள வியக்திகளைக் கடந்து மேலே வந்தான பிறகு அந்த வியக்திகள் ஜீவாத்மனுக்குச் சொந்தமாக மாட்டாவோ, அதே விதத்தில் மானுட வியக்தியும் அவனுக்குச் சொந்தமாகாது. சச்சிதானந்தமே அவனுடைய நிஜ சொரூபம்.

இதற்குச் சான்றொன்று எடுத்துக் கொள்வோம். கடல் நீர் ஆவியாகக் கிளம்பி மேலே போகிறது. வானத்தில் அது கார்மேகம், வெண்மேகம் முதலிய விகாரங்களைப் பெறுகிறது. அடுத்தபடி முடுபனி, மஞ்சு, மழைத் துளி, ஆலங்கட்டி, உறைபனி ஆகிய விகாரங்களை அது பெறுகிறது. மழையாக நிலத்தில் வீழ்ந்து நதி என்னும் வடிவெடுத்துக் கடலைப் போய் எட்டுகிறது. கடலை அடையும் பரியந்தம் இந்த விகாரங்கள் யாவும் உண்மையே. கடலை அடைந்தான பிறகு அது நதி என்னும் பெயரை இழந்து பழையபடி கடல் என்னும் பெயரைப் பெறுகிறது. அதே பாங்கில் தத்த்வமஸி என்னும் மகாவாக்கியத்தை அனுஷ்டானத்தில் கொண்டு வரும்படி தூண்டுகிற அத்வைத சம்பிரதாயம் ‘அஹம் பிரம்மாஸ்மி’ என்னும் மஹாவாக்கியத்தைக் கடைப்பிடிக்கும்படி தூண்டுகிறது. மேகமாகவும், மஞ்சுவாகவும், மழை நீராகவும், கிணற்று நீராகவும் இருந்து வருகிறபொருள் அடைந்துள்ள நிலைகளைக் கருத்தில் வாங்காது ‘நான்ஜலம்’ என்று சொல்லுமாகில் அது உண்மையே. அதே பாங்கில் ஜீவாத்மன் தான் படைத்துள்ள விகாரத்தைக் கருத்தில் வாங்காது அஹம்பிரம்மாஸ்மி-நான் மெய்ப்பொருளே என்னும் உண்மையை நிலை நாட்டுவதே சாலச் சிறந்தது என்று அத்வைதம் சாட்டுகிறது. ஆகவே தத்துவமர்த்த சொரூபிணியாக அம்பிகை யாண்டும் இருந்து வருகிறாள் என்னும் கோட்பாடு இந்த மூன்று சம்பிரதாயங்களுக்கும் பொதுவானது. அந்தந்தச் சம்பிரதாயங்களுக்கேற்ற சாதனங்களுக்கும் இந்த நாமம் உதவுகிறது.

909. **सामगानप्रिया** ஸாமகானப்ரியா— ஸாமகானத்தில் பிரியம் வைத்திருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

நான்கு வேதங்களுள் சாமவேதம் முற்றிலும் இன்னிசைக்கு ஒத்தது. வேதம் ஓதுதலில் நியதி ஒன்று உண்டு. சுரத்துடன் வேதம் ஓதுவது முறை. அந்தந்தப் பகுதிக்கேற்ற சுரம் முறையாக அமைந்திருக்கிறது. அதை மிகைப் படுத்துதலும், குறைப்பதும் ஒவ்வாது. வேதங்களுக்குப் புறம்பாயுள்ள ஸ்தோத்திரங்கள், கீர்த்தனங்கள் ஆகியவைகளுள் இன்னிசையை அவரவர் விருப்பத்துக்கேற்ற பிரகாரம் மிகைப் படுத்தவும், குறைக்கவும் செய்யலாம். பல சந்தர்ப்பங்களில் பக்திப்பாடல்களும்பிரார்த்தனைகளும் ஸ்தோத்திரங்களும் பின்னணிக்குத் தள்ளப்படுகின்றன. பாடுபவனுடைய சங்கீர்த்தனத் திறமையே முன்னணியில் வந்து நிற்கிறது கானம் முக்கியமானதா அல்லது கருத்து முக்கியமானதா என்பது கேள்வி. கானம் யாண்டும் கருத்துக்கு உட்பட்டதாயிருக்கவேண்டும். இதை ஓர் உபமானத்தைக்

கொண்டு விளக்குதல் வேண்டும். அரசரீதியில் பெரிய உத்தியோகம் வகிக்கும் அதிகாரி ஒருவனுக்கு உடல் காப்பாளன் நியமிக்கப்பட்டிருக்கிறான். அந்த உத்தியோகஸ்தன் அணிந்திருக்கும் உடையைவிட ஆடம்பரமான பாங்கில் அவனுடைய உடல் காப்பாளன் மிகப் பகட்டாக உடையை அணிந்திருப்பான். பாமரர்கள் அந்த உடல் காப்பாளனையே உத்தியோகஸ்தன் என்று விஷயம் தெரியாமல் பொருள்படுத்திக்கொள்வார்கள். உண்மையில் பகட்டாக உடையணிந்திருக்கும் உடல் காப்பாளன் உத்தியோகஸ்தனுக்கு உட்பட்டவனேயாம். உத்தியோகஸ்தனுடைய நிலையில் வேதங்கள் இருக்கின்றன. உடல் காப்பாளன் நிலையில் இன்னிசைகள் அமைந்திருக்கின்றன. இசையின் ஆலாபனத்தில் வேதத்தின் உட்பொருள் மூழ்கிப் போகலாகாது. ஆதலால் தான் சந்தஸ் என்னும் முறையைக்கொண்டு வேதம் ஓதுதலில் இன்னிசையை அளவுபடுத்தி வைத்திருக்கின்றனர். ஆதலால் சங்கீத வித்வான் ஒருவன் தன்னுடைய இன்னிசைத் திறமையை வேதம் ஓதுதலில் காட்ட முடியாது. இசை யாண்டும் சந்தஸுடன் வேதம் ஓதுதற்கு உட்பட்டதாம்.

சாமவேதத்தில் அமைந்துள்ள சந்தஸ் அற்புதமானது. கானத்தின் மகிமை சாமவேதம் ஓதுதலில் உச்சநிலைக்கு வந்திருக்கிறது. பேச்சில் பொருள் அழகும், சொல்லழகும் சேர்ந்திருப்பதற்கு நிகராக சாமகானம் பண்ணுகின்றபொழுது மேலான கருத்தும் இன்னிசையின் சிறப்பும் ஒன்று சேர்ந்து மிளிர்கின்றன. கண்ணனுடைய குழலோசை உயிர்களனைத்தையும் அவன் மயம் ஆக்கியதற்கு நிகராகச் சாமகானத்தைக் கேட்கும் உயிர்களனைத்தையும் அது தன்மயம் ஆக்குகிறது. அனந்தங்கோடி உயிர்கள் மயமாக அன்னை பராசக்தி இலங்குகின்றாள். அத்தனைகோடி உயிர்களும் சாமகானத்தைக் கேட்டு மகிழ்வுறுகின்றன வென்றால் அன்னை பராசக்தியே சாமகானத்தில் பிரியம் மிக வைத்திருக்கிறாள் என்பது வெளிப்படை.

910 **सोम्या** ஸோம்யா— ஸோம யாகத்திற்குத் தகுதி வாய்ந்தவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

சோம யாகத்தில் யஜமானன் தனக்குரிய அனைத்தையும் தெய்வத்துக்கு உரியவைகளாக்குகின்றான். அதன் விளைவாக அவன் சொத்துக்களனைத்தும் பொது நலனுக்கே உரியவைகளாகப் படைக்கப்படுகின்றன. யார் ஒருவன் இந்தப் பாங்கில் அகங்காரம், மமகாரத்தை அறவே ஒதுக்கித் தள்ளுகிறானோ அவன் அம்பிகைக்குரிய அரிய செல்வனாகிறான். அம்பிகையும் அவன்மீது தன்னுடைய பூர்ண அனுக்ரஹகத்தைப் பொழிகின்றாள். அங்ஙனம் அம்பிகையின் அனுக்ரஹத்துக்கு உரிய மூர்த்தியைக் காண்பதும் அம்பிகையின் தரிசனமும் ஒன்றேயாம். எங்கெல்லாம் சுயநலத்தியாகம் ஓங்குகின்றதோ ஆங்கெல்லாம் அம்பிகையின் சாந்நித்யம் மிளிர்கிறது என்பது கோட்பாடு.

சிவனார் யாண்டும் அம்பிகைக்கு அபின்னமாயிருப்பதால் அவருக்கு ஸோமா என்னும் பெயர் வந்தது. சிவமும் சக்தியும் சேர்ந்துள்ள அமைப்பில் யாண்டும் மங்களம் திகழ்கிறது. இயற்கையே இதற்குச் சான்றாகிறது. உடல் மயமாயிருப்பது அம்பிகை. உயிர் மயமாயிருப்பது அண்ணல் சிவன். இங்ஙனம் உடலும் உயிரும் ஒன்று சேர்ந்து மங்களகிரமான மூர்த்தியாக மிளிர்வதற்குப் பிரபஞ்சம் முழுதும் சான்றாயிருக்கிறது. உடலைவிட்டு உயிர் பிரிந்த சவத்தில் சிவசாந்நித்தியத்தைக் காண முடியாது. ஆனால் உமா மகேசுவரனே இணை பிரியாத உடலும் உயிருமாம். ஆதலால் பிரபஞ்சமுழுதும் யாண்டும் சிவசக்தி சொரூபமாக மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

ஸோமன் என்னும் சொல் சந்திரனைக் குறிக்கிறது. சந்திரன் யாண்டும் இனிமைக்கு இருப்பிடமாயிருக்கிறது. இனிமையோடு கூடிய வெளிச்சத்தைத் தரவல்லது சந்திரன். அதே விதத்தில் அன்னை பராசக்தி யாண்டும் இனிமையும் மங்களகரமானதுமாகிய ஞான வெளிச்சத்தை பரப்பிக்கொண்டிருக்கிறாள் என்பது இந்த நாமத்தின் கோட்பாடு.

ஸோமன் என்னும் சொல் கற்பூரத்தைக் குறிக்கிறது. அதில் மகிமை ஒன்று உள்ளது. எரிந்துபோன கற்பூரத்தில் எஞ்சியிருப்பது ஒன்றுமில்லை. அது தூய்மைக்கு அறிகுறி. பராசக்தி யாண்டும் தூய்மையே வடிவெடுத்தவள் என்பது இந்த நாமத்தின் உட்கருத்து.

குமரகுருபரர்

(வித்துவான். ஆதி. பாலசுந்தரன் M. A.)

கல்வி நல்லொழுக்கத்தை நல்கும். செல்வம் நல்வழியில் வருகின்ற செல்வம், தீயவழியில் வருகின்ற செல்வம் என இருவகைப்படும். தீய வழியில் ஈட்டப்படுகின்ற செல்வத்தை ஆன்ஞோர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்; புறக்கணிப்பார்கள்.

தவருன வழியில் சேர்க்கப்படுகின்ற செல்வம் சேர்த்தவருக்குத் துன்பத்தைத் தரும்; மற்றவர்களுக்கும் இடையூருக முடியும். பழிச் செயல்களைச் செய்து சேர்க்கின்ற செல்வம் ஆரம்பத்தில், இருப்பதுபோல் தோன்றும்; இன்பத்தைத் தருவதுபோல் அமையலாம். ஆனல், இறுதியில் அச்செல்வம் அழிந்து போகும்; துன்பத்தையும் தரும்.

நியாயமானவழியில் செல்லக்கூடிய முறையையும், நியாயமான புத்தியையும் கல்வி தருகின்றது. நியாயமான வழியில் நடப்பவர்கள், நியாயமான முறையிலேயே செல்வம் ஈட்டுவார்கள். செல்வத்தைத் தேடுவதற்குரிய நேர் வழியைக் காட்டுவது கல்வியேயாகும்.

கல்வி இன்பத்தையும் தரும். உண்மையான இன்பம் எது? உடலால் பெறுகின்ற இன்பம் உண்மையான இன்பம் ஆகாது. அப்போதைக்கு அது இன்பமாகத் தோன்றினுலும், பிறிதொரு சமயம் துன்பமாகப் பெருகித் துயரம் உண்டாக்கும்.

சுவையால் அடைகின்ற இன்பம் உண்மையான இன்பம் ஆகுமா? ஆகாது. சுவைப் புலன் இன்பம் தொடக்கத்தில் சுவையாக அமைந்தாலும் பின்னர் துன்பம் தரும்.

கல்வியால் வருகின்ற இன்பமே உண்மையான இன்பம் ஆகும். கல்வியே உண்மை இன்பத்தைத் தரவல்லது. கல்வியின் பயன் சிந்தனைத் திறனை வளர்த்தல் ஆகும். சிந்தனையின் பயனுக அறியக்கூடிய பேருண்மையை நினைத்து மகிழும் இன்பமே உண்மையான இன்பம் ஆகும். சிந்தனையின் பயனுக அனுபவிக்கும் இன்பத்தைப்போல வேறு இன்பம் உலகத்தில் இல்லை.

கல்வியின் பயன் சிந்தனை. சிந்தனையின் விளைவு நினைத்து நினைத்து மகிழ்ச்சியடைவது. சிந்தனை தனிமையைக் கொடுப்பது. தனித்து இருப்பது ஒரு வரப்பிரஸாதம் ஆகும். எல்லாருக்கும் தனித்திருக்கும் வாய்ப்பு அமைவதில்லை. தனித்திருந்து ஒருமுகப்பட்டுச் சிந்திக்கும் புண்ணியம் ஒரு சிலருக்கே வாய்க்கும். தவமுனிவர்கள் தனித்திருந்தார்கள். ஒருமுகப் பட்டுச் சிந்தித்தார்கள். சிந்தனையின் விளைவான இன்பத்தை அனுபவித்தார்கள். இன்னெருவருடன் சேர்ந்து, மற்றவரின் துணை கொண்டு இன்பம் அடையவேண்டுவதில்லை. நமக்கு நாமே, தனித்திருந்து ஆக்கிக்கொள்வதே உண்மையான இன்பம் ஆகும்.

கல்வி வீடும் பயக்கும்—வீடு பேற்றைத் தருவதும் கல்வி. பிறப்பின் லட்சியம் என்ன? மனித சரீரத்தை விடுத்து உயிர் நீங்கும்போது உயிர் எங்கே செல்கிறது? எங்கே செல்ல வேண்டும்? வீடுபேறு என்னும் மோட்சத்தை அடைவதே உயிரின் குறிக்கோள் ஆகும். சரீரத்தைவிட்டு உயிர் நீங்கும். உயிர் பிரியும் என்று சொல்லியிருக்கின்ருர்களே தவிர, எங்கிருந்து வந்ததோ அங்கே உயிர் என்னும் ஆத்மா சேரும் என்று சொல்லியிருக்கிருர்களே தவிர, உயிரின் இலட்சியம் வீடுபேறு அடைதல் என்னும் உண்மையை இந்துமதத்தில் குறிப்பிட்டதுபோல் தெள்ளத் தெளிவாக வேறு எந்த மதத்திலும் குறிப்பிடவில்லை; சுட்டிக் காட்டவில்லை.

வீட்டை அடைவதுதான் லட்சியம் என்ருல், அந்த வீட்டைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டியது, அந்த லட்சியத்தைக் கொண்டுள்ள உயிரின் தலையாய கடமையாகும். அப்படி வீட்டைப்பற்றி அறிவதற்கு அடிப்படையாக அமைவது கல்வியே ஆகும். கல்வி அறிவு இல்லாவிட்டால், வீட்டை அடைய வேண்டும் என்னும் உணர்வு மானிட உயிருக்கு வராது.

மனிதன் நேர்மையாக வாழ்வதற்குரிய நல்லொழுக்கத்தைத் தருவது கல்வி. நல்லொழுக்கத்துடன் தேடக்கூடிய நேர்மையான பண்பைத் தருவதும் கல்வி. இவ்வாறு இவ் உலக வாழ்வுக்குரியவற்றை நல்குவதுடன் கல்வி நின்றுவிடவில்லை. மறு உலக வாழ்வாகிய

மோட்சத்தையும் கல்வியானது தரும். இம்மை, மறுமை இரண்டுக்கும் பயன்தருவது கல்வி.

"எழுமையும் ஏமாப்பு உடைத்து" ஏழு பிறவிகளிலும் கல்வியானது உயிருக்குப் பாது காப்பாக வரும் என்பது ஆன்றோர் கல்வியைப் பற்றிச் சொல்லுகின்ற கோட்பாடு ஆகும்.

மனத்தில் உள்ள அழுக்குகளை — குற்றங் களைப் போக்குவது கல்வி. உடல் அழுக்கை நீராடிப் போக்கலாம். குடல் அழுக்கை மருந்து சாப்பிட்டு நீக்கலாம். உள்ளத்தின் அழுக்கைக் கல்வியால் நீக்கலாம்.

"புறங்கடை நல்லிசையும் நாட்டும்"—கல்வி இவ்வுலகத்தில் ஒருவனுக்கு நல்ல புகழை நிலை நிறுத்தும். புகழ்பெற்று வாழ்வது மானிட வாழ்வின் நேரிய வாழ்வாகும். புகழ்பெற்று வாழக்கூடிய வாய்ப்பு மானிட வாழ்வுக்கு மட் டுமே உண்டு. பிற உயிர் இனங்களுக்குப் புகழ்பெற்று வாழக்கூடிய வாய்ப்புக் கிடை யாது. வாழ்ந்தால் புகழோடுதான் வாழவேண் டும். புகழ் பெறுமல் வாழ்பவர்கள் வாழ்கின்ற வர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

உலகம் தோன்றிய நாளில் இருந்து இன்று வரை தோன்றிய மனிதர்கள் எண்ணிக்கையில் அடங்குவதில்லை. அத்தனை கோடிக்கணக் கான பேர்களிலும் புகழ் பெற்ற ஒருசிலரே மனித சமூகத்தில் நினைவுடன் போற்றப்படு கிறார்கள். தோன்றித் தோன்றி மறைவது அற்பமான உயிர்களின் இயல்பு. அங்ஙனமே மனிதனும் புகழ்பெறுமல் தோன்றி அழிவானு யின் அச்சிற்றுயிர்களுக்கும் அவனுக்கும் யாதொரு வேறுபாடும் இல்லை.

நற்செயலால் வரக்கூடிய புகழே நிலைத்து நிற்கக்கூடியது. நற்செயல்கள் யாவும் செய் வதற்கு அடிப்படையாக அமைவது கல்வியே யாகும். எனவே, கல்வியறிவைக்கொண்டு, செய்கின்ற நற்செயல்களால், சான்றோர்களின் மத்தியில் பெரும்புகழ் ஏற்படுகின்றது. அப் பெரும்புகழே எந்நாளும் நிலைத்து நிற்கக்கூடிய தாகும்.

உறுங்கவல் ஒன்று உற்றுழியும் கை கொடுக்கும்

—இயல்பாக வரக்கூடிய துன்பம் ஒன்று வந்த சமயத்தில் கல்வி கைகொடுத்து உதவும்; துன்பத்தைப் போக்கும்.

வாழ்வில் துன்பம் வருவது இயல்பு. துன் பம் வரும்பொழுது அதனைப் போக்க முயல் வதும் இயல்பு. துன்பத்தை நாமாகவே நீக்க முயலுவோம். நம்மால் நீக்க முடியாவிட்டால், உதவி செய்யக்கூடிய பெரியவர்களின் உத வியை நாடுவோம். நாமாகப் போக்க முயன் றாலும் சரி; பெரியவர்களின் உதவியை நாடி நீக்கினாலும் சரி; அப்படி நீக்குவதற்குப் பேருத வியாக அமைவது கல்வியால் பெறக்கூடிய அறிவேயாகும்.

துன்பம் வரும்போது எவ்வாறு அதனைப் போக்குவது என்னும் சிந்தனைக்கு உதவியாக அமைவது கல்வியேயாகும். எனவே, கல்வி யறிவு இருந்தால், வருகின்ற துன்பங்களை நீக்கலாம். தக்க சமயத்தில் உதவி செய்து மனத்துன்பத்தைப் போக்குவது கல்வியாகும்.

கல்வியின் ஊங்கு இல்லை சிற்றுயிர்க்கு உற்றதுணை

குறைந்த வாழ்நாளை உடைய மக்களுக்குக் கல்வியைக் காட்டிலும் சிறந்த துணை வேறு எதுவும் இல்லை.

அர்த்தம், தர்மம், காமம், மோட்சம் ஆகிய புருஷார்த்தங்களை அடைய உதவுவது கல்வி யேயாகும். சமூகத்தில் நல்ல கௌரவத்தைக் கொடுப்பதும் கல்வியேயாகும். மனக்கிலே சத்தை நீக்குவதும் கல்வியாகும்.

இவ்வாறு எல்லாவகையிலும் பெரிதும் உதவுவது கல்வி. ஆகவே, மக்களுக்குக் கல் வியைத்தவிர வேறு சிறந்த துணை இல்லை.

இறைவனைப் போற்றுதல் வேண்டும் என் பது ஆன்றோர் துணிபு. அவ்வாறு போற்று வதற்கு மனத்தில் உள்ள மாசு நீங்குதல் வேண்டும். கல்வி மனமாசை அகற்றக்கூடிய சிறந்த சாதனம் ஆகும். எனவே இறைவனை வழிபடுவதற்கு உபாயமாக, கடவுள் வாழ்த் துக்குப் பிறகு கல்வியைப்பற்றிக் குமரகுருபர சுவாமிகள் இயம்புகின்றார்.

மனிதர்களாகப் பிறந்தவர்களுக்குக் கல் வியே தக்க துணையாகும். மக்களுக்கு இன் பம் பலவழிகளில் கிடைக்கிறது. செல்வ வசதியால் சிலருக்கு இன்பம் உண்டாகும். வசதியான இல்லம் அமைவதால் சிலருக்கு மகிழ்ச்சி உண்டாகலாம். நிலபுலன்கள் கிடைப்பதால் சிலருக்கு இன்பம் ஏற்படலாம். சிறந்த பண்புள்ள இல்லாள் அமைவதன் கார ணமாகச் சிலருக்கு இன்பம் ஏற்படும்.

ஆனால், இவ் இன்பங்கள் எல்லாம் நிலை யானவை அல்ல. ஏன்? இந்த இன்பங்களை யெல்லாம் அனுபவிக்கின்றவர்கள் மற்றவர் களைச் சார்ந்து வாழ்ந்தே இன்பங்களை அனு பவிக்கின்றார்கள். மற்றவர்களைச் சார்ந்து வாழும்போது, முறையான, உண்மையான இன்பத்தை அனுபவித்தல் இயலாது.

கல்வியால் வரக்கூடிய இன்பம் உண்மை யான இன்பம், தானே அனுபவித்து உணரக் கூடிய இன்பம் ஆகும். மற்றவர்களைச்சார்ந்து இல்லாமல், தானே அனுபவித்து உணரு வதால் கல்வியினால் வரக்கூடிய இன்பம் உண் மையான இன்பம் ஆகிறது.

கல்வியினால் வரக்கூடிய இன்பத்தைப்பற்றிக் குமரகுருபர சுவாமிகள் கூறுகிறார்:

“தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்
மடங்கொன்று அறிவு அகற்றும் கல்வி-நெடுங் [காமம்
முற்பயக்கும் சின்னீர இன்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது.”

—பெண்ணே! கல்வி பயிலுவதற்குத் தொடங்கு கின்ற காலத்தில் சற்றுத் துன்பமாக இருக் கும். பிறகு வரவர இன்பம் தரும். மனத் திலுள்ள அறியாமையை அறவே அகற்றும். அறிவு வளர்ச்சியைக் கொடுக்கும்.

மிகுதியான காம இன்பம் என்றால், ஆரம் பத்தில் சிறிதுநேரம் இன்பத்தைத் தரும். ஆனால், அவ்வின்பமானது வரவரத் துன்பத் தையே கொடுக்கும்.

படிப்பதற்குச் சிரமமாக இருக்கிறதே என்று எண்ண வேண்டியதில்லை. பின்னால் பெறக்கூடிய இன்பம் இணையற்ற இன்பம். எனவே, பெறப்போகிற பெரும்பயனை உத் தேசித்து, ஆரம்பத்தில் அடைகின்ற துன்பத் தைப் பொருட்படுத்தவேண்டிய அவசியம் இல்லை.

கல்வி பயிலவேண்டிய நியதி மக்களுக்கே உண்டு. பயிலக்கூடிய ஆற்றல் மனித சமூகத் துக்குக் கடவுள் கொடுத்த நன்கொடையாகும். அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வி என் கிறார் வள்ளுவர். எல்லாருடைய அறிவு வலிமையும் ஒன்றுபோல இருக்காது. ஒரு செய்தியை ஏற்கக்கூடிய ஏற்புத் திறனில் வேறுபாடு இருக்கலாம். ஏற்புத்திறனில் குறைபாடு உடையவர்களுக்கு ஆரம்பத்தில் கல்வி கற்பதற்குத் துன்பமாக இருக்கும். படிக்கும் செய்தியின் தன்மையின் அடிப்படை யில் கடினமாக இருக்கலாம். அதாவது, கல்வி கற்கத்துவங்கும் காலத்தில், கடினமான விஷயங்களை மூளை கிரகித்துக் கொள்ளவும், விளங்கிக் கொள்ளவும் துன்பமாக இருக் கலாம்.

துன்பமாக இருக்கிறது என்ற காரணத்துக் காக, எடுத்துக் கொண்ட நல்ல காரியத்தை நல்லவர்கள் விட்டுவிட மாட்டார்கள். எவ் வளவு இடையூறு ஏற்பட்டாலும் நிறைவேற் றியே தீருவார்கள்.

கல்வியானது வரவர மனத்திற்கு அமைதி யையும், மகிழ்ச்சியையும் தருகிறது. காரணம் என்ன? மனிதனை முழுமையாக்குவது கல்வி. மனிதனுக்கு மனித வடிவம் கொடுப்பது கல்வி. மனிதனுள்ளே அடங்கியிருக்கும் பூரணத்து வத்தை வெளிக் கொணருவது கல்வியாகும். மனிதனைப் பிறந்தவன் தன்னை உணர்ந்து கொள்வதற்குக் கல்வி உதவுகிறது. எனவே, கல்வியால் இன்பம் ஏற்படுகிறது.

சிரிக்கக்கூடிய வாய்ப்பும், சிந்திக்கக்கூடிய ஆற்றலும் மனித இனத்துக்கு மட்டுமே உண்டு. கல்வி கற்பது சிந்தனையைத் தூண்டுகிறது. சிந்திப்பவன் மகிழ்ச்சி அடைகிறான்; சிந்தனை மகிழ்ச்சியைத் தருகிறது.

கல்வியால் அறிவு வளர்கிறது; ஆற்றல் உண்டாகிறது. அறிவும், ஆற்றலும் ஏற்படு வதை மனித மனம் விரும்பி ஏற்கிறது. அத னால் மகிழ்ச்சி உண்டாகிறது. படித்ததைச் சிந்தித்துப் பார்க்கும்போது ஏற்படுகின்ற மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. படித்தவர் களோடு மனம் கலந்து உரையாடும் போது ஏற்படுகின்ற மகிழ்ச்சி மிகவும் சிறந்தது. கற்ற வர்களோடு பழகுவது ஒருவிதத் தனி இன் பத்தைத் தரக்கூடியது. “இம்மிக்காரோடு தலைப்பெய்து, யாம் அறியாதென எல்லாம் அறியப் பெற்றோம்” — படித்த சான்றோர் களுடன் தொடர்புகொண்டு பழகி முன்பு அறி யாத பல செய்திகளைத் தெரிந்து கொண்டோம் என்று பரிமேலழகர் கூறுகிறார். கல்வியால் பெறக்கூடிய இன்பம் அழியாத இன்பம்.

“மடம் கொன்று அறிவு அகற்றும்”— அறி

யாமையை அழித்து, அறிவைப் பெருகச் செய்வது கல்வி. அறியவேண்டியவற்றை அறிந்து கொள்ளாமலிருப்பதும், ஒன்றைத் தவருகப் புரிந்து கொள்ளுவதும், அரைகுறையாகப் புரிந்து கொள்வதும் அறியாமை ஆகும்.

அறியாமை என்பது ஒரு நோய். அதனை அழிக்காவிட்டால், வரவர வளர்ந்துகொண்டே வரும். அறியாமை நோய் உடம்பு, உயிர், மனம் ஆகிய மூன்றையும் பாதிக்கும்.

ஒருவனை மேன்மையுறச் செய்வது கல்வியறிவு; ஒருவனைக் கீழோன் ஆக்குவது அறியாமை. கல்வியறிவும், நாகரிகமும் அடையாத காலத்தில் அறியாமையை அகற்றவேண்டும் என்னும் உணர்வு மனித சமூகத்தில் ஏற்படவில்லை. சான்றோர்கள் கல்வியறிவைப் பற்றிச் சிந்திக்கத் துவங்கியதும், அறியாமையை அறவே அகற்ற வேண்டும் என்னும் உணர்வு சமூகத்தில் ஏற்படலாயிற்று. அறியாமையைப் போக்குவதற்குக் கல்வியைத் தவிர வேறு சிறந்த சாதனம் ஒன்றும் இல்லை.

அறிவை விருத்திசெய்வது கல்வியாகும். அறிவு இரண்டு வழிகளில் விருத்தியாகும். ஒன்று அனுபவத்தின் மூலமாக விருத்தியாகும். மற்றொன்று அறிவுடைய சான்றோர்களின் நூல்களைப் படிப்பதன் மூலம் விருத்தியாகும்.

ஒருவன் அறிவுடையவனாக இருக்கலாம்; ஆயினும் மேலும் அறிவை வளர்த்துக்கொள்ளுவதில் எவ்விதத் தவறும் இல்லை. அவ்வாறு அறிவை வளர்த்துக் கொள்வதற்குப் பேருதவி புரிவது கல்வியாகும்.

அறிவின் பயன் என்ன? இறைவனை வணங்குவதே படித்ததன் பயன் ஆகும். "கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்." இறைவனை வணங்காத கல்வியறிவால் எவ்விதப் பயனும் இல்லை என்பது வள்ளுவரின் அனுபவ வாக்கு.

இறைவனை உணர்வதே உண்மையான இன்பம் ஆகும். அதைவிட இன்பம் தருவது வேறு ஒன்றும் இல்லை. நிலையில்லாத, அழியும் இயல்புடைய பொருளைப் பற்றிய இன்பம் பொருத்தமற்ற இன்பமாகும். இறைவனை உணர்ந்து அனுபவிக்கக்கூடிய இன்பத்தைக் கல்வி நல்குவதால், "கல்வி இன்பம் பயக்கும்" எனக் குமரகுருபரர் கூறுகிறார்.

"கல்வியே கற்புடைப் பெண்டிர்அப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே தீங்கவியாச்–சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாண்அவை மண்ணுறுத்தும்
செல்வமும் உண்டு சிலர்க்கு"

— அவையை அழகுபடுத்துவது கல்வி என்பது குமரகுருபர சுவாமிகள் கருத்து.

கல்வி கற்கின்றவர்களுக்கு, அவர்கள் கற்கக்கூடிய கல்வியே கற்புடைய மனைவி ஆகும். கல்வி கற்று அவர்களின் புலமையை வெளிப்படுத்திக் காட்டக்கூடிய செய்யுள் அம்மனைவியிடத்துத் தோன்றிய புதல்வன் ஆகும். அந்தச் செய்யுள்களிடத்திலே அமைந்த பொருள் நிறைந்த வளமான சொற்கள், நிறைந்த செல்வமாகும். இவ்வாறு எல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற சிலரிடத்திலே, சான்றோர் நிறைந்த சபையை அலங்கரிக்கும் செல்வாக்கும் உண்டு.

இல்லறம் நடத்துகின்றவர்களுக்குக் கற்புடைய மனைவி உற்ற துணையாக வந்து அமைகிறாள். இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றும் இல்லை என்பது ஆன்றோரின் கொள்கை. இல்லாள் எல்லா மாண்புகளையும் பெற்றிருந்தால், அந்த இல்லத்தில் இல்லாதது எதுவுமே இல்லை. அத்தகைய சிறப்பு மிக்க இல்லாள் போன்றது கல்வி.

கற்புடைய மனைவி கணவனுக்குப் பெயரும் புகழும் பெற்றுத் தருவாள். அதுபோன்று, கல்வியும் தன்னையுடையவனுக்குப் பெருமையைச் சேர்க்கிறது கணவனுக்குப் பலவகையிலும் மகிழ்ச்சியூட்டி இன்பம் சேர்ப்பவள் கற்புடைய மனைவி. கல்வியும் எல்லாவகையிலும் மகிழ்ச்சியடையச் செய்கிறது. சமூகத்தில் நல்ல மனிதனாக வாழ்வதற்கு ஏற்ற வகையில் கணவனுக்குப் பெருமை சேர்ப்பவள் மனைவி. சமூகத்தில் பெருமை மிக்கவனாக வாழ்வதற்குக் கல்வி உறுதுணையாக அமைகிறது. கடின மனம் கொண்ட கணவனையும் மென்மையாக்குபவள் மனைவி. கடின சித்தம் கொண்ட மனத்தையும் மென்மையாக்கித் தூய்மையாக்குவது கல்வி.

கற்புடைய பெண்மணியின் உத்தமப் புதல்வன் போல, கல்வி கற்றவர்கள் வெளிப்படுத்தக் கூடிய செய்யுள் அமைகிறது. உத்தமப் புதல்வன் மூலமாகப் பெருமை பெறுபவள் தாயார். செய்யுளின் மூலமாகத் தம் புலமைத் திறத்தைப் பிறர் அறியச் செய்து

பெருமை பெறுபவன் புலவன்.

செய்யுளில் அமைந்த பொருள் பொதிந்த இனியசொற்கள், நிறைந்த செல்வமாகும். பொருள் செறிவு இல்லாத சொற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கவி உண்மையான கவியாகாது. சுருங்கச் சொல்லி விளங்கவைப் பது செய்யுளின் இயல்பு. கருத்துச் செறிந்த தேர்ந்தெடுத்த சொற்களைக்கொண்டு இயற்றப் படுவதே உண்மையான பாட்டு. வெற்றுச் சொற்களோ, ஆரவாரச் சொற்களைக் கொண்டு பாடப்படுவன சிறந்த பாடல்கள் ஆக மாட்டா. சொற்களை இடம் அறிந்து பிரயோகப் படுத்துவதைப் போல, செல்வத்தையும் கார ணம் அறிந்து செலவழித்தல் வேண்டும். சொல்வளமே நிறைந்த செல்வமாகும். சொல் வளம் இல்லாத பேச்சும், சொல்வளம் இல் லாத கவியும் வறியவையாகும். செல்வம் இல் லாதவன் வறியவன். சொல்வளம் இல்லாத கவி வறிய கவி. வெற்றுக்கவி.

சொல்லாற்றல் மிக்கவர்கள் சபையை அலங் கரிப்பவர்கள் ஆவார்கள். கூட்டம் கூடியிருந் தால் மட்டும் சபையாகி விடாது. ஆன்றோர்கள் நிறைந்திருப்பதுதான் உண்மையான சபை யாகும். எல்லா நூல்களையும் சந்தேகம், மாறுபாடு எதுவும் இல்லாமல் கற்று உணர்ந் தவர்கள் சான்றோர்கள்.

அச்சான்றோர்களின் நடுவே ஒப்பாரும் மிக் காரும் இல்லாத நிலையில் பெருமிதத்துடன் திகழ்பவர்கள் சொல்லாற்றல் மிக்கவர்கள். அத்தகைய சொல்லாற்றல் எப்படி வந்தது? கல்வி கற்பதால் வந்தது. சபையை அலங் கரித்தல் என்றால் என்ன? அந்தச் சபைக்குப் பெருமை சேர்ப்பது சபையை அலங்கரித்தல் ஆகும். பெருமையை எவ்வாறு சேர்க்க முடி யும்? சான்றோர்கள் நிறைந்த அச்சபையில் கருத்து மாறுபாடு இன்றி அனைவரும் ஏற்கும் வண்ணம் மிகச்சிறந்த கருத்துக்களை எடுத்துக் கூறுவது; அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதி பயக்கும் கருத்துக்களை எடுத்து விளக்குவது; உயிர்க்கு உறுதிதரும் செய்தி களை இயம்புவது ஆகிய முறைகளில் சபையை அலங்காரம் செய்வார்கள். "கல்விக்கு அழகு கசடற மொழிதல்." எவ்விதக் குற்றமும் இல்லாமல் பேசுவது கல்வி கற்றதன் அழகாகும்.

"நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம், மண்மாண் புனைபாவை அற்று" என் பது வள்ளுவர் கருத்து. நுட்பமான, சிறந்த, நுணுகி ஆராய்ந்து அறியும் அறிவு இல்லாத வன் எவ்வளவு புறத்தோற்ற அழகு உடையவ னாக இருந்தாலும், அலங்கரிக்கப்பட்ட பொம் மைக்குச் சமம். எனவே, மனிதனுக்கு அழ கைத் தருவது அறிவே ஆகும்.

கொத்துக் கொத்தாக மலர் பூத்துள்ளது. ஆனால் மணம் இல்லை. நல்ல வண்ணத்தோடு பூத்திருந்தாலும் மணம் இல்லாத மலரால் பய னில்லை. அதுபோன்று, நிறையப்படித்திருந்தா லும், கல்வியறிவைப் பெற்றிருந்தாலும், ஆன் றோர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படியாக விளக்கிக் கூறவில்லையெனில் யாதொரு பயனு மில்லை.

எதை விளக்கிக் கூறவேண்டும்? உண்மைப் பொருளை விளக்கிக் கூறவேண்டும். உண் மைப் பொருள் எது? உலகில் உள்ள பொருள் உண்மைப் பொருளா? இல்லை. ஏன்? அவை அனைத்துமே அழியக்கூடியவை. ஆக்கப்பட்ட பொருள் அனைத்துமே அழியக்கூடியவை. அப் படியானால் அழியாத பொருள் எது? அழியாத பொருள் பரம்பொருள் ஒன்றுதான். பரம் பொருளாகிய இறைவனுக்கு அழிவு இல்லை. ஏன்? அவனுக்குத் தொடக்கமும் இல்லை. யாராலும் படைக்கப்படாதவன் இறைவன். தோற்றமும் முடிவும் அற்றவன். ஆக்கம், அளவு, இறுதி இல்லாதவன். நிலையான மெய்ப்பொருள் இறைவன்.

பொய்யான பொருளை விளக்குகின்ற கல்வி உண்மையான கல்வி ஆகாது. நிலைபெற்ற மெய்ஞ்ஞானப் பொருளை, உண்மைப் பொருளை அறிவதே உண்மையான கல்வியாகும். கட வுளையறியும் கல்வியே மெய்யான கல்வியாகும்; நிலைபெற்ற கல்வியாகும். உண்மையான கட வுள் பக்தி உடையவர்களுக்கு, எல்லாப் பிறவி களிலும் இறையருள் தொடர்ந்து வந்து உற்ற துணையாக அமையும். கடவுள் அருள் தொடர்ந்து வந்து துணைசெய்வதைப்போன்று, கடவுளோடு தொடர்புடைய கல்வியும் அனைத் துப் பிறவிகளிலும் தொடர்ந்து வந்து உயிர்க்கு உறுதுணையாக அமையும். "ஒருமைக்கண்

தான் கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்பு உடைத்து" என்பது கல்வியைப் பற்றிய தமிழ்ச் சான்றோரின் கொள்கை. ஒரு பிறவியில் ஒருவன் கற்ற கல்வி ஏழு பிறவியி லும் அவனுக்குத் தொடர்ந்து வந்து பாதுகாப் பாக அமையும்.

எனவே, கடவுளோடு சம்பந்தப்பட்டது கல்வி. கடவுள் தொடர்பு அற்ற கல்வி உண் மையான கல்வி ஆகாது. கடவுளோடு சம்பந் தம் வைக்க உதவும் கல்வியே கல்வி என ஆன் றோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

"யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்ததினால்" என்பது அனுபவ வாக்கு. உண்மைப் பொருள் தந்த கல்வி, உண்மைப் பொருளிடத்திருந்து வந்த கல்வி, உண்மைப் பொருளை விளக்குவதாகவே அமை யும். "கல்லார் நெஞ்சில் நில்லார் ஈசன்." உண்மையை அறியும் கல்வியைக் கல்லாதவர் களுடைய நெஞ்சில் ஈசன் நிலைத்து நிற்கமாட் டான் என்பதால், நெஞ்சில் இறைவன் நிலைத் திருக்க வேண்டுமென்றால், உண்மையை அறி யும் கல்வியையே கற்றாகவேண்டும் என்பதும் விளங்குகிறது.

உண்மையை அறிந்த சான்றோர்களின் வாயி னின்றும் தோன்றுகின்ற சொற்கள் பொருள் பொதிந்த சொற்களாகவே அமையும்.

"இவருடைய பேச்சைக் கேட்க முடிய வில்லையே" எனக் கேட்க இயலாதவர்களும், கேட்க விரும்பும்படியாகப் பேசுவது சபையை அலங்கரிக்கும் பேச்சாகும். அப்பேச்சு உண் மைப்பொருளை விளக்கிச் சொல்லுகின்ற போது பரிபூரணத்துவம் பெறுகிறது.

ஒரு நல்ல தொண்டு

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முதுமொழி. நோயில் இரண்டு விதம் உண்டு. ஒன்று உடலைப்பற்றியது. மற்றது உள்ளத்தைப்பற்றியது. உடலைப்பற்றிய நோயை மருத்துவர்கள் கண்டுபிடிக்கின்றனர். மன நோயை மனிதன் தானே சரிப்படுத்த வேண்டும். மனநோயை நீக்குவதற்கு நல்லறிவு ஒன்றே உற்ற உபாயமாகிறது.

நோய் வராமல் தடுப்பதற்கும், ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதற்கும், மனதைத் திருத்தி அமைப்பதற்கும் உரிய வழிகளை விளக்கும் 'நோய்க்கு இடங் கொடேல்' என்னும் சிறிய நூல் ஒன்று தபோவனத்தினின்று வெளியாகியுள்ளது. ஆஸ்பத்திரிகளிலிருக்கும் நோயாளிகளுக்கிடையில் இந்தப் புஸ்தகத்தைப் படிக்கக் கொடுத்துப் பின் திரும்பவாங்குவது நல்ல பலன் தரும். இப்பணியில் ஊக்கமுடைய அன்பர்கள் சில பிரதிகளை வாங்கிக் கை வசம் வைத்துக்கொள்ளலாம். பிறகு டாக்டர் அனுமதி பெற்று ஆஸ்பத்திரி சிப்பந்திகளைக் கொண்டு இந்தப் பணிவிடையை நன்கு நிறைவேற்றலாம்.

சிறுநீரைப் பற்றிய விவரம் இப்புத்தகத்தில் வெளியாகியுள்ளதை ஈண்டு மாதிரிக்குத் தருகிறோம். "மூத்திரத்தைப் பற்றிய கோட்பாடு ஒன்று உள்ளது. அவரவர் மூத்திரத்தை அவரவரே நாள் ஒன்றுக்கு ஒருதடவை சிறிது பருகுவதால் பல நோய்கள் குணமடைகின்றன என்பது கோட்பாடு. இப்பழைய கொள்கையை இன்றைக்குப் பலபேர் கையாண்டு பார்க்கின்றனர். அதில் குணம் இருக்கிறது என்றும் அவர்கள் பகர்கின்றனர். தொழுநோய், மூத்திரம் அடைப்பு, காசம் முதலியவைகளை அது குணப்படுத்துகின்றது என்கின்றனர். இது ஆராய்ச்சிக்குரிய விஷயமாகும். கால்நடைகளும் ஏனைய சில விலங்குகளும் இடை யிடையே தாம் கழிக்கின்ற சிறுநீரை அருந்துவதைக் காணலாம். ஒருவேளை இது இயற்கை யில் அமைந்துள்ள சிகிச்சை முறையாக இருக்கலாம்." இதுபோன்று இன்னும் பல விஷயங் களை இந்நூல் தெளிவான முறையில் ஆராய்ச்சி செய்கிறது. மக்கள் ஆரோக்கியமாக வாழ் வதற்கு இந்நூலை ஒருமுறை படிக்குமாறு தூண்டுவது நல்ல சமுதாய சேவையாகும்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (291) *ஆசிரியர் தொழிலின் நிலை எப்படி அமையவேண்டும்?*

நம் சமுதாய அமைப்புக்கு யாண்டும் முன் மாதிரியாக இருப்பவைகள் இராமாயணம், மகாபாரதம் என்னும் இரண்டு இதிகாசங்கள். இவை இரண்டும் சத்தியத்திற்கும், தர்ம அனுஷ்டானத்திற்கும் விளக்கங்களாக அமைந்திருக்கின்றன. தசரத ராமன் ராமாயணத்துக்குக் கதாநாயகனாக அமைகிறான். யுதிஷ்திரன் அல்லது தர்மராஜன் மகாபாரதத்திற்குக் கதாநாயகனாக அமைகிறான். ராமனுக்குப் பயிற்சி கொடுத்தவர்கள் வசிஷ்டரும், விசுவாமித்திரரும். யுதிஷ்திரனுக்குப் பயிற்சிகொடுத்தவர்கள் கிருபாச்சாரியரும், துரோணாச்சாரியரும். அவர்களுக்கும் மேலாக பாட்டனாராகிய பீஷ்மரும் அவனுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறார்.

வீடு கட்டுவதற்கு அஸ்திவாரம் இன்றியமையாதது. அது தோற்றத்தில் இருப்பதில்லை. ஆயினும் வீடு முழுதையும் தாங்கிப் பிடித்துக் கொண்டிருப்பது அஸ்திவாரம். அதே விதத்தில் மனிதனுக்கு ஒழுக்கத்தை வழங்குபவர் ஆச்சாரியர். ஒழுக்கத்தைப் பாடப்புஸ்தகத்தின்மூலமாகப் புகட்ட முடியாது. மனிதன் வாழ்ந்துவரும் ஜீவிதம்தான் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக அமைகிறது. ஆதலால் ஆசிரியனின் பொறுப்பு மிகக் கடினமானது. ஆசிரியன் எண்ணுகிற எண்ணமும், பேசுகிற பேச்சும், செய்கிற செயலும் மக்களுக்கு முன்மாதிரியாக அமைந்திருத்தல் வேண்டும். சமுதாயத்தில் கேட்டைப் பரப்புவது மிகச் சுலபம். நலனை வழங்குவது மிகவும் கடினம். ஆசிரியன் ஒருவன் நலனே வடிவெடுத்திருப்பானாகில் அவனது பண்பில் ஒரு சிறு பகுதியைத்தான் மாணாக்கன் ஏற்றுக் கொள்கிறான். ஆசிரியனிடம் கேடு ஏதேனும் இருக்குமாகில் அதை முன்மாதிரியாக வைத்துக்கொண்டு பன்மடங்கு அதிகமாகக் கேட்டைக் கையாள மாணாக்கன் துணிகிறான். இக்கோட்பாடு எல்லாக்காலத்துக்கும், எல்லாச் சமுதாயங்களுக்கும் உரியதாம். ஆதலால்தான் சமுதாயத்தில் ஆசிரியர் ஸ்தானம் பெறுகிற மனிதன் ஒழுக்கத்தில் தலை சிறந்தவனாகவிருக்கவேண்டும்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

என்பது மறைமொழி. எப்படியாவது உயிரைக் காப்பாற்றுவது எல்லா ஜீவ ஜந்துக்களுக்கும் பொதுவானது. ஒழுக்கமோ அலாதியாக மனிதனுக்குரிய பண்பாடாகிறது.

இக்கோட்பாட்டையறிந்து நல்லொழுக்கமே வடிவெடுத்திருக்கும் ஆசிரியனே சமுதாயத்திற்குத் தலைசிறந்த தொண்டனாகிறான். ஆசிரியர் உலகம் ஒழுக்கம் நிறைந்ததாகவிருக்குமாகில் சமுதாயம் ஒழுக்கத்தில் படிப்படியாக முன்னேறும். ஆசிரியர் உலகம் ஒழுக்கத்தினின்று சிறிதளவாவது பிசகுமாகில் சமுதாயம் அதிவிரைவில் பெருவாரியாக நெறி பிசகிப்போய்க் கீழ்மையுறும். இதுவே ஆசிரிய உலகைப் பற்றிய கோட்பாடாம்.

கேள்வி: (292) *கண்ணீர் விட்டுப் பாடுவது பலஹீனமா? மன உறுதியா?*

உறுதிப்பாட்டுக்கு அறிகுறியாகக் கண்ணீர் சிந்துதல் சாத்தியம். பலவீனத்துக்கு அறிகுறியாகக் கண்ணீர் சிந்துதல் சர்வ சாதாரணம். துன்பத்தைச் சகிக்க முடியாத உயிர் வகைகளில் பெரும்பான்மை கண்ணீர் சிந்துகின்றன. அகத்தில் இருக்கும் வேதனைக்குப் புறச் சின்னமாகக் கண்ணீர் வடிகிறது. பிற உயிர்கள் கண்ணீர் சிந்திக் கதறும்படி யாரும் செய்யலாகாது. அப்படிச் செய்தால் தன் வினையே தன்னை வந்து சூழும்.

மடிந்துபோனவர்களைக் குறித்து மக்கள் கண்ணீர் சிந்திப் பாடுகின்றனர். அது துன்பக் கண்ணீர். உற்றார் உறவினர் மடிந்துபட்டுப் போனால் அதைக் குறித்து வருந்துதற்கிடையில் அந்த வருத்தத்தை வெளியில் யாருக்கும் காட்டிக்கொள்ளாத உறுதிப்பாட்டோடு சிலர் இருக்கின்றனர். அது பாராட்டுதற்குரிய மன நிலை. ஆனால் பெரும்பான்மையோர் வருந்திக் கண்ணீர் சிந்துகின்றனர். அச்செயலை ஏழை நெஞ்சத்துக்கு அறிகுறி என்று கருதலாகாது. ஆனால் நிகழ்கின்ற சிறு இடுக்கண்களை முன்னிட்டுக் கண்ணீர் கொட்டிக் கதறிப் பதறி அழுபவர்கள் இருக்கிறார்கள். அன்னவர்

களிடத்து உறுதிப்பாடு ஏதும் இல்லை. ஏழை நெஞ்சம் படைத்தவர்கள் அவர்கள். அந்நிலையை மீண்டு மேல்நிலைக்கு வர மனிதன் கடமைப்பட்டிருக்கிறான்.

இனி, அருள் நாட்டத்துக்கு அறிகுறியாகக் கண்ணீர் சிந்துபவர்கள் இருக்கிறார்கள். 'வல்வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே' என்று மாணிக்கவாசகர் பகர்கிறார். இது உறுதிப்பாட்டுக்கும், பண்பாட்டுக்கும் அறிகுறியாகும். பரநாட்டத்தில் சிந்துகிற கண்ணீர் மனிதனைத் திண்ணியனாக்குகிறது. உலக வைபவங்களைக் குறித்துக் கொட்டுகிற கண்ணீர் மனிதனைக் கோழையாக்குகிறது.

அருளாளர்கள் அருள் துறையில் மேன்மையடைவதற்குக் கண்ணீர் சிந்துதல் நன்கு பயன்படுகிறது. சீதாபிராட்டி சிறை கிடந்தபொழுது சிந்திய கண்ணீர் அவளைப் பன்மடங்கு புனிதம் வாய்ந்தவளாகத் திருத்தியமைத்தது. ஆகவே கண்ணீர் சிந்துதல் வாயிலாக மனிதன் மேன்மையுறுதலும் உண்டு; கீழ்மையடைதலும் உண்டு. மேன்மையடைவதற்கேற்ற பாடல்களைப் பாடிக் கண்ணீர் சிந்தி மனிதன் மேன்மை அடைதல் வேண்டும். கோழைத்தனத்தை வளர்க்கின்ற உலக இன்னல்களைக் குறித்துப் பாடிச் சிந்துகின்ற கண்ணீர் மனிதனை மேலும் கீழ்மையில் ஆழ்த்தும்.

"துன்பக்கண் ணீரிற் றுளைந்தேற்குன் ஆனந்த
இன்பக் கண் ணீர்வருவ தெந்நாள் பராபரமே."

இது தாயுமானவர் வாக்கு. உலக விஷயங்களைக் குறித்து எண்ணித் துன்பப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு அவ்வெண்ணம் ஒழிந்தால் துன்பம் தொலைகிறது. உள்ளம் உன்னை நினைந்து உருகி உருகி என் கண்ணில் நீர்ப் பெருக்கெடுத்து வரவேண்டும். அது இன்பக் கண்ணீர் ஆகும். அத்தகைய இன்பக் கண்ணீர் பெருகி என் உள்ளம் ஆனந்தம் அடைவது எந்நாளோ என்கிறார் தாயுமானவர். இறைவனைக் குறித்துக் கண்ணீர் சிந்துவது மன உறுதியைத் தருகிறது. உலகைக்குறித்துச் சிந்துகின்ற கண்ணீர் பலஹீனத்தைத் தருகிறது.

கேள்வி: (293) *கல்வியின் முன்னேற்றத்திற்கு ஆன்மீகச் சூழ்நிலை எவ்விதம் துணை புரிகிறது?*

இயற்கையில் ஆங்காங்குப் பலதரப்பட்ட சூழ்நிலைகளைக் காண்கின்றோம். இனத்தோடு இனம் போட்டிபோடும் சூழ்நிலை, சண்டை சச்சரவுகளை வளர்க்கும் சூழ்நிலை, ஓர் இனம் மற்றோர் இனத்தைத் தாக்கித் தகர்த்து ஒழிக்கும் சூழ்நிலை—ஆகியவைகளை உலகில் ஆங்காங்குக் காண்கின்றோம். இதில் அமைதிக்கு இடமில்லை. அசாந்தியும் அச்சமும் வெறுப்புமே இச்சூழ்நிலையில் வடிவெடுத்து வருகின்றன.

ஓர் இனம் மற்றோர் இனத்துக்குத் துணைபுரிவதையும், வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளைப் பரஸ்பரம் வழங்கிக்கொள்ளுதலையும் காண்கின்றோம். இத்தகைய சூழ்நிலை சமுதாய அமைப்பு என்னும் பெயர் பெறுகிறது. இங்குப் போட்டிக்கும் பொறாமைக்கும் இடமில்லை. ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டு இனிய வாழ்வு வாழ்தல் இச்சூழ்நிலையில் இடம் பெறுகிறது.

மூன்றாவதாகவும் இவை யாவுக்கும் மேலானதாகவும் இருப்பது ஆன்மீகச் சூழ்நிலை. இது போட்டியை அடிப்படையாகக்கொண்டதன்று. பெரிதும் நல்வினக்கத்தையே இது வளர்த்து வருகிறது. இதற்கெல்லாம் மேலாக உயிர்களனைத்தையும் பரம்பொருள் சொரூபம் எனக் கருதி வருவது ஆன்மீகச் சூழ்நிலையாம். தெய்வ வழிபாட்டுக்கு நிகராக ஒருவருக்கொருவர் பணிவிடை பண்ணிக்கொள்ளுதல் ஆன்மீகச் சூழ்நிலையின் குறிக்கோளாகிறது. 'அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே' என்பது இதன் விளைவு. ஆத்ம சொரூபமும், பேரறிவும் ஒன்றேயாம். 'கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்' என்னும் பொய்யாமொழியின் வாயிலாகக்கல்வியின் குறிக்கோள் விளக்கப்பெறுகிறது. தியானப் பயிற்சியின் வாயிலாக உள்ளத்தின் உள்ளேயிருக்கும் பேரறிவு தீட்டப்பெறுகிறது. பொருள்களை உள்ளவாறு அறிந்துகொள்ளும் வல்லமை பேரறிஞனுக்கு வாய்க்கிறது. எனவே அறிவின் உண்மையான முன்னேற்றம் ஆன்மீகத் துறையில்தானிருக்கிறது பண்டைக்கால குருகுலமுறை முற்றிலும் ஆன்மீகச் சூழ்நிலையில் அமைந்திருந்தது. ஆகையால் அப்பொழுது கல்வி தலைத்தரமான நிலையில் இருந்தது.

உடுப்பி பெஜாவர் மடாதிபதியின்

தமிழ்நாடு விஜயம்

(திரு V. S. நரசிம்மன்)

உடுப்பியில் ஜகத்குரு மத்வாச்சாரியாரின் சம்பிரதாயத்தைச் சேர்ந்த பெஜாவர் மடாதிபதி பூஜ்யஸ்ரீ விஸ்வேஸ்வர தீர்த்த ஸ்வாமிகள் பதினைந்து ஆண்டுகளாகத் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்து வருகின்றார். ஹரிஜனங்கள் வசிக்குமிடங்களுக்குச் சென்று, ஹிந்து தர்மத்தைப் பின்பற்றும்படி அறிவுரைகூறி நல்லாசி அளித்து வருகின்றார். அண்மையில் தமிழ்நாட்டில், பல இடங்களில் பெருத்த அளவில் மதமாற்றம் நடைபெற்றதை அறிந்து, நிலைமையை நேரில் கண்டறிய ஜூலை 15, 16 ஆகிய தேதிகளில் தென்காசிக்கு அருகிலுள்ள மீனாக்ஷிபுரத்திற்கு அவர் விஜயம் செய்தார். இரண்டு தினங்களிலும், அவர் பேசியவை, உரைத்த கருத்துக்கள் ஆகியவற்றினைச் சுருக்கமாகத் தருகின்றோம்.

பண்பொழியில் காலை 8 மணிக்கு R. S. S. தொண்டர்களிடையே ஸம்ஸ்க்ருதத்தில் சுவாமிஜி அவர்கள் பேசினார்கள். அப்பேச்சின் சாராம்சம் பின் வருமாறு:

ஹிந்து தர்மம், ஹிந்து சமாஜம் ஆகியவற்றைக் காப்பாற்றப் பெரிய விரதம் எடுத்துக் கொண்டு ஸ்வயம் சேவகர்களாகிய நீங்கள் இங்கே கூடியிருக்கின்றீர்கள். மிகவும் தேவையான சேவை இது. நமது தேசத்தில் பல மொழிகள் பேசப்படுகின்றன; நடைமுறைகளில் பல மாறுபாடுகள் உள்ளன. ஆயினும் நாம் அனைவரும் ஒரே அன்னையின், பாரத மாதாவின் புதல்வர்கள். வேற்றுமைகள் வெளிப்பார்வைக்குக் காணப்பட்டாலும், நாமனைவரும் சகோதரர்களே.

ஹிந்து சமுதாயத்தை முப்பெரும் தீயசக்திகள் சூழ்ந்துள்ளன. புராணங்களில் திரிபுர அசுரர்களைப்பற்றி நாம் கேள்விப்பட்டுள்ளோம். அதுபோன்று நமக்கும் மூன்று விதமான அபாயங்கள் தோன்றியுள்ளன: வெளிநாட்டிலிருந்து இங்கு வந்த கிறிஸ்துவ, முஸ்லீம் மதத்தினரின் ஆக்கிரமிப்பு (विदेशीय मतानां आक्रमणं) பட்சபாத நோக்குடைய அரசாங்கம் (सर्वेका राजं पक्षपादता) ஹிந்துக்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மை (हिन्दूनां असंघटता) — இம்மூன்று திரிபுர அசுரர்களையும் ஒழிப்பதற்காகவே நாம் அனைவரும் ஹிந்து ஒற்றுமையை வலியுறுத்துகின்றோம்.

நம்முடைய ஹரிஜன சகோதரர்களை நாம் அன்போடு நடத்துவதில்லை. கிறிஸ்துவர் அல்லது முஸ்லீம் போன்ற பிற மதத்தினருடன் பழகும் முறையில்கூட அவர்களை நமது மதத்தினர் நடத்துவதில்லை. ஹிந்து தர்மத்தில் இங்ஙனம் வித்தியாசம் பாராட்டக் கூடாது. ஹிந்து சமுதாயத்தில் அனைவரும் சமம். சங்கத்தின் ஸ்வயம் சேவகர்கள் இந்தச் செய்தியைப் பரப்பி, ஹிந்து சமாஜத்தைப் பலமாக்க வேண்டும். முழுமனதுடனும் உற்சாகத்துடனும் இப்பணியில் ஈடுபட்டால் வெற்றி பெறுவது திண்ணம்! உங்கள் அனைவரையும் ஸ்ரீ கிருஷ்ணன் ஆசீர்வாதம் செய்யட்டும்.

கிராமங்களுக்கு விஜயம்

15-7-81 அன்று சுவாமிஜி அவர்கள், மதுரை ஆதீனம், தஞ்சை அன்பிற்சரசு சுவாமிகள் ஆகியோர் மீனாக்ஷிபுரத்தைச் சுற்றியுள்ள சில கிராமங்களுக்கும், ஹரிஜனப் பகுதிகளுக்கும் சென்றனர். சுவாமிஜி கிராம மக்களுடன் இதய பூர்வமாக உரையாடினார். குடிநீர், பள்ளிக்கூடம், வழிபாட்டிற்குப் பொதுஇடம் கோவிலுக்குச் செல்லுதல் ஆகிய துறைகளில் அவர்களுக்குத் தேவையான வசதிகளைப் பற்றி விசாரித்தார். உடனடியாகச் செய்ய வேண்டிய உதவிகளைக் கேட்டுக் குறித்துக் கொண்டார். ''ஹிந்துக்களில் மற்றப் பிரிவினர் உங்களைத் துன்புறுத்துகிறார்களா?'' என்று அவர் கேட்டபொழுது, கிராமத்தினர் ''இல்லை'' என உறுதியாகக் கூறினர். ''ஒவ்வொரு வாரமும், குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட வேளையில் ஓரிடத்தே கூடிச் சிறிது நேரம் நாம ஜபம் செய்யவேண்டும். தினமும் குளித்து மதச் சின்னங்கள் விபூதி, குங்குமம் அணிய வேண்டும்; குழந்தைகளுக்கும் அணிவிக்க

வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் 'ஓம்' என்ற சின்னம் பொறித்த அட்டையைத் தொங்கவிடவேண்டும். ஏதேனும் இடர்கள் நேர்ந்தால் அருகிலுள்ள விஸ்வ ஹிந்து பரிஷத்தின் காரியதரிசியைப் பார்த்து நிலைமையை எடுத்துரைக்கவேண்டும்" என்று அறிவுரை கூறினர். கோயில்களுக்கு மின்விளக்குகளும், கிராமத்திற்குக் கறவைப் பசுக்களும் தேவை என மக்கள் கூறினர். உடன் அத்தேவையைப் பூர்த்தி செய்வதாகக் கூறினர்.

16-7-81 அன்று மாலை இராமநாதபுரம் ஜில்லா குராயூர் என்ற கிராமத்திற்கு R.S.S. விஸ்வஹிந்துபரிஷத் ஊழியர்களுடன் மடாதிபதி சென்றர். அப்போது இலேசாக மழை தூறிக்கொண்டிருந்தது. மக்களும் முக மலர்ச்சியுடன் வரவேற்கத் தயாராக இல்லை. அவர்களுடைய போக்கினை அறிந்தும், கட்டாயம் சந்திக்கவேண்டும் எனக் கூறிச் சேறும், சகதியும் நிறைந்த பாதையில் நடந்து சென்று ஹரிஜனங்களைச் சந்தித்தார்.

வெள்ளச்சாமி என்ற ஹரிஜனப் பெரியவர் பல நூறு ஆண்டுகளாக நிலவிவந்த சமுதாயப் பழக்கத்தை யாராலும் மாற்றமுடியாது என்ருர். "எங்களுக்கு என்று தனிக்கிணறு, தனிக் கோயில் உள்ளன. அவர்களுடைய கோவில்களுக்கு முன் நாங்கள் 'சாமி ஆடி'ச் செல்ல வேண்டும். ஆனல் அவர்கள் கோவிலுக்குள் நாங்கள் செல்லக்கூடாது." சுவாமிஜி உடனே 'நாம் அனைவரும் மற்றச் சமுதாயத்தினரைக் கண்டு பேசி இன்றே ஆலயப் பிரவேசம் செய்வோம்' என்று கூறினர். 'நாங்கள் வரமாட்டோம், இன்றைக்கு இது நடக்கலாம். நாளை என்ன ஆகும்?' என்று வெள்ளச்சாமி பதிலுரைத்தார். மதமாற்றத்திற்குப் பண உதவி பெறவில்லை என்றும் அவர் கூறினர். பல வருடங்களாக அரசாங்கம் முயன்றும் செய்ய முடியாத காரியத்தை நீங்கள் எப்படிச் செய்ய இயலும்? என்றும் கேட்டார்.

"அரசாங்கத்தைப் பற்றியும், அரசியல்கட்சிகளைப்பற்றியும் நீங்கள் கவலைப்படவேண்டாம். உங்களிடம் ஓட்டு வாங்குவதற்காக எழுநூறு மைல் தொலைவில் உள்ள உடுப்பியிலிருந்து நாங்கள் வரவில்லை. சென்ற பத்தாண்டு காலமாகக் கர்நாடகத்திலும், இதரப் பாகங்களிலும் இத்தகைய பணியைச் செய்து வருகின்றேம். ஹிந்து சமுதாயத்தின் அங்கம் பிரிவதைக் கண்டு வேதனைப்பட்டு இங்கு வந்திருக்கின்றேம். நம்முடைய தர்மத்திற்கும், ஹிந்து சமாஜத்திற்கும் இதுபெரிய இழப்பு. இந்தக் கண்ணேட்டத்தில் பிரச்னையை நீங்கள் அணுக வேண்டும்" என்று சுவாமிஜி கூறினர்.

இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஸ்ரீ பெரிய கருப்பத்தேவர் அமைதியாக ஹிந்தியில் சுவாமிஜி அவர்களுடன் உரையாடி, பிரச்னையின் மறுபக்கத்தை விளக்கினர். ஆணித்தரமான முறையில் அவர் பேசியது, பிரச்னையை அவர் அணுகியவிதம் ஆகியவை அவருடைய நல்லெண்ணத்தைப் புலப்படுத்தின. "பல நூறு வருடங்களாகத் தனிக் கிணறு, தனிக் கோவில் என்றே வாழ்கின்றேம். இதில் எவருக்கும் சிக்கலோ, சிரமமோ இதுகாறும் தோன்றவில்லை. எங்கள் கோவில்களின் முன் சாமி ஆடிவரும் ஹரிஜனங்கள் காலில் விழுந்து விபூதி வாங்கிக்கொள்கின்றேம். ஆயின் அவர்கள் கோயிலுக்குள் வராவிட்டால் நாங்கள் என்ன செய்வது? ஹோட்டல், பஸ் போன்ற இடங்களில் வேற்றுமை எதுவும் பார்ப்பதில்லை. நகரத்தைப் போன்றே இங்கும் நடக்கின்றது. குறிப்பிட்ட சில இடங்களுக்கு நாங்களும் போவதில்லை, அவர்களும் போவதில்லை. இதற்கு நாம் என்ன செய்வது?" என்ருர்.

"உங்களுடைய நல்ல எண்ணத்தின் மீது அவர்கள் விசுவாசம் கொள்ளவேண்டும். வேற்று ஜாதியைச் சேர்ந்தவர்கள், கிறிஸ்துவர், முகமதியர் ஆகியோர் வீட்டுக்கு வந்தால் எப்படிப் பழகுகின்றீர்களோ, அப்படியே அவர்களுடன் பழகலாமே" என்று சுவாமிஜி கூறினர். "எமது பிரதிநிதியாக இருந்து நட்புறவும், சமபாவ நிலையும் வளரப் பாடுபடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் ஒருசிலர் ஆவேசமாக "இதெல்லாம் நடக்கக் கூடியதா? எல்லாரையும் சமமாக நடத்தினல் எல்லாம் அழிந்து ஒழியும். பொதுவில் தண்ணீர் கொடுப்பதை விட, ரத்த ஆறு பெருக விடுவோம்" என்று உணர்ச்சியோடு பேசினர்கள். படித்த இளைஞர்களிடையே அரசாங்கமும், ஏனையோரும் ஹரி

ஜனங்களுக்குத் தரும் சலுகைகளைப் பற்றிய மனத்தாங்கல் இருந்தது. ஆயின் சமுதாயப் பின்னணியில், தேசத்தின் நலனைக் கருத்திற் கொண்டு இப்பிரச்னையின் பூதாகார வடிவைப் பார்க்கவேண்டும் என்ற கருத்தை அரை மனதோடு ஏற்றனர். மதமாற்றத்திற்குப் பணம் பெரிய கருவி என்பதை ஆதார பூர்வமாக விளக்கினர். "இங்குள்ள பலரும் கூலி வேலை செய்தே பிழைக்கவேண்டும். நம் ஜாதியினர், ஹரிஜனங்கள் அனைவரும் ஏழைகளே. மதம் மாறுவதற்கு முன் தவறாது வேலைக்கு வந்தவர்கள் சென்ற மூன்று மாதங்களாக எந்த வேலையும் செய்வதில்லை. அவர்கள் குடும்பம் எவ்வாறு நடக்கின்றது? என்றைக்கும் இல்லாத உயர்ந்த ஆடைகளை அணிந்து கொள்வது எப்படி? ஒன்றும் இல்லாத இந்தச் சிறிய கிராமத்திற்கு இரண்டரை லட்சம் ரூபாயில் மசூதி கட்ட ஏற்பாடு நடக்கின்றதே! இதற்குப் பணம் எங்கிருந்து வருகின்றது?"

அவருடைய பேச்சில் இருந்த உண்மை எல்லாருக்கும் புரிந்தது. இத்தகைய பேராபத்து வருவதால்தான் நாம் அனைவரும் ஒன்றுபட்டு இந்தச் சதியை முறியடிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. இரண்டு பிரிவினரையும் ஒன்று சேர்த்து, மதமாற்றத்தை எதிர்த்து, ஒரு அணியாக நிற்கச் செய்ய விடாமுயற்சி தேவை என்பதை உணர்ந்த மடாதிபதி அவர்கள் குராயூரைத் தமது மடம் தத்து எடுத்துக் கொள்ளும் என்று அறிவித்தார். தமது பிரதிநிதியை அனுப்பி, ஆவன செய்ய ஏற்பாடு செய்வதாகக் கூறினர்.

"ஹரிஜனங்கள் உள்ளத்தே நம்பிக்கையை ஊட்டி அன்பால் வெல்லவேண்டும். நலிவடைந்த நம் தம்பியைப் பெற்றோர் அதிகம் கவனித்தால் நாம் பொறாமை கொள்வதில்லையே. நம் சமுதாயத்தில் பல ஆண்டுகளாக நலிவுற்றவரை ஆதரிப்பது, அரவணைப்பது நம் தர்மம்" என்று இறுதியில் சுவாமிஜி கேட்டுக் கொண்டு விடை பெற்றார்.

பத்திரிகை நிருபர்களிடையே பேசியது

15—7—1981 அன்று காலை 11 மணிக்குப் பண்பொழியில் நிருபர்களிடையே பேசிய பெஜாவர் மடாதிபதி அரிய பல கருத்துக்களைத் தெரிவித்தார். அவையாவன:

1) நம் தேசத்தில் புது வழிபாட்டுமுறையை விரும்பி ஏற்றுக்கொண்டு மதம் மாறுவது அனுமதிக்கப்படுகின்றது. ஆயின் மீனாட்சிபுரத்தில் நடந்தது மதமாற்றம் அன்று. பணம் காட்டி, ஆசைகாட்டி, மறைமுகமாக நிர்பந்தம் செய்து, முறைகேடான வழியில் மதம் மாற்றுவது கண்டிக்கப்படவேண்டும். மதப்பிரச்சாரம் செய்யத் தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமையைத் துர்பிரயோகம் செய்கின்றனர்.

2) O. P. தியாகி அவர்கள் மதமாற்றம் சம்பந்தமாகக் கொண்டு வந்த மசோதாவை உயிர்ப்பிக்க வேண்டும். அதே அடிப்படையில் ஒட்டுமொத்தமாக மதம் மாறுவதைத் தடுத்துச் சட்டம் இயற்றவேண்டும். அரசாங்கம் சட்டத்தின் மூலம் இதை முற்றிலும் நிறைவேற்றுவது இயலாத காரியமே. ஆயின் சொந்த விருப்பத்தோடு செல்வதற்குத் தடைதான் கிடையாதே! அப்படியிருக்கத் தியாகியின் மசோதாவிற்கு எல்லாக்கிறிஸ்தவபாதிரிகளும் ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும்? மதம் மாற்ற அவர்கள் கையாளும் யுக்திகள் அனைத்தும் நேர்மையானவைகளா? இல்லையே. இத்தகைய சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டால், அது முதற்படியாக அமையும். அதன் பின் சட்டத்தை எப்படி மீறுகின்றார்கள், என்ன குறைகளைத் தீர்க்க வேண்டும் என்று ஆராயலாம். முதல் அடி எடுத்து வைக்க வேண்டியது மிகவும் அவசியம்.

3) நம் நாட்டில் மதச்சார்பற்ற தன்மையைப் பற்றிப் பேசுகின்றனர். இந்தியாவில் ஹிந்துக்கள் பெரும்பான்மையாக இருக்கும் வரைதான் 'மதச்சார்பற்ற' நிலைமை இங்கு இருக்கமுடியும். இத்தகைய மதமாற்றங்களைத் தடுக்காவிடின், ஹிந்துக்கள் பெரும்பான்மையை இழக்கநேரிடின், இந்தியா மத அரசாக மாறிவிடும் அபாயம் ஏற்படும்.

4) மடாதிபதிகள் இந்தப் பிரச்னையில் எடுக்கும் வழிமுறைகளைப்பற்றி வினவப்பட்டது. "உடுப்பியில் காஞ்சி சங்கராச்சாரியர் என்னைச் சந்தித்துப் பேசினர். மற்ற மடாதிபதிகளுடன் வெகு சீக்கிரம் கலந்து ஆலோசனை செய்யப்போகின்றோம். பெஜாவர் மடம் சில கிராமங்களைத் தத்து எடுத்துக்கொண்டு பொருளாதார மேம்பாட்டிற்காக ஆவன

செய்யும். தாம் எடுத்துக்கொண்ட பணியின் துவக்கத்தில் ஏனைய மடாதிபதிகளும், மத வாதிகளும் எதிர்ப்புத் தெரிவித்தனர். தற்பொழுது பலரும் அவருடைய கருத்தை ஏற்றுக்கொள்கின்றனர். ஒரு சிலர் நடுநிலைமை வகிக்கின்றனர். ஆயின் எவரும் நேரடியாக எதிர்ப்புக் காண்பிப்பது கிடையாது.

5) ஹிந்து ஹரிஜனங்களுக்காக அரசாங்கம் தரும் சலுகைகள் மதம் மாறியவர்களுக்கும் கர்நாடக அரசால் தரப்படுகின்றது. இத்தகைய செயல் அநீதியானது. (ஜாதி பேதமே இல்லை என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் முஸ்லிம், கிறிஸ்துவர்கள் எந்த நியாயத்தைக்கொண்டு இச்சலுகைகளைப் பெறுகின்றனர்?) கேரளாவில் இருந்து வந்த பத்திரிகைப் பிரதிநிதி ஒருவர் கேரளாவில் 'ஹரிஜன கிறிஸ்துவர்' என்ற ரீதியில் ஒரு அமைப்பு உருவாகி இத்தகைய கோரிக்கைகளை எழுப்புவதாகவும் கூறினர். இத்தகைய சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்கா என்று திட்டவட்டமாகச் சட்டமியற்றப்படவேண்டும்.

6) ஹிந்துக்கள் ஒன்றுபட்டு வாழவேண்டும். கோவில், குளம், கிணறு, கல்வி நிலையங்கள், பொது இடங்கள் அனைவருக்கும் உரிமையானவை. பத்திரிகை, வானொலி ஆகியவை 'ஹரிஜனங்களுக்கும், ஹிந்துக்களுக்கும்' என்று எழுதக்கூடாது, பேசக்கூடாது. 'ஹரிஜனங்கள் வேறு, ஹிந்துக்கள் வேறு என்ற மயக்கத்தை இந்தச் சொற்கள் தோற்றுவிக்கின்றன. ஒரு நிருபர், ''இரண்டு சொற்களும் ஒரே கருத்துடையவை எனின் சுவாமிஜி தம்மை ஹரிஜன் என்று அழைத்துக் கொள்வாரா?'' என்று கேட்டார். புன்சிரிப்புடனும் தயக்கமின்றியும் சுவாமிஜி, ''என்னை ஹரிஜன் என்று கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். உண்மையில் அனைவரும் ஹரியின் புதல்வர்கள்தாம்'' என்றார்.

7) ஹிந்துக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வேற்றுமையை மறக்கவேண்டும் என்று சுவாமிகள் வேண்டுகோள் விடுத்தார்.

மீனாட்சிபுரத்தில் 15—7—81 அன்று பேசியது

மிகவும் வருந்தத் தக்க இந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கவலைப்படும் நாம் அனைவரும் ஆத்ம பரிசோதனை செய்து கொள்ளவேண்டும். ஆயிரக் கணக்கான வருடங்களாக ஹரிஜனங்கள் ஹிந்து சம்பிரதாயத்தைப் பின்பற்றி ஸ்ரீ ராமர், ஸ்ரீ கிருஷ்ணனை வணங்கி வருகின்றனர். அவர்களை ஒதுக்கி வைத்தது ஹிந்து தர்மத்திற்கு ஒவ்வாதது. நம் சாஸ்திரத்தில் தீண்டாமைக்குச் சிறிதும் இடமில்லை. இனியும் நம் சகோதரர்களுக்குத் தீங்கிழைக்க மாட்டோம் என்ற திடசங்கல்பம் செய்வோமாக. ''நல்ல கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் பரந்த மனப்பான்மை உடையவர்கள்நாம். நம் வீட்டில் நாலா பக்கங்களில் இருந்தும் தூய, இதமான தென்றல் காற்று வீசட்டும் என்று ஜன்னல்களைத் திறந்து வைக்கின்றோம். ஆயின் பேய்க்காற்று அடித்து நம் கூரையைப் பெயர்த்தால் அதனை வரவேற்பதில்லை! அதுபோன்று மதப்பிரசாரம் செய்வதற்குப் பெருந்தன்மையுடன் தரப்பட்ட உரிமையைத் துஷ்பிரயோகம் செய்பவர்களைச் சும்மா விடக்கூடாது. எனவே மயங்கி, ஏமாந்து மதம் மாறிய நம் சகோதரர்களை நாம் இன்னும் ஹிந்துக்களாகவே கருதுகின்றோம். அவர்கள் நம்மவர்கள் தாம், இஸ்லாமியர் அல்லர். நம் சட்டைப்பையில் உள்ள பணத்தை ரௌடி ஒருவன் அபகரித்து விட்டால், பணம் அவனுடையது ஆகுமா? அது நம்முடைய பணம்தானே! அதுபோன்று அநியாயமான வழிகளில் மதம் மாற்றப்பட்டவர்களும் நம்மவர்தாம். நம் சக்தியைக்கொண்டு, செல்வத்தை மீட்பது போன்று இவர்களையும் மீட்க வேண்டும். நம் வாழ்க்கையில் தீண்டாமையை ஒதுக்கி, அனைவரும் சமம் என்றே வாழ்வோம். வேலை வாய்ப்பு அற்ற ஹரிஜன இளைஞர்களுக்கு அவர்கள் ஊரிலேயே வேலை வாய்ப்பு ஏற்படுத்த மங்களூர் கணேஷ் பீடி உரிமையாளர் முன் வந்துள்ளார்.

இன்றுமுதல் ஹிந்துக்கள் அனைவரும் நம் பந்துக்கள். நம் சகோதரர்களுக்கு இங்கு இழைக்கப்படும் தீமையைக்கண்டு நாம் சும்மா இருக்கலாமா? ஹிந்து தேசம் முழுவதும் இதற்காக உணர்ச்சி வசப்பட்டு, ஒற்றுமைக்கும் துயர்துடைப்பதற்கும் பாடுபடவேண்டும். உங்களுடைய கவலைகளைப் போக்கவும், உங்களுக்கு உதவி செய்வதற்கும் பக்க பலமாக இருக்கின்றோம். ஸ்ரீ கிருஷ்ணன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

மனம்மாறினுல் மேன்மையடையலாம்

மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன் என்று பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர் விளக்கியுள்ளரர். ஸத்யம் வத சத்தியத்தையே பேசு. தர்மம் சர தர்மத்தை அல்லது அறநெறியை நன்கு கடைப்பிடி என்பது வேத வாக்கு. இவ்விரண்டு கோட்பாடுகளை நெறி பிறழாது அனுஷ்டிப்பவன் மேலோனுவது திண்ணம்.

கீழ்மக்களை மேன்மக்கள் தீண்டலாகாது என்னும் கொள்கை எப்படியோ இடைக்காலத்தில் நம்மவர்கள் உள்ளத்தில் ஆழ்ந்து இடம் பெற்றுவிட்டது. ஆனல் இக்கொள்கை சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. விஷயம் தெரியாது சத்தியத்தினின்று பிசகினலும் அதற்கேற்றவாறு கேடு மனிதனுக்கு வந்து வாய்க்கும். மனிதனை மனிதன் தீண்டலாகாது என்னும் கொள்கை சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டதன்று.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் இம்மியளவாவது சத்தியத்தினின்று பிசகியவர் அல்லர். அவர் வாயினின்று எப்பொழுதாவது தீண்டத்தகாதவன் என்னும் சொல் வந்தது இல்லை. அவர் பண்ணிய பிரார்த்தனையாவது: "தாயே! தாழ்ந்தவர் என ஒதுக்கப்படுபவரும் உன் குழந்தைகளே. நான் உயர்ந்தவன் என்னும் அகங்காரம் பூண்டு உன் குழந்தைகளில் ஒரு சிலரை நான் ஒதுக்கி வைப்பேனுகில் அதன் விளைவாக நானே தாழ்ந்தவனுவேன்." அது வெறும் வாய்ப்பேச்சாக நின்றுவிடவில்லை. நடைமுறையாக வடிவெடுத்தது. அவர் நள்ளிரவில் தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு அருகிலிருந்த சேரிக்குச் சென்று மற்றவர் யாருக்கும் தெரியாதிருக்கும் பாங்கில் வீதிகளைக் கூட்டிச் சுத்தப்படுத்தினர். அப்பொழுது அவர் செய்த பிரார்த்தனையாவது: "தாயே நான் ஜாதியில் உயர்ந்தவன் என்னும் அகங்காரம் எனக்கு வேண்டாம். மக்கள் எல்லாரையும் உன் குழந்தைகளாகக் காணும் தூய மனப்பான்மையை எனக்குத் தந்தருள்வாயாக." இங்ஙனம் அவர் தொடர்ந்து சில நாட்கள் செய்த பணிவிடையின் விளைவாக மக்கள் எல்லாரையும் தெய்வத்தின் குழந்தைகளாகக் காணும் ஆத்மபரிபாகம் அடைந்தார்.

கீழ் வங்காளம் இப்பொழுது இஸ்லாமிய நாடாக இருந்துவருகிறது. மொகலாயர் ஆட்சிக் காலத்தில் இந்துக்களால் தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் இஸ்லாமியர்களாக மதம் மாறியமைந்தனர். கீழ் வங்காள இஸ்லாமியர்களுள் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் இந்துக்களால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களின் சந்ததிகளாவார்கள். அவர்களுக்கு வங்காள மொழியைத் தவிர வேறு எம்மொழியும் தெரியாது. தமிழ் நாட்டிலிருக்கும் ராவுத்தர்களோடு அவர்களை ஒப்பிடலாம். இன்றைக்கு அவர்கள் கீழ்வங்காளத்தில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்த இந்துக்களுள் மேன்மக்களாயிருப்பவர்களை உபத்திரவப்படுத்தவும், விரட்டியோட்டவும் செய்கின்றனர். ஜீரணமாகாத உணவு உடலில் நெடிது இருந்தால் அது விஷமாக மாறிக் கேடு செய்யும். அதே விதத்தில் சமுதாயத்தில் ஜீரணம் பண்ணது ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் இன்றைக்குப் பழிக்குப் பழிவாங்கும் பாங்கில் இந்துக்களில் மேன்மக்களை உபத்திரவப் படுத்துகின்றனர். தன்வினை தன்னைச்சுடும் என்பதற்கு இச்சூழ்நிலை நல்ல எடுத்துக்காட்டு ஆகும்.

பிறந்த குழந்தை உடனே எல்லாராலும் தொடத் தகுதியற்றதாகவிருக்கிறது. அதை முன்னிட்டு அது யாண்டும் ஒதுக்கி வைக்கப்படுவதில்லை. அதே விதத்தில் தோட்டித் தொழில் செய்பவர்கள் அவ்வேளையில் மற்றவர்களால் தீண்டத் தகாத நிலையிலிருக்கின்றனர். ஆயினும் சமுதாயத்துக்குத் தேவையாயுள்ள எத்தகைய அரிய பெரிய பணிவிடையை அவர்கள் பண்ணி வருகிருர்கள் என்பதை மறந்துவிடலாகாது. மலஜலம் கழித்த பிறகு நம் இடக்கை உடலைச் சுத்தம் பண்ணத் தோட்டி வேலை செய்கிறது. அதை முன்னிட்டு யாரும் இடக்கையை ஒதுக்கி வைப்பதில்லை. அது வலக்கையோடு கூடிக் கடவுளை வணங்குதற்கு உதவுகிறது. தோட்டிவேலை செய்பவரும் அங்ஙனம் சமுதாயத்துக்கு இன்றியமையாத உறுப்புக்கள் ஆவர். அதை முன்னிட்டு அவர்

களைக் கண்ணியமாகப் பாராட்ட ஏனையவர் கடமைப்பட்டிருக்கின்றனர். நீராடிய பிறகு அவர்களுக்கு நன்றி செலுத்தும் பாங்கில் அவர்களோடு இணங்கியிருந்து அவர்களைக் கண்ணியப்படுத்த வேண்டும். பெருமையும் சிறுமையும் தான்தரவருமே என்னும் வாழ்க் கைக் கோட்பாட்டை இம்மியளவாவது மாற்றி யமைக்க யாருக்குமே இயலாது.

இந்துக்களாகிய நாம் செய்தது பிழை என் பதை வெளி நாடுகளிலிருந்து வந்துள்ள இஸ் லாமிய மதமும் கிறிஸ்தவ மதமும் நமக்குப் பாடம் புகட்டி வருகின்றன. இதை ஈசன் செயல் என அங்கீகரிக்கவேண்டும். தீண்டா மையை அகற்றும் விஷயத்தில் விவேகானந்த சுவாமிகள் இங்ஙனம் பகர்ந்துள்ளார் : "இந்தி யர்கள் எல்லாரும் என் சகோதரர்களே. பிராமண இந்தியன், பறைய இந்தியன் ஆகிய இந்தியர்கள் எல்லாரும் நான் வணங்கும் தெய்வங்களாவார்கள்." இங்ஙனம் நம் மனப் பான்மை அனுஷ்டான பூர்வமாக மாறியமைய வேண்டும் என்று அவர் எச்சரிக்கை செய் திருக்கிறார்.

ஒவ்வொரு கிராமத்தில் வசித்துவரும் இந்து மக்கள் ஜாதி வேற்றுமையின்றி வாரத்தில் ஒருநாள் கோயிலில் கூடிப் பஜனையும், வந்தனை வழிபாடும் செய்யவேண்டும். அதன் பிறகு எல் லார்க்கும் ஒரேபாங்கில் கடலைபொரி பிரசாதம், சுண்டல் பிரசாதம் அல்லது சர்க்கரைப்பொங் கல் பிரசாதம் ஆகியவைகள் சக்திக்கேற்ற வாறு வழங்கவேண்டும். இங்ஙனம் சகோதர பாவனையையும் அன்பையும் மக்களுக்கிடையே வளர்ப்பது நல்ல வழிபாடு ஆகும். ஆருயிர்ச் சேவையே ஆண்டவன் வழிபாடு என்னும் கோட்பாடு அதிவிரைவில் நம்மவர்களிடையே ஆண்டவன் அருளால் வடிவெடுப்பதாகுக.

இன்றைக்கு உலகம் முழுதும் ஒரே சமுதாய மாக இணைக்கப்பட்டு வருகிறது. அதிவிரை வில் மனிதன் விமானத்தின் வாயிலாக உலகில் எந்தப் பகுதிக்கும் போகக்கூடும். அப்படிப் போகின்றவர்கள் உலக நாகரிகங்களை ஒன்றோ டொன்று சீர்தூக்கிப் பார்க்கின்றனர். நம் நாட்டிலுள்ள பண்புகள் பல ஏனைய நாட்டவர் களால் பெரிதும் பாராட்டப்படுகின்றன. அதற் கிடையில் நாம் கையாண்டு வரும் தீண்டாமை என்னும் அழுக்குதான் ஏனைய மக்களுக்கு விளங்குவதில்லை. மனிதனை மனிதன் தீண் டாமை என்னும் கொடிய பழக்கம் உலகில் வேறு எங்குமேயில்லை. ஒருவரை ஒருவர் தீண்டி அவர்கள் கீழ்மையடையக்கிடையாது. ஆனால் நம்மவர்களோ இக்கொடிய பழக்கத் தின் விளைவாகத் தங்களுடைய சமுதாய அமைப்புக்கே கேட்டையும் அவமானத்தையும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நோயை எவ்வளவு விரைவில் நாம் அகற்று கிறோமோ அவ்வளவு விரைவில் உலகத்தவர் பார்வையில் நாம் மேன்மக்கள் ஆவோம். அவற்றிற்கெல்லாம் மேலாக இறைவனுடைய அருளுக்கு நாம் பாத்திரமாவது திண்ணம்.

செய்திகள்

நிகழ்பவை :

18-10-81 ஞாயிற்றுக்கிழமையன்று சென்னை புரசவாக்கம் ஸர். M. CT. முத்தையா செட்டி யார் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** ஒருநாள் அந்தர் யோகம் நடாத்துவார்கள்.

ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுலப் பள்ளி மாணவர்கள் அக்டோபர் மாதம் 20ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று மாலை 3-00 மணிக்கு மேல் தீபாவளி விடுமுறைக்காக அவரவர்கள் ஊருக்குப் புறப்படுவார்கள்.

4-11-81 புதன் கிழமையன்று தீபாவளி விடு முறைக்குப் பின் ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுலப் பள்ளி திறக்கப்படுகிறது.

6-11-81 வெள்ளிக் கிழமையன்று குளித்தலை கடம்பர் சந்நிதியில் நிகழும் சற்குரு திருப்பதி சுவாமிகள் குருபூஜை விழாவில் மாலை 4-00 மணிக்கு 'ஞானலோகத்திருப்பாடல்' ஒன் றுக்கு **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** விரி வுரை செய்வார்கள்.

7-11-81 சனிக்கிழமையன்று கோவைஜில்லா கணபதியில் மாலை 6-00 மணியிலிருந்து 8-00 மணி வரை **ஸ்ரீமத் ஆத்மானந்த சுவாமிகள்** அந்தர்யோகம் நிகழ்த்துவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கிதை பிரசார விலை	ரூ.	16-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	" ...	6-00
இராமாயணம்	,, ...	5-00
தினசரி தியானம்	,, ...	4-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, ...	3-00
கர்மயோக விளக்கம்	...	10-00
ஞானயோக விளக்கம்	...	8-00
ராஜயோக விளக்கம்	...	8-00
பக்தியோக விளக்கம்	...	6-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
விவேகானந்த விவரணம்	...	4-00
விவேகானந்த உபநிஷதம்	...	4-00
கடவுளின் வடிவங்கள்	...	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	...	3-50
அனுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	2-50
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்	...	2-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள் விரிவுரை	...	3-50
பரிபூரணானந்தம் ஷை	...	3-00
சின்மயானந்த குரு ஷை	...	3-00
ஆனந்தமானபரம் ஷை	...	3-00
சுகவாரி ஷை	...	3-00
மௌனகுரு வணக்கம் ஷை	...	3-00
எங்குந்நிறைகின்றபொருள் ஷை	...	2-50
பரசிவ வணக்கம் ஷை	...	1-00
பஜனைப் பாடல்கள்	...	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	...	1-50
விபீஷணன் சரணாகதி ஷை	...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
அமரநாத யாத்திரை	...	1-25
சந்நியாசி	...	1-25
இறைவணக்கம்	...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
சகோதரி நிவேதிதை	...	1-00
காயத்ரீ	...	1-00
இராவண தத்துவம்	...	1-00
வாலி மோட்சம் (நாடகம்)	...	1-00
தவப்புதல்வர்கள்	,, ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	,, ...	1-00
தானவீரன் கர்ணன்	,, ...	1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம்	...	1-00
பிரஹ்லாதன்	,, ...	1-00

மார்க்கண்டேயன் (நாடகம்)	ரூ.	1-00
தபோபலன்	,, ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	...	1-00
பாண்டவ கௌரவபெருமை (நாடகம்)	...	0-80
நன்மக்களைப் பெறுதல்	...	0-80
பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்)	...	0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	0-75
*ஆத்ம சக்தி	...	0-75
*ஆலய வழிபாடு	...	0-75
*சக்தி தத்துவம்	...	0-70
*சிவதத்துவம்	...	0-70
*மனிதனது நிஜசொரூபம்	...	0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	...	0-60
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	...	0-60
*சூரிய நாராயணன்	...	0-50
*முருகக்கடவுள்	...	0-50
*விஷ்ணு தத்துவம்	...	0-50
தெய்வீக மகிமைகள்	...	0-50
சைவன் யார்?	...	0-50
கர்மகாண்டம்எது?ஞானகாண்டம்எது?		0-50
*கணபதி	...	0-40
வர்ணாச்ரம தர்மம்	...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
The Bhagavad Gita (10th Imp.)	...	20.00
Sri Lalitambika Sahasranama Stotram	...	10-00
The Indian National Education	...	8-00
Ramakrishna Lives Vedanta	...	8-00
Facets of Brahman or The Hindu Gods	...	5-00
Daily Divine Digest (DELUXE)	...	4-50
Daily Divine Digest (Ordinary)	...	2-50
Mahabharata (with plastic cover)	...	6-00
Ramayana (do)	...	4-00
The Man Making Message of Vivekanada (with plastic cover)	...	4-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
The Bahagaved Gita (Small Size)	...	4-00
Siva Sahasranama Stotram	...	3-50
Bheeshma The Superman	...	3-50
Hinduism Hosts Christianity	...	3-00
Holy Bible—In the Light of Vedanta	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
*Introducing the Gita	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	...	1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதைக்கு ரூ. 3-25ம் மஞ்ஜரிக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் ரூ. 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள்.

* இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

திருநெல்வேலி ஜில்லா—ஸ்ரீ வைகுண்டத்தில் 8—11—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் பிற்பகல் 12-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

திருநெல்வேலியில் 8—11—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ம. தி. தா. இந்துக் கலாசாலை மேல்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்

பல்லடம் தாலுகா—கேத்தனூரில் 14—11—81 சனிக்கிழமை

இடம்: ஸ்ரீ பெருமாள் கோவில்
நேரம்: இரவு 7-00 மணிமுதல் இரவு 9-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—உடுமலைப்பேட்டையில் 15—11—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—அம்பாசமுத்திரத்தில் 15—11—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அகஸ்தியர் கோயில்
நேரம்: காலை 9-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

தர்ம சக்கரத்திற்கு தை மாதம் முதல் அடுத்த மார்கழி மாதம் முடிய 12 மாதங்கள் ஒரு ஆண்டு என கணக்கிடப்படுகிறது. சந்தாதாரர்களின் சௌகரியத்தை முன்னிட்டு எந்த மாதம் முதல் வேண்டுமானாலும் சந்தா சேரலாம் என வழி செய்யப்பட்டுள்ளது. பங்குனியில் ஒருவர் சந்தா செலுத்தினால் அடுத்த ஆண்டு மாசி முடிய 12 இதழ்கள் அவருக்கு அனுப்பப்படுகிறது. அவரது சந்தா தீருகிற மாதம் அவரது இதழில் சந்தா தீருவதுபற்றி தெரிவித்து அடுத்த ஆண்டு சந்தா தொகையை அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுமாறு வேண்டுகோள் நோட்டீஸ் வைக்கப்படுகிறது. சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை தவறாமல் புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஆண்டுதோறும் புதுப்பிக்கிற சிரமம் இல்லாமல் இருப்பதற்காகத்தான் டிபாசிட் சந்தா முறை கொண்டுவரப்பட்டது. தர்ம சக்கரத்தை தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் படித்து பயனடைவதுடன் பலருக்கும் படிக்கத் தாருங்கள். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து அவர்களும் பயனடையச் செய்யுங்கள். இங்ஙனம் தர்ம சக்கரம் செய்யும் ஞானயக்ஞத்தை பயனுடையதாக்குமாறு சந்தாதாரர்களை வேண்டிக்கொள்கிறோம்.

Edited by SWAMI NITHYANANDA.
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.